8/86
248

# தமிழ்நாடு
## சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# செயலக வெளியீடு
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மார்ச் 26, 1985—தொகுதி 213 - எண் 1

Tuesday, March 26th, 1985—Volume 213 - No. 1

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT,
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2-75]

(248)

# பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும். | i—vi |
| தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. | vii |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல் | ix—xii |
| 1. ஒழுங்குப் பிரச்சினை — | 1—2 |
| 2. 1985-86ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை அளித்தல் ... ... | 2—45 |
| 3. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் ... | 45—46 |

143944

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU.

## THIRU SUNDAR LAL KHURANA

### Members of the Council of Ministers.

1. THE HON. Dr. M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molases, Archaeology, Prohibition excluding grant of Liquor Permits, Excise and Passports.

2. THE HON. Dr. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps and Ex-Servicemen.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. THE HON. THIRU K. A. KRISHNASWAMY, Minister for Labour, in charge of Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. THE HON. THIRU RM. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests, Cinchona and Grant of Liquor Permits.

6. THE HON. THIRU K. RAJARAM, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

8. THE HON. THIRU C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education, Official Language, Tamil Development and Culture.

9. THE HON. Dr. K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering, Agro Service Co-operative Societies, Water Supply and Drainage Boards.

10. THE HON. THIRU C. PONNAIYAN, Minister for Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

11. THE HON. Dr. H. V. HANDE, Minister for Health, in-charge of Health and Environmental Pollution Control.

12. THE HON. THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways.

13. THE HON. THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Food, in charge of Food, Price Control and Census.

14. THE HON. THIRU V. V. SWAMINATHAN, Minister for Handlooms and Textiles, in charge of Handlooms and Textiles.

15. THE HON. THIRU R. SOUNDARARAJAN, Minister for Nutritious Meals, in charge of Nutritious Meals.

16. THE HON. THIRU T. VEERASAMY, Minister for Commercial Taxes, in charge of Commercial Taxes.

17. THE HON. THIRU N. NALLUSAMY, Minister for Housing, in charge of Housing and Slum Clearance Boards, Town Planning and Accommodation Control.

18. THE HON. THIRU ANOOR P. G. JAGADEESAN, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village and Small Industries.

19. THE HON. THIRU T. RAMASAMY, Minister for Rehabiltation and Employment, in-charge of Rehabilitation, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

20. THE HON. THIRU A. ARUNACHALAM, Minister for Adi-Dravidar Welfare, in-charge of Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. THE HON. THIRU M. R. GOVENDHAN, Minister for Backward Classes, in charge of Backward Class and Fisheries.

22. THE HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children and Children Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration.

23. THE HON. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY, Minister for Khadi, in charge of Khadi, Bhoodan and Gramdhan.

24. THE HON. THIRU Y. S. M. YUSUF, Minister for Public Works, in charge of Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. THE HON. THIRU K. K. S. S. R. RAMACHANDRAN, Minister for Co-operation, in charge of Co-operation.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்

### திரு. சுந்தர் லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் இதர அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல், ஆயத்துறை, மதுவிலக்கு, மது அருந்த அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மற்றும் கடவுச்சீட்டு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, வருவாய், சட்ட மன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம் மற்றும் இரும்பு, எஃகுக் கட்டுப்பாடு, செய்திக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (தொழிலாளர் நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர் நலம், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதிச் சீட்டு வழங்கல்.

11. THE HON. Dr. H. V. HANDE, Minister for Health, in-charge of Health and Environmental Pollution Control.

12. THE HON. THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways.

13. THE HON. THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Food, in charge of Food, Price Control and Census.

14. THE HON. THIRU V. V. SWAMINATHAN, Minister for Handlooms and Textiles, in charge of Handlooms and Textiles.

15. THE HON. THIRU R. SOUNDARARAJAN, Minister for Nutritious Meals, in charge of Nutritious Meals.

16. THE HON. THIRU T. VEERASAMY, Minister for Commercial Taxes, in charge of Commercial Taxes.

17. THE HON. THIRU N. NALLUSAMY, Minister for Housing, in charge of Housing and Slum Clearance Boards, Town Planning and Accommodation Control.

18. THE HON. THIRU ANOOR P. G. JAGADEESAN, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village and Small Industries.

19. THE HON. THIRU T. RAMASAMY, Minister for Rehabiltation and Employment, in-charge of Rehabilitation, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

20. THE HON. THIRU A. ARUNACHALAM, Minister for Adi-Dravidar Welfare, in-charge of Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. THE HON. THIRU M. R. GOVENDHAN, Minister for Backward Classes, in charge of Backward Class and Fisheries.

22. THE HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children and Children Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration.

23. THE HON. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY, Minister for Khadi, in charge of Khadi, Bhoodan and Gramdhan.

24. THE HON. THIRU Y. S. M. YUSUF, Minister for Public Works, in charge of Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. THE HON. THIRU K. K. S. S. R. RAMACHANDRAN, Minister for Co-operation, in charge of Co-operation.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்

### திரு. சுந்தர் லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் இதர அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல், ஆயத்துறை, மதுவிலக்கு, மது அருந்த அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மற்றும் கடவுச்சீட்டு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, வருவாய், சட்ட மன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம் மற்றும் இரும்பு, எஃகுக் கட்டுப்பாடு, செய்திக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (தொழிலாளர் நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர் நலம், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதிச் சீட்டு வழங்கல்.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பெருந் தொழில்கள், சுரங்கமும் கனிவளமும், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சி நிர்வாகம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி மற்றும் கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை.

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

கல்வி, ஆட்சி மொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண்-பொறியியல், வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றிய சட்டம், கழகங்கள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம்.

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்கேடு தடுப்புத்துறை.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்தி சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.



14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் (கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் (சத்துணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி (வணிகவரித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி (வீட்டு வசதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியங்கள், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜகதீசன் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. டி. இராமசாமி (மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மறுவாழ்வு, வேலைவாய்ப்பும், பயிற்சியும், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் நலன்.

20. மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், இரவலர் இல்லம், அனாதை இல்லம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

கதர், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொதுப்பணித் துறை, சிறுபாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசனம் மற்றும் வக்ஃப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார்:—

கூட்டுறவு.

**தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.**

மாண்புமிகு மேலவைத் தலைவர்

**டாக்டர் ம. பொ. சிவஞானம்.**

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

**திரு. ஜி. சுவாமிநாதன்.**

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. சி. இராமலிங்கம்
2. திருமதி வி. ஜெயலட்சுமி
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
4. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்

மேலவைச் செயலாளர்

**திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.**

துணைச் செயலாளர்

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.

துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. தா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

சார்புச் செயலாளர்கள்

**திரு. செ. கு. இராமச்சந்திரன், பி.ஏ., பி.எல்.**

**திரு. இரா. சந்திரசேகரன், பி.ஏ.**

தலைமை நிருபர்

**திரு. ச. சுவாமிநாதன், எம்.ஏ.**

மேலவைத் தலைவரின் தனிச் செயலாளர்

**திரு. பி. கே. சந்திரசேகரன்.**

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1) | தொகுதி (2) |
| --- | --- |
| 1. அங்கமுத்து, திரு. பா. | நியமனம் |
| 2. அருணாசலம், திரு. க. | நியமனம் |
| 3. ஆனந்தம், திரு. வி. வி. வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 4. இராகவானந்தம், திரு. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 5. இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 6. இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 7. இராஜேந்திரன், திரு. மானாமதுரை, ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 8. கண்ணப்பன், திரு. காடுவெட்டி | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 9. கணேசன், திரு. ஆர். என்கிற பிசா ஆர். கணேசன் | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி |
| 10. கருணாநிதி, டாக்டர் மு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 11. கலைமணி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 12. கோலப்பா, திரு. சி. ஆர். | நியமனம் |
| 13. சங்கரலிங்கம், திரு. மு. செ. | திருநெல்வேலி — கன்னியாகுமரி ஆசிரியர்கள் |
| 14. சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் |
| 15. சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 16. சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு மேலவைத் தலைவர்) | நியமனம் |
| 17. சிவராமன், திரு. அ. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 18. சித்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 19. சுப்பிரமணியம், திரு. எம். பி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 20. சுப்பு, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 21. சுவாமிநாதன், திரு. ஜி. (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்) | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
| --- | --- |
| (1) | (2) |
| 22. தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் |
| 23. தாரா செரியன், திருமதி | நியமனம் |
| 24. தாஸ், திரு. ஏ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 25. பழனிவேல்ராஜன், திரு. பி. டி. ஆர். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் |
| 26. பாலாஜி, திரு. நெல்லை | நியமனம் |
| 27. மதுசூதனன், திரு. இ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 28. மயில்சாமி, திரு. அ. | சேலம்-தர்மபுரி - கோயம்புத்தூர் நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி |
| 29. மாசிலாமணி, திரு. மு. | நியமனம் |
| 30. மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 31. மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர் - திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி |
| 32. முத்துலிங்கம், கவிஞர் | நியமனம் |
| 33. முனுசாமி, திரு. பி. | நியமனம் |
| 34. யூசுப், திரு. யா. சை. மு. (பொதுப்பணித் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 35. லெட்சுமிகாந்தன், திரு. பி. ரா. | வட ஆற்காடு—தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி |
| 36. விஜயாபதி, செல்வி ஆ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் |
| 37. வெள்ளிமுத்து, திரு. ஈ. வெ. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 38. வீரப்பன், திரு. இராம. (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 39. ஜெயச்சந்திரன், திரு. எஸ். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் |
| 40. ஜெயலட்சுமி, திருமதி வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 41. ஜேப்பியார், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
| --- | --- |
| (1) | (2) |
| 42. ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் |
| 43. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 44. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 45. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்ற தொகுதி |
| 46. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்ற தொகுதி |
| 47. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 48. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 49. வெற்றிடம் | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 50. வெற்றிடம் | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 51. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 52. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 53. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்ற தொகுதி |
| 54. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 55. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 56. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 57. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்ற தொகுதி |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 22. தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் |
| 23. தாரா செரியன், திருமதி | நியமனம் |
| 24. தாஸ், திரு. ஏ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 25. பழனிவேல்ராஜன், திரு. பி. டி. ஆர். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் |
| 26. பாலாஜி, திரு. நெல்லை | நியமனம் |
| 27. மதுசூதனன், திரு. இ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 28. மயில்சாமி, திரு. அ. | சேலம்-தர்மபுரி - கோயம்புத்தூர் நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி |
| 29. மாவிலாமணி, திரு. மு. | நியமனம் |
| 30. மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 31. மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர் - திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி |
| 32. முத்துலிங்கம், கவிஞர் | நியமனம் |
| 33. முனுசாமி, திரு. பி. | நியமனம் |
| 34. யூசுப், திரு. யா. சை. மு. (பொதுப்பணித் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 35. வெங்கடமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு—தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி |
| 36. வைஜயந்தி, செல்வி ஆ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் |
| 37. வள்ளிமுத்து, திரு. ஈ. வெ. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 38. வீரப்பன், திரு. இராம. (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 39. ஜெயச்சந்திரன், திரு. எல். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் |
| 40. ஜெயலட்சுமி, திருமதி வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 41. ஜேப்பியார், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 42. ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் |
| 43. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 44. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 45. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்ற தொகுதி |
| 46. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்ற தொகுதி |
| 47. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 48. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 49. வெற்றிடம் | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 50. வெற்றிடம் | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 51. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 52. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 53. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்ற தொகுதி |
| 54. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 55. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 56. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 57. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்ற தொகுதி |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1) | தொகுதி (2) |
| --- | --- |
| 58. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்ற தொகுதி |
| 59. வெற்றிடம் | தென்னாற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 60. வெற்றிடம் | தென்னாற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 61. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 62. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட் மன்றத் தொகுதி |
| 63. வெற்றிடம் | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

(இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட சட்டமன்ற மேலவையின் அறுபத்தி ஏழாவது கூட்டத் தொடர்.)

செவ்வாய்க்கிழமை, 1985 மார்ச் 26.

(பங்குனி 13, ரக்தாக்ஷி, திருவள்ளுவராண்டு-2016.)

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் ற்பகல் 4-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 1. ஒழுங்குப் பிரச்சினை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** * * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ரு வழக்கத்தைச் சொல்ல வேண்டும். இந்த மாதிரி விஷயங்களைக் றுவதற்கு முன்பாக, முன்கூட்டியே அறைக்கு வந்து தலைவரிடம் சொல்லி ிட்டு, தலைவர் அனுமதி பெற்றுத்தான் இங்கே சொல்ல வேண்டும். லைவரையே திகைக்க வைத்துப் பேசுவது என்பது மரபல்ல.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** * * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நடவடிக்கை இருந்தால்தானே ஒழுங்குப் ரச்சினையா இல்லையா என்பது தெரியும்?

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** * * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மரபை மதித்து உறுப்பினர் சொன்னால் ான் அதை அனுமதிக்கலாம். இது மரபுக்கு மாறாக இருப்பதால், அதை ப்படி அனுமதிக்க முடியும்?

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1985 மார்ச் 26

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் இப்போதுதான் இங்கேயே வந்தேன். அதற்குள் எப்படி வந்து தங்களை அறையில் சந்தித்திருக்க முடியும் ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இரண்டாவது முறையாக இங்கே வந்துள்ள உறுப்பினருக்கே மரபு தெரியவில்லையா ?

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் அனுமதிக்க முடியாது. உறுப்பினர் அவர்கள் உட்காரவேண்டும். மாண்புமிகு நிதியமைச்சர்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** எதிரில் இருக்கிற ஒரு உறுப்பினர் என்னை உட்காரச் சொல்கிறார். தலைவர்தான் உட்காரச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் சொல்கிறேன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் என் அனுமதி இல்லாமல் சொன்ன வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசாங்கமே முன்வந்து அறிக்கை கொடுக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அரசாங்கம் கொடுக்கவில்லை. எனவே, இன்றைய நிகழ்ச்சியில் கலந்துகொள்ளாமல் வெளிநடப்பு செய்கிறோம்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா, திரு. க. மீனாட்சிசுந்தரம், திரு. ஆர். கணேசன் என்கிற மிசா ஆர். கணேசன் ஆகியோர் வெளிநடப்பு செய்தனர்.)

**2. 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை அளித்தல்.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

1984-85 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும் 1985-86 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும்† இந்த அவையின் ஒப்புதலுக்கு வைக்க விழைகிறேன். தமிழ்நாட்டில் நடைபெற்று முடிந்த

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

(† 48–101 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1985 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

எட்டாவது பொதுத் தேர்தலுக்குப்பின் கூட்டப்பட்டுள்ள இந்த அவையின் முன், இந்த நிதிநிலை அறிக்கையை வைப்பதில் பெருமகிழ்வடைகிறேன். உங்கள் நல்லாதரவைப் பெறுவதில் பெருவிழைவு கொள்கிறேன்.

பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்

என்பது வள்ளுவப் பெருந்தகையாரின் வாய்மொழி. ஒரு பொருளுமில்லாமல், ஒரு பொருளாக மதிக்கத்தகாதவராய் இருப்பவரையும், மதிக்கத் தக்கவராகச் செய்யக் கூடியது பொருளே அல்லாமல், வேறு சிறப்புடைய பொருள் எதுவும் இல்லை என்று நிதியின் இன்றியமையாச் சிறப்பினைக் கூற வந்த வள்ளுவர் பெருமான் தெளிவுபடுத்திக் காட்டுகிறார். அதற்கேற்பத்தான் தமிழக அரசு, பொதுவாக வசதிவாய்ப்பற்று விளங்கும் நாட்டினரனைவர்க்கும், குறிப்பாக ஏழ்மையிலும். வறுமையிலும் உழலும் நலிந்தோர்க்கும் நல்வாழ்வு அளிக்கும் நோக்குடன் தொடர்ந்து நற்பணிகள் பலவற்றையும் ஆற்றிவருகிறது.

2. தமிழக அரசின் நிதி நிலையை விளக்கிக் காட்டுவதற்குமுன், இந்தியப் பெருநாட்டின் நிலைமையையும், அதற்கு உள்ளடங்கிக் காணப்படும் தமிழ் நாட்டின் நிலைமையையும் உணர்த்த வேண்டியது என் கடமை என்று கருதுகிறேன். இந்தியா முழுவதையும் பாதிக்கின்ற பிரச்சினைகள் பலவும், தமிழ்நாட்டையும் பெருமளவுக்குப் பாதிப்பனவாக இருந்து வருகின்றன. பொருளாதாரப் பற்றாக்குறை, இன்றியமையாப் பொருள்களின் பற்றாக் குறை, பொதுமக்கள் அனைவரும் தாங்கித் தீரவேண்டிய வரி விதிப்புகள், கட்டுப்படுதலுக்கு உட்படாத விலைவாசிகளின் ஏற்றம், கட்டுக்கடங்காத மக்கள் பெருக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், எரிபொருள்கள், விவசாய இடுபொருள்கள்—கட்டுமானப் பொருள்கள் ஆகியவற்றின் விலை உயர்வு, இரயில்வே போக்குவரத்துக் கட்டண உயர்வு போன்றவைகள் அகில இந்தியா முழுவதிலும் எந்த அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றனவோ, அந்த அளவுக்குத் தமிழ்நாட்டையும் பாதிக்கவே செய்கின்றன. இவற்றையெல்லாம் சமாளிக்க வேண்டிய பொறுப்பும், வளர்ச்சித் திட்டங்கள், நல்வாழ்வுத் திட்டங்கள், நிவாரணப் பணிகள், ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே கிடந்து உழல்பவர்களுக்கு உதவி செய்து அவர்களை உயர்த்திவிடும் செயல்கள் போன்றவற்றை நிறைவேற்றி வைக்க வேண்டிய பொறுப்பும் மாநில அரசின் கடமைகளாக அமைந்திருக்கின்றன. மக்களோடு நேரடித் தொடர்பு கொண்டு, அவர்களுக்கு எல்லா வகைகளிலும் நல்வாழ்வு அளிக்க வேண்டிய பெரும் பொறுப்புக்கள் மாநில அரசிடம் அமைந்திருந்தபோதிலும், அந்தப்

பொறுப்புக்களைச் சிறப்பாகவும், செம்மையாகவும்; ஊக்கத்தோடும் உறுதியோடும், நிறைவேற்றுவதற்கான பொருளாதார வசதிகளும், அவற்றைப் பெறுவதற்கான வாய்ப்புக் கூறுகளும், அதற்கான அதிகார அளவுகளும், உரிமை நிலைகளும் மிக மிகக் குறைவாகவே மாநில அரசிடம் அமைந்திருக்கின்றன. வாழ்க்கைக்குத் தேவைப்படும் இன்றியமையாத வசதிகளையும், வாய்ப்புகளையும் எல்லாத் துறைகளிலும் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணங்கள் எல்லோரிடத்திலும் பரவலாக விரிவடைந்து நிற்கின்றன.

3. இன்றைய இந்தியக் கூட்டாட்சி அமைப்பு முறையில், மாநிலங்களின் அதிகாரங்களும், உரிமைகளும், நிதி ஆதாரங்களும் மிகவும் கட்டுப்படுத்தப் பட்டிருப்பதால், மாநில அரசுகள் மத்திய அரசின் உதவிகளைப் பெருமளவிற்கு அவ்வப்போது எதிர்பார்க்க வேண்டிய அவசிய நிலை ஏற்படுகிறது. எனவே தான், மாநிலங்கள் தாங்கள் வருவாய் ஈட்டும் வழிகளையும், வளங்களையும் பெறும் வகைகளையும் பெருக்கிக் கொள்ளும் சூழ்நிலைகளை அடைய தேவையான தன்னாட்சி உரிமைகளும், அதிகாரங்களும், நிதிப் பங்கீடுகளும் மாநிலங்களுக்கு விரைவில் அளிக்கப்பட வேண்டும் என்பதை அடிக்கடி வலியுறுத்தி வருகிறோம். இந்தியாவின் உண்மையான—வலிவான கூட்டாட்சி அமைப்புக்கு ஊறு நேரிடாமல் இந்தியாவின் ஒருமைப்பாட்டுத் தன்மைக்கு உடன்பட்டதான மாநிலத் தன்னாட்சி அமைப்புகள் ஏற்பட வேண்டும் என்ற கொள்கையைத்தான் இந்த அரசு அடிக்கடி வலியுறுத்தி வருகிறது.

4. அரசமைப்புத் தத்துவப் பேராசிரியரான வியர் அவர்கள், "மத்திய அரசும், மற்ற மாநில அரசுகள் ஒவ்வொன்றும் தனது சொந்தப் பொறுப்பின் கீழ்த் தனிப்பட்ட அலுவல்களை ஏற்று நிறைவேற்றுவதற்குப் போதிய நிதி வாயில்களைக் கொண்டிருத்தல் வேண்டும்" என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

5. கூட்டாட்சி—மாநிலத் தன்னாட்சித் தன்மைகளைத் தெளிவுபடுத்திய, பேரறிஞர் அண்ணா அவர்கள், "மாநிலங்கள் நகராட்சி மன்றங்களைப்போல் ஆண்டுக்கு ஆண்டு விரைந்து மாற்றப்பட்டு வருகின்றன. மாநிலங்கள் இருக்கும் இடம் தெரியாமல் ஆதிக்கம், அதிகாரம், நிதி ஆதாரம் ஆகியவற்றில் பின்னணிக்கு தள்ளப்பட்டு வருகின்றன. மாநிலத் தன்னாட்சி முறைக்குத் தேவைப்படுகின்ற அதிகாரங்கள் அனைத்தும் தரப்பட வேண்டும் என்ற இயற்கை உணர்வுகள் மாநிலங்களிடையே தோன்றியுள்ளன. நமது அரசமைப்புச் சட்டம் மெய்யான கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும். இந்தியாவில் உண்மையான கூட்டாட்சி மலர்வதற்கு வழிவகைகள் விரைவில் முழுமையாகச் செய்திடல் வேண்டும்" என்று சுட்டிக் காட்டியுள்ளார்கள்.





6. உடலுறுப்புகள் நலமாகவும், வலிவாகவும் இருந்தால்தான், உடல் முழு நலத்தோடு திகழும். அதுபோல மாநிலங்கள் நிருவாகப் பொறுப்புக்களைச் சீராகவும், சிறப்பாகவும் நிறைவேற்றுவதற்கு ஏற்ற வகையில் நிதிவாயில்கள் அவற்றிடம் இருந்தால்தான் இந்தியா வலிவோடும், பொலிவோடும் விளங்க முடியும். இந்த எண்ணங்களையெல்லாம் நிறைவுபடுத்தத்தான் இந்திய அரசமைப்புச் சட்டம் ஏற்றமுறையில் திருத்தப்பட வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

7. 1985-86 ஆம் ஆண்டில் நாட்டில் பொருளாதார வளத்தைப் பெருக்கி உற்பத்தி அளவுகளை உயர்த்தி வாழ்க்கைத் தரத்தைச் சீர்படுத்தும் நிலை உருவாகும் என நாம் திண்ணமாக நம்புகிறோம். அடுத்தடுத்து இரண்டாண்டு களாக வறட்சி நிலை ஏற்பட்டு தமிழ்நாடு கடுமையாகப் பாதிக்கப்பட்டாலும், 1984-85 ஆம் ஆண்டில் பருவநிலை மாறி, வேளாண்மையும், ஏனைய பணிகளும் வளம் பெறும் நிலைமை உருவாகி வேளாண்மை உற்பத்தியிலும் தொழில் வளத்திலும் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இப் பேரவையின் நல்லாதரவுடன் தமிழ்நாட்டில் வருங்காலத்தில் வளமும் நலமும் நல்ல முறையில் பெருக வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## திட்டமிடலும் வளர்ச்சியும்.

8. நடப்பாண்டு, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டாகும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட கால அளவில் இம் மாநிலம் எய்திய சாதனைகள் மனநிறைவு அளிக்கத் தக்கனவாக அமைந்துள்ளன. திட்டப் பணிகளுக்காக முதலில் ரூ. 3,150 கோடி ஒப்புதல் அளித்திருந்தாலும் முடிவாகச் சுமார் ரூ. 3,600 கோடி செலவிட நேரிடலாம். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வறுமையை ஒழிப்பதற்கும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை முழுமூச்சாகச் செயற்படுத்துவதற்கும் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முந்தைய திட்டங்களின் முழுப் பயன் கிட்டும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். வளர்ச்சிப் பணியை முழுமூச்சாகச் செயற்படுத்தவும் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இம்மாநிலத்தின் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ரூ. 7,000 கோடி மொத்தமாகச் செலவிடக்கூடிய திட்டமொன்றை அரசு வகுத்தது. எனினும் மத்திய திட்டக் குழுவுடன்

இம் மாநிலம் இதுபற்றிக் கொண்டுள்ள விவாதங்கள் இன்னும் முடியவில்லை. எனவே, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் முழு அளவில் உருப்பெறுவதற்கு இன்னும் சிறிது காலம் ஆகக்கூடும்.

9. திட்டப் பணிகளுக்காக ரூ. 927 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்க, 1984-85 ஆம் ஆண்டுத் திட்டத்திற்காக ரூ. 975 கோடி செலவு ஏற்படலாம் என்று தெரிய வருகிறது. அதாவது ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்கும் கூடுதலாக ரூ. 48 கோடி செலவு ஏற்படும். 1985-86 ஆம் ஆண்டுத் திட்டம் ரூ. 1,002.61 கோடி அளவிற்கு தயாரிக்கப்பட்டிருக்க, 1985-86 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1,102 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. திட்டச் செலவு குறித்து மத்திய திட்டக் குழுவுடன் இறுதியான விவாதம் இன்னும் முடிவடையவில்லையென்பதையும் மத்திய திட்டக்குழு ஒப்புதல் அளிக்கும் தொகைக்கேற்ப இம் மாநிலத்தின் மொத்தத் திட்டச் செலவை மாற்றியமைக்க வேண்டியிருக்கும் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது. மத்திய திட்டக் குழுவுடன் இறுதி விவாதங்கள் முடிந்த பிறகு எடுக்கும் முடிவுகளையொட்டி வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கலாம்.

10. திட்டப் பணிகளை நிறைவேற்றுவதில், தமிழகத்தின் சாதனைகள், எப்பொழுதுமே அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளன. எட்டாவது நிதிக் குழு வகுத்த செயற்பாட்டுமுறை தமிழகத்திற்கு நியாயம் வழங்காத காரணத்தினால், இம் மாநிலத்தின் நிதி நிலை மிகவும் இடர்ப்பாடான தன்மைக்கு உள்ளாகக்கூடும். தொடர்ந்து பெருகிவரும் திட்டச் செலவுகளை இந்தப் பின்னணியில் பார்க்க வேண்டும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முதல் ஆண்டாகிய 1985-86 ஆம் ஆண்டுத் திட்டத்தின் தலையாய நோக்கம், முந்தைய திட்டப் பணிகளை நன்கு சீரமைத்து, அவற்றின் பயன்களைச் செவ்விய முறையில் பெறுவதற்கு முனைந்து செயற்பட வேண்டியதாகும். உணவு உற்பத்தி, வேலைவாய்ப்பு, உற்பத்தித் திறன் ஆகியவற்றில் முன்னேற்றம் காண்பதற்குத் தேசிய வளர்ச்சிக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள ஏழாவது திட்டத்தில், அடிப்படை முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டாகிய 1985-86 ஆம் ஆண்டுத் திட்டத்தில் இவையே முக்கியமான கோட்பாடுகளாக அமையும். எஞ்சிய திட்டங்களை நிறைவேற்றவும், புதிய திட்டங்களைத் தொடங்கவும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. பொருளாதார வளம் பெருமளவிற்கு முன்னேற மின்சக்தி போன்ற முக்கியத் துறைகளுக்கு



அதிக அளவு நிதி ஒதுக்கம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மக்கள் தொகையில் கணிசமான பகுதியினரை ஏழ்மைக் கோட்டிற்கு மேலே கொண்டு வரும் நோக்கத்துடன் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு, அதிக அளவுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது.

11. இருபது அம்சத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற தமிழ்நாடு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது. இருபது அம்சத் திட்டங்களை நிறைவேற்றும் பணியில் தமிழ்நாடு தலைசிறந்த சாதனையை எய்தியுள்ளதென்று 1982-83 ஆம் ஆண்டிலேயே அறிவிக்கப்பட்டது. முந்தைய ஆண்டுகளில் வரலாறு காணாத கடும் வறட்சி நிலவிய போதிலும், 1983-84 ஆம் ஆண்டிலும், இம் மாநிலத்தில் 20 அம்சத் திட்டங்களை 80 முதல் 90 வரையிலான விழுக்காடு நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நடப்பாண்டிலும் அனைத்திந்திய நிலையில், 20 அம்சத் திட்டங்களை நிறைவேற்றும் பணியில், தமிழகம் முதலிடம் பெற, நிருவாக அமைப்பு முடுக்கிவிடப்பட்டுள்ளது. உணவு தானிய உற்பத்தி, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, கிராம வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்டம், கிராம வேலை வாய்ப்பு தேசிய திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம், உபரி நிலங்களை நிலமற்றோருக்கு வழங்குதல், கொத்தடிமை ஒழிப்பு, ஆதிதிராவிடர்கள், பழங்குடி மக்கள் நலன், குடிநீர் வழங்கல், வீட்டு மனைகள் வழங்கல், குடிசைவாழ் மக்களுக்கு வசதிகள் செய்து கொடுத்தல், பொருளாதார நிலையில் நலிந்தோருக்கு வீட்டு வசதி அளித்தல், விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுத்தல், மரங்கள் நடுதல், கரிம வாயு உற்பத்தி மையங்களை உருவாக்குதல், கருத்தடை, தொடக்கச் சுகாதார நிலையங்கள், துணை நிலையங்கள் ஏற்படுத்தல், 6-14 வயது தொகுதியில் உள்ள சிறார்களுக்கு கல்வி வசதி அளித்தல், முதியோர் கல்வி, சிறு தொழில்கள் தொடங்குதல் போன்ற திட்டங்களில் 1985 ஜனவரி முடிய, தமிழ்நாடு 75 விழுக்காட்டிற்கும் மேல் வெற்றி கண்டுள்ளது என்பது பெருமிதத்திற்குரியதாகும்.

12. தமிழ் நாட்டில், புதிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வாயில்களை மேம்படுத்தவும், அதுகுறித்து பிரச்சாரம் செய்யவும், அரசு அண்மையில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. 1985-86 ஆம் ஆண்டிற்கு தொழில்களுக்குத் தேவைப்படக்கூடிய வெப்பச் சக்தியைப் பெற, சூரிய சக்தியைப் பயன்படுத்தலாம் என்பதைப் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் சூரிய வெப்ப சக்தி பயன்பாட்டு நடவடிக்கைகளுக்கு ரூ. 95 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எரிசக்திவாயில்கள் குறித்த பழைய, புதிய முறைகளைக் கலந்து அதன்மூலம் கிராமப் பகுதிகளில் தேவைப்படும் எரிசக்தித் தேவைகளை ஈடு செய்வதை நோக்கமாகக் கொண்ட கிராமப்புற எரிசக்தி ஒருங்கிணைந்த திட்டம், தற்போது தெரிந்தெடுக்கப்பட்ட ஐந்து வளர்ச்சி வட்டாரங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ. 12.5 இலட்சம் நிதிஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுவரும் ஐந்து வட்டாரங்களில் இத் திட்டத்தைத் தீவிரப் படுத்தவும் மேலும் 12 வளர்ச்சி வட்டாரங்களுக்கு இத் திட்டத்தை நீட்டிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## மறுவாழ்வுத் திட்டங்கள்.

13. இலங்கையில் இனக் கலவரம் ஏற்பட்டுள்ளது குறித்து அரசு மிகுந்த கவலையும், துயரமும் கொண்டுள்ளது. 5—2—1985 முதல் இலங்கையிலிருந்து அதிக அளவில் அகதிகள் வந்துள்ளனர். இவர்களுக்கு மண்டபம், தோட்டபட்டு மற்றும் பல்வேறு இடங்களில் உள்ள இடைத் தங்கல் முகாம்களில் இடவசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் வந்தவுடன் பணஉதவி, உணவு, மலிவு விலையில் அரிசி, உடைகள், சமையல் பாத்திரங்கள், தங்குமிடம் ஆகியவை அளிக்கப்படுகின்றன. மத்திய அரசு தலையிட்டு இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நிறுத்த முன்வரும் என்று மாநில அரசு நம்புகிறது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு அனைத்து வசதிகளைச் செய்து கொடுக்கும் வகையில் அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் அரசு எடுத்து வருகிறது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு 1977 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை அரசு ரூ. 40 கோடிக்கு மேல் கடனாகவும் மானியமாகவும் வழங்கியுள்ளது. நடப்பு ஆண்டில் மட்டுமே, 10—3—1985 வரை இலங்கை அகதிகளுக்கு ரூ. 66 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை வாழ் தமிழர்களின் பிரச்சினைக்கு விரைவில் நன்முறையில் தீர்வு காண மாநில அரசு, மத்திய அரசை வற்புறுத்துவதன் மூலம் இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்து வருகிறது.

## வேளாண்மை.

14. வேளாண்மை நம் பொருளாதாரத்தின் அடித்தளமாகத் தொடர்ந்து திகழ்கிறது. 1984-85 ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை போதுமான அளவு பெய்த போதிலும், வடகிழக்குப் பருவ மழை போதிய அளவில்





இல்லை. எனினும், பல இடர்ப்பாடுகளும், பாதகமான சூழ்நிலைகளும் இருந்த போதிலும், வேளாண்மை உற்பத்தியில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டில் எதிர்பார்க்கப்படுகின்ற அரிசி உற்பத்தி 60 இலட்சம் மெட்ரிக் டன், சிறு தானியங்கள் 20 இலட்சம் மெட்ரிக் டன், பயிறு வகைகள் 4 இலட்சம் மெட்ரிக் டன், கரும்பு 25 இலட்சம் மெட்ரிக் டன் ஆகவும் இருக்கும். 1984-85-ல் கொண்டு வரப்பட்ட, ஒரு எக்டேருக்கு 5 டன் உற்பத்தி செய்யும் திட்டத்தின்கீழ் அடைந்த சாதனை ஊக்கமளிப்பதாக உள்ளது. இம் மாநிலத்தின் பல பாகங்களில் குறுவைப் பருவத்தின்போது ஒரு எக்டேருக்கு 5 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

15. மண், நீர்வளப் பாதுகாப்பு, பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், நிலத்தைச் சமப்படுத்தல் முதலியவற்றைச் செயற்படுத்துவதன் மூலம், வேளாண்மை உற்பத்தியை மேம்படுத்துவதில், வேளாண்மைப் பொறியியல் முக்கிய பங்கு வகிக்கிறது. வேளாண்மைப் பொறியியல் துறை, 1985-86 ஆம் ஆண்டில், 7,000 எக்டேர் நிலத்தைச் சமப்படுத்தவும், 18,800 எக்டேர் நிலத்தில் இயந்திர சாதனங்கள் உதவியுடன் பயிரிடவும், 4,850 குழாய்க் கிணறுகளையும், 2,920 வடிமுனைக் குழாய்க் கிணறுகளைத் தோண்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. மண்வளப் பாதுகாப்புத் திட்டம், ஆற்றுப் பள்ளத் தாக்குத் திட்டம், மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் 57,850 எக்டேர் நிலங்களில் நீர், மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். பண்ணைப் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் காவிரி, பெரியாறு, வைகை, கீழ் பவானி, சாத்தனூர் பாசனப்பகுதிகளில் 38,000 எக்டேர் நிலத்தில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். கிராமப் புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின்கீழ் கசிவு நீர்க் குட்டைகள் கட்டும் பணி 1985-86 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயற்படுத்தப் படும். ரூ. 10 கோடி செலவில் 500 தடை அணைகள், 1,000 கசிவு நீர்க் குட்டைகள் கட்டப்படும்.

16. எண்ணெய் வித்துக்களைப் பெருக்கவும் தென்னை பயிரிடப்படும் பகுதியை அதிகரிக்கவும் மாநில அரசு இடைவிடாது கவனம் செலுத்தி வருகிறது. 1984-85 ஆம் ஆண்டில், 13.86 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிக விளைச்சல் தரும் வேர்க்கடலை வித்துக்களைப் பயன்படுத்தி வேர்க்கடலை பயிரிடப்படும் பரப்பளவை அதிகரிக்க அரசு இடையறாது முயற்சி செய்து வருகிறது. இதேபோல, 1984-85 ஆம் ஆண்டில், தென்னை பயிரிடப்படும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 26

எரிசக்திவாயில்கள் குறித்த பழைய, புதிய முறைகளைக் கலந்து அதன்மூலம் கிராமப் பகுதிகளில் தேவைப்படும் எரிசக்தித் தேவைகளை ஈடு செய்வதை நோக்கமாகக் கொண்ட கிராமப்புற எரிசக்தி ஒருங்கிணைந்த திட்டம், தற்போது தெரிந்தெடுக்கப்பட்ட ஐந்து வளர்ச்சி வட்டாரங்களில் செயற் படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ. 12.5 இலட்சம் நிதிஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுவரும் ஐந்து வட்டாரங்களில் இத் திட்டத்தைத் தீவிரப் படுத்தவும் மேலும் 12 வளர்ச்சி வட்டாரங்களுக்கு இத் திட்டத்தை நீட்டிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## மறுவாழ்வுத் திட்டங்கள்.

13. இலங்கையில் இனக் கலவரம் ஏற்பட்டுள்ளது குறித்து அரசு மிகுந்த கவலையும், துயரமும் கொண்டுள்ளது. 5—2—1985 முதல் இலங்கையிலிருந்து அதிக அளவில் அகதிகள் வந்துள்ளனர். இவர்களுக்கு மண்டபம், தோட்டபட்டு மற்றும் பல்வேறு இடங்களில் உள்ள இடைத் தங்கல் முகாம்களில் இடவசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் வந்தவுடன் பணஉதவி, உணவு, மலிவு விலையில் அரிசி, உடைகள், சமையல் பாத்திரங்கள், தங்குமிடம் ஆகியவை அளிக்கப்படுகின்றன. மத்திய அரசு தலையிட்டு இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நிறுத்த முன்வரும் என்று மாநில அரசு நம்புகிறது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு அனைத்து வசதிகளைச் செய்து கொடுக்கும் வகையில் அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் அரசு எடுத்து வருகிறது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு 1977 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை அரசு ரூ. 40 கோடிக்கு மேல் கடனாகவும் மானியமாகவும் வழங்கியுள்ளது. நடப்பு ஆண்டில் மட்டுமே, 10—3—1985 வரை இலங்கை அகதிகளுக்கு ரூ. 66 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை வாழ் தமிழர் களின் பிரச்சினைக்கு விரைவில் நன்முறையில் தீர்வு காண மாநில அரசு, மத்திய அரசை வற்புறுத்துவதன் மூலம் இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்து வருகிறது.

## வேளாண்மை.

14. வேளாண்மை நம் பொருளாதாரத்தின் அடித்தளமாகத் தொடர்ந்து திகழ்கிறது. 1984-85 ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை போதுமான அளவு பெய்த போதிலும், வடகிழக்குப் பருவ மழை போதிய அளவில்



1985 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இல்லை. எனினும், பல இடர்ப்பாடுகளும், பாதகமான சூழ்நிலைகளும் இருந்த போதிலும், வேளாண்மை உற்பத்தியில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டில் எதிர்பார்க்கப்படுகின்ற அரிசி உற்பத்தி 60 இலட்சம் மெட்ரிக் டன், சிறு தானியங்கள் 20 இலட்சம் மெட்ரிக் டன், பயிறு வகைகள் 4 இலட்சம் மெட்ரிக் டன், கரும்பு 25 இலட்சம் மெட்ரிக் டன் ஆகவும் இருக்கும். 1984-85-ல் கொண்டு வரப்பட்ட, ஒரு எக்டேருக்கு 5 டன் உற்பத்தி செய்யும் திட்டத்தின்கீழ் அடைந்த சாதனை ஊக்கமளிப்பதாக உள்ளது. இம் மாநிலத்தின் பல பாகங்களில் குறுவைப் பருவத்தின்போது ஒரு எக்டேருக்கு 5 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

15. மண், நீர்வளப் பாதுகாப்பு, பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், நிலத்தைச் சமப்படுத்தல் முதலியவற்றைச் செயற்படுத்துவதன் மூலம், வேளாண்மை உற்பத்தியை மேம்படுத்துவதில், வேளாண்மைப் பொறியியல் முக்கிய பங்கு வகிக்கிறது. வேளாண்மைப் பொறியியல் துறை, 1985-86 ஆம் ஆண்டில், 7,000 எக்டேர் நிலத்தைச் சமப்படுத்தவும், 18,800 எக்டேர் நிலத்தில் இயந்திர சாதனங்கள் உதவியுடன் பயிரிடவும், 4,850 குழாய்க் கிணறுகளையும், 2,920 வடிமுனைக் குழாய்க் கிணறுகளைத் தோண்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. மண்வளப் பாதுகாப்புத் திட்டம், ஆற்றுப் பள்ளத் தாக்குத் திட்டம், மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் 57,850 எக்டேர் நிலங்களில் நீர், மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற் கொள்ளப்படும். பண்ணைப் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் காவிரி, பெரியாறு, வைகை, கீழ் பவானி, சாத்தனூர் பாசனப்பகுதிகளில் 38,000 எக்டேர் நிலத்தில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். கிராமப் புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின்கீழ் கசிவு நீர்க் குட்டைகள் கட்டும் பணி 1985-86 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயற்படுத்தப் படும். ரூ. 10 கோடி செலவில் 500 தடை அணைகள், 1,000 கசிவு நீர்க் குட்டைகள் கட்டப்படும்.

16. எண்ணெய் வித்துக்களைப் பெருக்கவும் தென்னை பயிரிடப்படும் பகுதியை அதிகரிக்கவும் மாநில அரசு இடைவிடாது கவனம் செலுத்தி வரு கிறது. 1984-85 ஆம் ஆண்டில், 13.86 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நிறை வழங்கும் வேர்க்கடலை வித்துக்களைப் பயன்படுத்தி வேர்க்கடலை பயிரிடப்படும் பரப்பளவை அதிகரிக்க அரசு இடையறாது முயற்சி செய்து வருகிறது. இதேபோல, 1984-85 ஆம் ஆண்டில், தென்னை பயிரிடப்படும்

பரப்பளவையும் அதிகரிக்க பெருமுயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி, 1984-85 ஆம் ஆண்டில், சுமார் 36 இலட்சம் தென்னங் கன்றுகளை உற்பத்தி செய்து வழங்கியது. தென்னை மேம்பாட்டு வாரியத்தின் உதவியுடன் நெய்வேலியில் 140 எக்டேர் பரப்பளவில் தரமான தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்ய, தாய் மரப்பண்ணை ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டன்குளத்தில் நெட்டை மற்றும் குட்டை தென்னம்பிள்ளை நாற்றுப்பண்ணை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதேபோல, 1985-86 ஆம் ஆண்டில், மொத்தம் ரூ. 5.43 இலட்சம் செலவில் எண்ணெய் வித்துக்களுக்காக மூல விதைப் பண்ணை ஒன்றை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

17. ரூ. 1,02.44 கோடி செலவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை வலுப்படுத்துவதற்கான திட்டம், உலக வங்கியின் மதிப்பீட்டிற்காக அனுப்பப் பட்டுள்ளது. உலக வங்கியிடமிருந்தும், மத்திய அரசிடமிருந்தும் இசைவு பெற்ற பிறகு, இத் திட்டம் 1985-86 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

18. கால்நடைகள் தமிழ்நாட்டு உழவர்களின் முக்கியமான சொத்தாகும். ஏனெனில் அவை, வேளாண்மைக்கு அரும்பணி ஆற்றுவதுடன் மக்களுக்குத் தேவையான புரதச்சத்து நிறைந்த பால், இறைச்சி ஆகியவற்றையும் அளிக்கின்றன. கால்நடைச் செல்வத்தைப் பெருக்குவதற்கு மேற்கொண்டுள்ள முயற்சிகள் பெரும்பாலும் முக்கியமாக மாடுகள், செம்மறியாடு, பன்றி, கோழி ஆகிய இனங்களைப் பெருக்குவதை நோக்கமாக கொண்டவையாகும். பால் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் உள்ள 125 துணை நிலையங்களில், உறைவிந்து தொழில்நுட்ப முறை மூலம் செயற்கை முறைக் கருத்தரிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்று ரூ. 15.26 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில், ரூ. 13.00 இலட்சம் செலவில் மேலும் 100 நிலையங்களுக்கு இந்தத் தொழில்நுட்ப முறையை நீட்டிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 19.7 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், 10 கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்துவதற்கான திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் ரூ. 27 இலட்சம் செலவில் மேலும் ஒரு தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டத்தைத் தொடங்க, அனுமதி அளிப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது.



19. வேளாண்மை உற்பத்திக்காகத் தொடர்ந்து ஆராய்ச்சி செய்யவும், சிறந்த தொழில்நுட்ப முறைகளை மக்களிடையே பரப்பவும் 1984-85 ஆம் ஆண்டில் மேலும் ஒரு வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்த அனுமதி வழங்கப் பட்டு, தொடக்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

20. தமிழ்நாட்டில், கால்நடை மருத்துவத் தொழில் நுட்பத்தைப் பெருக்கவும் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்ளவும், கால்நடை மருத்துவக் கல்வி கற்பிக்கவும் கால்நடைத் தொழில் நுட்ப வல்லுநர்களின் தேவை பெருகி வருவதைக் கருத்தில் கொண்டு, மற்றொரு கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டுமென்பதை அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. அதன்படி, சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், லத்திவாடியில் 1985-86 ஆம் கல்வி ஆண்டில் இரண்டாவது கால்நடை மருத்துவக் கல்லூரியைத் தொடங்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

21. பால்பெருக்குத் திட்டம்—2, தமிழ்நாட்டில் இப்போது ஒன்பது மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் ரூ. 13.83 கோடி மதிப்பீட்டுச் செலவில் நீட்டிக்கக் கருதப்பட்டுள்ளது. இது 1—4—1985 முதல் ஐந்தாண்டுக்கால அளவில் செயற்படுத்தப்படும். ஒரு நாளைக்கு 10,000 லிட்டர் பாலை குளிர வைக்கக் கூடிய திறன் கொண்ட ஒரு புதிய நிலையம் தஞ்சாவூர் மாவட்டத்தில், மயிலாடுதுறையில் ரூ. 19 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் தொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத் திட்டம் 1985 டிசம்பர் இறுதியில் முடிக்கப்பட்டுவிடும். 1985-86 ஆம் ஆண்டில் செயலிழந்துள்ள சங்கங்களைப் புதுப்பித்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்ற ரூ. 4.24 இலட்சம் வழங்க அரசு உத்தேசித் துள்ளது.

## உணவு—நுகர்வோர் பாதுகாப்பு

22. பொதுப் பங்கீட்டு முறையை மேம்படுத்துவதற்கு அரசு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. அதன்படி 1,000-க்கும் மேலான குடும்ப அட்டைகளுக்கு உணவுப் பொருள் வழங்கும் கடைகளை இரண்டாகப் பிரிப்ப தென்று அரசு முடிவு செய்துள்ளது. இதனால் 2,714 கடைகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. இதனால், பொதுப் பங்கீட்டு முறை செம்மையாகச் செயற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வழங்கப்படும் அரிசியின் உயரளவு 20 கிலோகிராமாக அதிகரிக்கப்பட்டதால், நியாய விலைக் கடை களில் அரிசிப் பங்கீடு ஒவ்வொரு மாதமும் 50,000 மெட்ரிக் டன்னிலிருந்து

பரப்பளவையும் அதிகரிக்க பெருமுயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி 1984-85 ஆம் ஆண்டில், சுமார் 36 இலட்சம் தென்னங் கன்றுகளை உற்பத்தி செய்து வழங்கியது. தென்னை மேம்பாட்டு வாரியத்தின் உதவியுடன் நெய்வேலியில் 140 எக்டேர் பரப்பளவில் தரமான தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்ய, தாய் மரப்பண்ணை ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டன்குளத்தில் நெட்டை மற்றும் குட்டை தென்னம்பிள்ளை நாற்றுப்பண்ணை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதேபோல, 1985-86 ஆம் ஆண்டில், மொத்தம் ரூ. 5.43 இலட்சம் செலவில் எண்ணெய் வித்துக்களுக்காக மூல விதைப் பண்ணை ஒன்றை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

17. ரூ. 1,02.44 கோடி செலவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை வலுப்படுத்துவதற்கான திட்டம், உலக வங்கியின் மதிப்பீட்டிற்காக அனுப்பப்பட்டுள்ளது. உலக வங்கியிடமிருந்தும், மத்திய அரசிடமிருந்தும் இசைவு பெற்ற பிறகு, இத் திட்டம் 1985-86 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

18. கால்நடைகள் தமிழ்நாட்டு உழவர்களின் முக்கியமான சொத்தாகும். எனெனில் அவை, வேளாண்மைக்கு அரும்பணி ஆற்றுவதுடன் மக்களுக்குத் தேவையான புரதச்சத்து நிறைந்த பால், இறைச்சி ஆகியவற்றையும் அளிக்கின்றன. கால்நடைச் செல்வத்தைப் பெருக்குவதற்கு மேற்கொண்டுள்ள முயற்சிகள் பெரும்பாலும் முக்கியமாக மாடுகள், செம்மறியாடு, பன்றி, கோழி ஆகிய இனங்களைப் பெருக்குவதை நோக்கமாக கொண்டவையாகும். பால் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் உள்ள 125 துணை நிலையங்களில், உறைவிந்து தொழில்நுட்ப முறை மூலம் செயற்கை முறைக் கருத்தரிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்று ரூ. 15.26 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில், ரூ. 13.00 இலட்சம் செலவில் மேலும் 100 நிலையங்களுக்கு இந்தத் தொழில்நுட்ப முறையை நீட்டிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 19.7 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், 10 கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்துவதற்கான திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் ரூ. 27 இலட்சம் செலவில் மேலும் ஒரு தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டத்தைத் தொடங்க, அனுமதி அளிப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது.





19. வேளாண்மை உற்பத்திக்காகத் தொடர்ந்து ஆராய்ச்சி செய்யவும், சிறந்த தொழில்நுட்ப முறைகளை மக்களிடையே பரப்பவும் 1984-85 ஆம் ஆண்டில் மேலும் ஒரு வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டு, தொடக்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

20. தமிழ்நாட்டில், கால்நடை மருத்துவத் தொழில் நுட்பத்தைப் பெருக்கவும் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்ளவும், கால்நடை மருத்துவக் கல்வி கற்பிக்கவும் கால்நடைத் தொழில் நுட்ப வல்லுநர்களின் தேவை பெருகி வருவதைக் கருத்தில் கொண்டு, மற்றொரு கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டுமென்பதை அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. அதன்படி, சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், லத்திவாடியில் 1985-86 ஆம் கல்வி ஆண்டில் இரண்டாவது கால்நடை மருத்துவக் கல்லூரியைத் தொடங்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

21. பால்பெருக்குத் திட்டம்—2, தமிழ்நாட்டில் இப்போது ஒன்பது மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் ரூ. 13.83 கோடி மதிப்பீட்டுச் செலவில் நீட்டிக்கக் கருதப்பட்டுள்ளது. இது 1—4—1985 முதல் ஐந்தாண்டுக்கால அளவில் செயற்படுத்தப்படும். ஒரு நாளைக்கு 10,000 லிட்டர் பாலை குளிர வைக்கக் கூடிய திறன் கொண்ட ஒரு புதிய நிலையம் தஞ்சாவூர் மாவட்டத்தில், மயிலாடுதுறையில் ரூ. 19 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் தொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத் திட்டம் 1985 டிசம்பர் இறுதியில் முடிக்கப்பட்டுவிடும். 1985-86 ஆம் ஆண்டில் செயலிழந்துள்ள சங்கங்களைப் புதுப்பித்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்ற ரூ. 4.24 இலட்சம் வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

### உணவு—நுகர்வோர் பாதுகாப்பு

22. பொதுப் பங்கீட்டு முறையை மேம்படுத்துவதற்கு அரசு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. அதன்படி 1,000-க்கும் மேலான குடும்ப அட்டைகளுக்கு உணவுப் பொருள் வழங்கும் கடைகளை இரண்டாகப் பிரிப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது. இதனால் 2,714 கடைகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. இதனால், பொதுப் பங்கீட்டு முறை செம்மையாகச் செயற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வழங்கப்படும் அரிசியின் உயாளவு 20 கிலோகிராமாக அதிகரிக்கப்பட்டதால், நியாய விலைக் கடைகளில் அரிசிப் பங்கீடு ஒவ்வொரு மாதமும் 50,000 மெட்ரிக் டன்னிலிருந்து

80,000 மெட்ரிக் டன்னாக அதிகரிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி அதிகமாக இருப்பதால், அரசு இதுவரை எவ்விதப் பிரச்சினையுமில்லாமல் இத்தேவை களை நிறைவேற்ற முடிகிறது. பொதுப் பங்கீட்டு முறையில், ஒரு கிலோ கிராம் ரூ. 1.75 என்ற மலிவு விலையில் மக்களுக்கு அரிசி விற்கப்படவேண்டு என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் இதற்கான நிருவாகச் செலவு ரூ. 9 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

23. அரிசி ஆலைகளை நவீனமயமாக்குவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 11.25 இலட்சம் செலவில் தமிழ்நாட்டில் அரவை இயந்திர உதவித் தொகைத் திட்டத்தைச் செயற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெய் வகைகளைப் பாதுகாப்பாக வைப்பதற்காக அடுத்த ஆண்டில் தூத்துக்குடியில் ரூ. 15 இலட்சம் செலவில் கிடங்கு கட்டக் கருதப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலையான நேரடிக் கொள்முதல் கிடங்கைப் படிப்படியாகக் கட்டுவதற்கு அரசு திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது.

## தொழில்கள்.

24. பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்துள்ள தொழில் வளர்ச்சியில் அரசு ஆழ்ந்த கவனம் செலுத்தி வருகிறது.

25. கூட்டுத் துறையில் ரூ. 108 கோடி திட்டச் செலவில் ஆண்டொன்றுக்கு 50,000 டன் லைனியர் ஆல்கைல் பென்ஜீன் தயாரிப்பதற்கான பெருந் திட்டத்தை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இதனால் 300 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். 1985-86 ஆம் ஆண்டில் வணிக முறையில் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர்பார்க்கப் படும் மற்றொரு திட்டம், ஆண்டொன்றுக்கு 15,000 டன் நிட்ரோ கிளைசிரின் கொண்ட வெடி மருந்துகளைத் தயாரிக்கும் திட்டமாகும். இதற்கான செலவு ரூ. 20.85 கோடியாகும். இதனால் 540 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். 6,100 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய ரூ. 2,76.82 கோடி திட்டச் செலவிலான ஏனைய 16 திட்டங்கள் நடந்தேறிவருகின்றன. சிப்காட்டின் ஆதரவின் கீழ், கும்மிடிப்பூண்டி, கடலூர், புதுக்கோட்டை, மானா மதுரை ஆகிய இடங்களில் நான்கு தொழில் வளர்ச்சி மையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளது. தூத்துக்குடியில் தொழில் வளர்ச்சி மையத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சென்னை ஏற்றுமதி சார்ந்த தொழில் மண்டலத்தை ஏற்படுத்துவதற்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க மாநில அரசு முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றது. 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்கான நிலங்களைக் கையகப்படுத்தும் பணிக்காக ரூபாய் ஒரு கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.





26. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், புதிதாகத் தொழில்களைத் தொடங்குவதற்கு மட்டுமின்றி, தற்போது செயற்பட்டுவரும் தொழில் பிரிவு களை விரிவுபடுத்தவும், பல்திறப்படுத்தவும், நவீனமயமாக்கவும் கடன் வசதி களை அளித்து வருகிறது. இதனால் வேலை வாய்ப்பும் பெருகும். 1984—85 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 60 கோடி அளவிற்கு நிதியுதவி அளிக்கப்படக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1985—86 ஆம் ஆண்டில் சென்னை நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் II -ன்கீழ் நிதியுதவி அளிக்கும் அமைப் பாக இந்நிறுவனம் செயல்படும். இதற்காக 1985—86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 2 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

27. தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம், கதர்-கிராமத் தொழில் துறையின்கீழுள்ள அதன் தொழிற்பிரிவுகள் மூலம், கிராமப் பகுதிகளிலுள்ள ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பு நல்குகிறது. 1984-85 ஆம் ஆண்டில், கதர்-கிராமத் தொழில் வாரியம், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், வாரியம் நிதியுதவி செய்யும் தனிப்பட்ட கைவினைஞர்கள் ஆகியோர் விற்பனை செய்த பொருட்களின் மொத்த மதிப்பு ரூ. 94 கோடியாக இருக்கும். 1985-86 ஆம் ஆண்டில் இது ரூ. 107 கோடியாக உயர்த்தப்படவுள்ளது. பல்வேறு கிராமத் தொழில்களில் ஈடுபட்டுள்ள 43,951 கைவினைஞர்களுக்கு இவ்வாரியம் இது வரை நிதியுதவி அளித்துள்ளது. 1985-86 ஆம் ஆண்டில், கூடுதலாக 19,040 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

28. வீட்டுவசதி-நகர்ப்பகுதி மேம்பாட்டு நிறுவனத்தின் நிதியுதவியுடன் நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் நலனுக்காக, நெசவாளர் வீட்டு வசதித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆறாவது திட்டக் கால இறுதிக்குள் 5,000 வீடுகள் கட்டுவதென்று கருதப்பட்டுள்ளது. நியாயமான விலையில் நூல் வழங்கும்பொருட்டு ரூ. 50 இலட்சம் இறுதிச் செலவில் மூலப் பொருள் வங்கியை அமைப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது.

29. 1985-86 ஆம் ஆண்டில், ரூ. 18.11 இலட்சம் செலவில் கயிறு உற் பத்தி மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது. ரூ. 7.62 இலட்சம் செலவில் கின்னக்கோரை என்ற இடத்தில் தொழில் கூட்டுற வுத் தேயிலைத் தொழிற்சாலையை அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

30. கூட்டுறவுத் துறையில் புதிய சர்க்கரை ஆலைகளை அமைப்பது பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஏழாவது திட்டக்கால அளவில், இம்மாநிலத்தில் மேலும் பத்து சர்க்கரை ஆலைகள் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

31. தமிழ்நாட்டில் தொழில் தொடங்குமாறு வெளிநாடுகளிலுள்ள இந்தியர்களுக்கு ஊக்கமளிக்க அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இப்பணியை சிப்காட்டில் உள்ள பன்னாட்டுப் பிரிவு கவனித்து வருகிறது. வெளிநாடுகளில் உள்ள இந்திய முதலீட்டு மையங்களின் பணியும் முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. நியூயார்க் போன்ற முக்கியமான நகரங்களில் வசிக்கும் ஆலோசகர்களின் பணியைப் பயன்படுத்தி இம்முயற்சிகளுக்கு ஆதரவு தேடவும் கருதப்படுகிறது.

## கல்வி.

32. கல்வி மேம்பாடு, அரசின் முக்கிய கருத்தையும் கவனத்தையும் அனைத்து நிலைகளிலும் எப்பொழுதும் போல் தொடர்ந்து பெற்று வருகிறது. கல்வி மானியத்திற்கான செலவு உயர்ந்து கொண்டே வந்துள்ளது. அது 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 468 கோடியாக உயர்ந்துள்ளது. அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிக்கும் திட்டத்தின்கீழ் இம்மாநில அரசு அடைந்துள்ள சாதனை மிகவும் போற்றத்தக்கதாகும். 5 முதல் 11 வயதுத் தொகுதியினரைப் பொறுத்த மட்டில், ஆறாவது திட்டக் காலத்தின் இறுதியில், 95 விழுக்காடு என்ற இலக்கை அனைத்திந்திய அளவில் நிர்ணயித்திருக்கையில், தமிழ் நாட்டின் சாதனை 98.66 விழுக்காடாகும். இதே போல, 11 முதல் 14 வயது தொகுதியினரைப் பொறுத்தமட்டில், அனைத்திந்திய அளவில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கு 50 விழுக்காடாக இருக்க, நாம் அடைந்துள்ள சாதனை 72.18 விழுக்காடாகும். 1984—85 ஆம் ஆண்டில் இந்த வயதுத் தொகுதியில் 2.98 இலட்சம் பேர் கூடுதலாகப் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆறாவது திட்டக் காலத்தில் கூடுதலாகப் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 13.67 இலட்சமாகும். ஒவ்வொரு பாவை வரிடமும் தனிப்பட்ட கவனம் எடுத்துக் கொள்ளவும், கல்வியின் தரத்தை உயர்த்தவும், 1985-86 ஆம் ஆண்டில், கூடுதலாக 500 இடைநிலை ஆசிரியர்கள், 75 தமிழாசிரியர்கள், 50 உடற்பயிற்சி ஆசிரியர்கள், 150 பட்டதாரி ஆசிரியர்கள், 75 பட்ட மேற்படிப்பு ஆசிரியர்கள் பதவிகளை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

33. பல உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் போதிய இட வசதியின்றி இயங்கி வருகின்றன. எனவே, அவற்றிற்குக் கட்டிட வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டிய அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது. 1977-78 முதல் 1984-85 வரையிலான கால அளவில் அரசு உயர் நிலைப் பள்ளிகள், மேல் நிலைப் பள்ளிகள் ஆகியவற்றிற்குக் கட்டிடங்கள் கட்ட ரூ. 22 கோடிக்கு மேல் செலவிடப்பட்டுள்ளது. இதில், 610 அரசு மேல் நிலைப் பள்ளிகளில் ஒவ்வொன்றிலும் ஒரு வகுப்பறை, ஓர் ஆய்வுக்கூடம்



கட்டுவதற்கு செலவிடப்பட்ட தொகை ரூ. 12 கோடியும் அடங்கும். 1985-86 ஆம் ஆண்டில் கட்டிடங்கள் கட்டுவதற்கான ஒதுக்கீடு ரூபாய் 1 கோடியாகும். மேலும் 1985-86 ஆம் ஆண்டில் இப் பள்ளிகளுக்கு அதிக அளவில் சுகாதார வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு ரூ. 75 இலட்சம் செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

34. பள்ளிக் கல்வியை வாழ்க்கை முறையோடு ஒன்றிய கல்வி முறையாக மாற்றுவதற்கான, புரட்சிகரமான திட்டத்தை 1985-86 ஆம் ஆண்டிலிருந்து தொடங்க, தொடக்க நடவடிக்கைகள் 1984-85 ஆம் ஆண்டிலேயே எடுக்கப்பட்டன. நடைமுறை வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி வந்துள்ள புதிய கல்வித் திட்டத்தின் அடிப்படையில், பள்ளிகளில் செயற்படுத்துவதற்கான திருத்தப்பட்ட பாட முறைகளை வல்லுநர் குழுக்கள் தயாரித்து வருகின்றன. புதிய வாழ்க்கைத் தொழில் பாட முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இத் திட்டத்திற்குப் பெருமளவில் செலவு ஏற்படும். எனவே, உலக வங்கியிடமிருந்தும் மத்திய அரசிடமிருந்தும் உதவிகள் வேண்டப்பட்டுள்ளன.

35. மேல்நிலைக் கல்வி அளவில், வாழ்க்கைத் தொழில் கல்வி முறையில் தமிழ்நாடு, பிற மாநிலங்களை விட தொடர்ந்து முன்னணியில் இருந்து வருகிறது. 1984-85 ஆம் ஆண்டில் 3.32 இலட்சம் மேல் நிலைப்பள்ளி மாணவர்களில் (11-12 ஆம் வகுப்புகள்) 61,502 (19 விழுக்காடு) பேர் வாழ்க்கைத் தொழில் கல்வியை பயின்றனர். மேல்நிலைப் பள்ளிகளில் பகுதி நேர வாழ்க்கைத் தொழில் கல்வி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியம், 1984 ஏப்ரல் முதல் ரூ. 150 லிருந்து ரூ. 300 ஆக உயர்த்தப்பட்டது. 16 மேல் நிலைப் பள்ளிகளில், 1984-85 ஆம் ஆண்டிலிருந்து கணக்கீட்டுப் பொறியியல் கல்வி முறை கொண்டுவரப்பட்டுள்ளது.

36. 1984 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளன்று 18,305 முதியோர் கல்வி நிலையங்கள் செயற்பட்டு வந்தன. 5.50 இலட்சம் முதியோர் கல்வி பயில வேண்டும் என்ற இலக்கு 1984-85ல் வரையறுக்கப்பட்டிருக்க, இந்த நிலையங்களில் 5.85 இலட்சம் முதியோர் கல்வி பயின்று வந்தனர். இவர்களில் 5.02 இலட்சம் பேர் மகளிர், 5.85 இலட்சம் முதியோரில் 2.91 இலட்சம் பேர் ஆதி திராவிடர், பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்கள். முதியோர் கல்வி நிலையங்களில், மகளிரைச் சேர்ப்பதில் சிறந்து விளங்கும் மாநிலத்தைத் தெரிந்தெடுத்து மத்திய கல்வி அமைச்சகம் ரூ. 25. இலட்சம் பரிசு வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு 1983-84, 1984-85 ஆகிய ஆண்டுகளில்

தொடர்ந்து இப் பரிசைப் பெற்றுள்ளது. இதற்கு முன்னரேயே 1982 ஆம் ஆண்டுக்கான பெருமைக்குரிய நாடேஷ்டா குருப்ஸ்சேயா லிட்டிராசி பரிசை யுனெஸ்கோ நிறுவனத்திடமிருந்து மாநில முதியோர் கல்வித் துறை பெற்றுள்ளது என்பதை ஈண்டுக் குறிப்பிடலாம். 1985-86-ல் கூடுதலாக 6 மாநில முதியோர் கல்வித் திட்டங்களைத் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது.

37. அண்மைக்கால ஆண்டுகளில் புதிய பல்கலைக் கழகங்களுக்கு அரசு தாராளமாக மானியங்களை வழங்கியுள்ளது. அதாவது, கோயம்புத்தூரில் பாரதியார் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளியில் பாரதிதாசன் பல்கலைக் கழகம், தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக் கழகம், கொடைக்கானலில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் ஆகியவற்றிற்குக் கட்டிடங்கள் கட்டவும் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றவும் தாராளமாக மானியம் வழங்கியுள்ளது. பொதுக் கல்விக்காகப் பல்கலைக் கழகங்களுக்கு மானியங்கள் வழங்கும் வகையில் 1985-86 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்தம் ரூ. 7.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி காரைக்குடியில் பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதற்காக சட்டம் உருவாக்கப் பட்டு அதனை நிறைவேற்றி வைக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஆறாவது திட்டக் கால அளவில், மாநிலத்தில் உள்ள பல்வேறு அரசுக் கல்லூரிகளில் கூடுதலாக 65 பட்டப்படிப்பு பாடமுறைகளும், 30 பட்ட மேற்படிப்பு பாட முறைகளும் தொடங்கப்பட்டன. 1985-86 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் கூடுதலாகப் பட்டப் படிப்பு பாடமுறைகளைத் தொடங்க ரூ. 3 இலட்சமும், பட்ட மேற்படிப்புப் பாடமுறைகளைத் தொடங்க ரூ. 3 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

38. தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் சேர மாணவர்கள் அதிக அள வில் முன்வருவதாலும், மற்றொரு பக்கம் அரசு அல்லது அரசு நிதி உதவி பெறும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்த அரசு நிதி ஆதாரங் கள் பற்றாக்குறையாயிருப்பதைக் கருத்தில் கொண்டும், அரசு நிதியில்லாமல், சொந்த நிதியைக் கொண்டு பல்தொழில் நுட்பப் பயிலகங்களையும், பொறியியல் கல்லூரிகளையும் ஏற்படுத்த அரசு தற்போது அனுமதி அளித் துள்ளது. எனினும், இந்த நிறுவனங்களை முறையாக நடத்துவதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அரசு வரையறுத்துள்ளது. தமிழ்நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு நிதியில்லாமல் சொந்த நிதியைக் கொண்டு 53 பல்தொழில் நுட்பப் பயிலகங்களை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட் டுள்ளது. 1984-85-ல் இதே அடிப்படையில் 17 பொறியியல் கல்லூரிகள் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.





39. தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகத்தின் புதிய வளர்ச்சித் திட்டங்களுக்கு, 1985-86 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 20 இலட்சத்திற்கு மேல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சில புதிய, பட்ட, தகுதிப் பட்டய பாட முறைகள் தொடங்குதல், கல்வி நிறுவனக் கட்டிடங்கள், மாணவர் இல்லக் கட்டிடங்கள் கட்டுதல், ஆய்வுக் கூடங்கள், பட்டறைகளைப் புதுமை மயமாக்குதல் ஆகியவை இதில் அடங்கும்.

## நகராட்சி நிருவாகம்—குடிநீர் வழங்கல்.

40. கிராம, நகர்ப்பகுதிகளிலுள்ள மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்க அரசு உறுதி பூண்டுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் ரூ. 107.69 கோடி செலவில் குடிநீர் பற்றாக்குறையுள்ள 7,226 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டுவிடும். ஏற்கனவே குடிநீர்ப் பற்றாக குறை இல்லாத குடியிருப்புகளாக வகைப்படுத்தப்பட்டிருந்தவைகளும், இம் மாநிலத்தில் தொடர்ந்து நிலவிய வறட்சி காரணமாக குடிநீர் பற்றாக்குறை யுள்ள குடியிருப்புகள் என்று வகைப்படுத்தப்பட்டன. மறுவகைப்படுத்தப் பட்ட இக் குடியிருப்புகளுக்குத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் அரசு குடிநீர் வழங்கியுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ. 89.13 கோடி செலவிடப்பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுமார் ரூ. 250 கோடி செலவில் 10,900 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்குவதே அரசின் நோக்கமாகும்.

41. 1985-86 ஆம் ஆண்டில் குறைந்தளவு தேவைகள் திட்டத்திற்காக அரசு ரூ. 24 கோடி ஒதுக்கியுள்ளது. நீரில் அதிக புளோரைடு சேர்ந்து, தண்ணீரைக் குடிக்கத்தக்கதாக மாற்றுவதற்காக, ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியுடன் ரூ. 15 கோடி செலவாகும் திட்டம் மேற்கொள்ளப்பட் டுள்ளது. இத்திட்டம் 2½ ஆண்டுக் காலத்தில் செயற்படுத்தப்படும். 1985-86 ஆம் ஆண்டில் செலவு ரூ. 6.52 கோடி ஆக இருக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது. இதுபோன்றே 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 5.65 கோடி இணை மானியம் அளிப்பதன் மூலம் கிராமப்புறத்தில் குடிநீர் வழங்க ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் உதவியைப் பெற அரசு கருதியுள்ளது. மொத்தத்தில் 1985-86 ஆம் ஆண்டில் கிராமப் பகுதியில் குடிநீர் வழங்குவதற்கான நிதி ஒதுக்கம் ரூ. 55 கோடியாக இருக்கும். ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, நீர் வாயில்கள் இருக்குமிடத்தில் குழாய் இணைப்புக் கொடுக்கக் கருதப்பட்டுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 26

42. பெரிய, நடுத்தர நகரங்கள் சிலவற்றிற்கு நீர் வழங்க உலக வங்கி உதவி செய்யும் திட்டத்தின்கீழ் 1985-86 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 10 கோடி மூலதனம் எதிர்பார்க்கப்படுகிறது. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்றும் வாரியம் மாநில அரசின் உதவியுடன் சென்னை மாநகரில் தற்போதுள்ள குடிநீர் வசதியையும் கழிவு நீரகற்றும் வசதிகளையும் மேம்படுத்துவதற்காகப் பல திட்டங்களைச் செயற்படுத்தக் கருதியுள்ளது. மாநகரில் அதிகரித்துவரும் மக்களின் தேவைகளுக்கேற்ப, கீழ்ப்பாக்கத்தி லுள்ள நீரைச் சுத்தப்படுத்தும் நிலையத்தை விரிவுபடுத்த வேண்டியதைக் கருத்தில் கொண்டு ரூ. 470 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கூடுதலாக நாளொன்றுக்கு 90 மில்லியன் காலன் நீரைச் சுத்தப்படுத்தும் நிலையத்தைக் கட்டும் பணி இவ்வாண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

43. 1983 ஆம் ஆண்டு ஜூலை, செப்டம்பர் திங்களில் அமெரிக்க நாட்டு நிறுவனமான திருவாளர்கள் அட்மாஸ்பரிக் இன்கார்ப்பரேட்டட் நிறுவனம் மேற்கொண்ட செயற்கை மழை பெய்விப்பு நடவடிக்கைகள், ஊக்கம் அளிப்பதாய் அமைந்துள்ளன. எனவே, தொடர்ந்து இந்நடவடிக்கைகளை இம்மாநிலத்தில் மேற்கொள்ள அரசு கருதுகிறது. அமெரிக்க நாட்டு நிறுவன மான திருவாளர்கள் அட்மாஸ்பரிக் இன்கார்ப்பரேட்டட் நிறுவனத்திடமிருந்து, அரசு ரூ. 43,13,633 செலவில், மேகத்தில் மருந்து தெளிப்பதற்கான விமானத் தையும், ரேடாரையும், உதிரிப் பாகங்களையும் வாங்கியது. 1984, 1985 ஆம் ஆண்டுகளில் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை முதல் நாள் முதல் நவம்பர் வரை 5 திங்கள் கால அளவில் செயற்கை மழை பெய்விக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, இந்தத் தொழில் நுட்பத்தில் இந்திய விமானப் பணி யாளர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

44. 1984-85-ல், தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் III ஆம் கட்டப் பணி யாக இத்திட்டத்தைச் செயற்படுத்த 30 நகராட்சிகளுக்கு அரசு ரூ. 500 இலட்சம் வழங்கியது. 1,560 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நகராட்சி களில் தன்னிறைவுத் திட்டத்தை செயற்படுத்தி முடிக்க, 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 5 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**கிராம வளர்ச்சி.**

45. வளமான கிராமங்களே தமிழ்நாட்டின் செழிப்பிற்கு அடிப்படை என்பதை அரசு நன்கு அறியும். இதனைக் கருத்திற் கொண்டு, கிராம வளர்ச்சியை மேம்படுத்தும் பல்வேறு நடவடிக்கைகளில் அரசு முனைப்பாக



1985 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஈடுபட்டு வந்துள்ளது. கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்புறுதித் திட்டத்தை இணையற்ற ஊக்கத்துடன் மாநில அரசு மேற்கொண்டது. இது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். ஓர் ஆண்டில் 100 நாட்களுக்குக் குறையாமல் ஒரு குடும்பத்தில் குறைந்தது ஒருவருக்காவது வேலை வாய்ப்பு அளிக்க இத்திட்டம் வகை செய்கிறது. இந்த ஆண்டிற்கு இதற்கு ரூ. 44.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், ரூ. 24 கோடி செலவில் கிராம இணைப்புச் சாலைகள் அமைத்தல், ரூ. 14.39 கோடி செலவில் நில மேம்பாடு, மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், ரூ. 16 கோடி செலவில் சிறுபாசனப் பணிகளை மேற்கொள்ளுதல், ரூ. 15.30 கோடி செலவில் கிராமப்புற ஏழைகளுக்கு 20,000 வீடுகள் கட்டுதல் ஆகியவை அடங்கும். 1985-86-ல் இதற்கு ரூ. 65 கோடி ஒதுக்கப்படும்.

46. கிராமத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை அளிக்கும் பொருட்டு, குறிப்பாக வேலைவாய்ப்புக் குறைவான காலங்களில் வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, கிராமப்புற வேலை வாய்ப்புத் தேசியத் திட்டத்தை அரசு செயற்படுத்தி வருகிறது. அதே சமயத்தில் பள்ளிக் கட்டிடங்கள், கிராமச் சாலைகள், சமுதாயக்கூடங்கள் போன்ற சமுதாயச் சொத்துக்களையும் உருவாக்குகின்றனர். 1984-85-ல் முதலில் ரூ. 42.6 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. 1984-85 திருத்த மதிப்பீட்டில் இது ரூ. 50 கோடிக்கு மேலாக அதிகரிக்கப்பட்டது. 1984-85-ல் 28—2—1985 வரை 13,518 எஞ்சிய பணிகளும், 10,833 புதிய பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 2,000 பள்ளிக் கட்டிடங்கள், 5,500 சமுதாயக்கூடங்கள், 9,000 கிராம வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1985-86-ல் இத்திட்டத்திற்காக ரூ. 53.48 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

47. கிராம வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்டத்தை அரசு பாராட்டத்தக்க முறையில் செயற்படுத்தியுள்ளது. மத்திய அரசு பங்குத் தொகை போக, இத்திட்டத்தின்கீழ் 1984-85-ல் ரூ. 16.28 கோடி ஒதுக்கப்பட்டது. இது 1985-86-ல் ரூ. 29.52 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

48. 1983-84-ல் ஓரளவு நிலமுள்ள சொற்ப நில உழவர்களுக்கு உதவும் பெருந்திட்டமொன்றை மத்திய அரசு செயலுக்குக் கொண்டுவந்தது. இத்திட்டத்திற்கான செலவை மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் ஏற்றுக்கொள்கின்றன. இத்திட்டம் ரூ. 17 கோடி நிதி ஒதுக்கத்துடன், 1985-86 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 26

49. ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டம் வெற்றிகரமாகச் செயற்பட்டது ஊக்கமளிப்பதாக இருந்ததைக் கருத்தில் கொண்டு அரசு இத்திட்டத்தினை பேரூராட்சிகளிலும் படிப்படியாக நீட்டித்துள்ளது. மூன்றாம் நிலையில் 1984-85-ல் 274 பேரூராட்சிகள் ரூ. 6.89 கோடி மதிப்புள்ள பணிகளை மேற்கொண்டுள்ளன.

சமூக நலன்.

50. ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், ஏனைய நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்காக அரசு ஏற்கெனவே பல சமூக நல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

51. ஆதிதிராவிடரின் பொருளாதார வளர்ச்சியையும் ஆதிதிராவிடர் காலனிகளுக்கு அடிப்படை வசதிகளையும் செய்து கொடுப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு ஆதிதிராவிடர் சிறப்பு அம்சத் திட்டம் செயற்படுத்தப் பட்டு வருகிறது. 1985-86-ல் துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் இந்த நோக்கம் நிறைவேறும். ஆதிதிராவிடர் சிறப்பு அம்சத் திட்டத்தின்கீழ் ரூ. 125.60 கோடி செலவிடப்படும். இத்துடன் மத்திய அரசிடமிருந்து ரூ. 13 கோடி சிறப்பு நிதி உதவியாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. ஆதிதிராவிடர்களுக்கான பொருளாதார வளர்ச்சிக்காக இது பயன் படுத்தப்படும்.

52. மாநிலத்தில் பிற்படுத்தப்பட்டோரின் நிலையை அறிவார்ந்த முறையிலும், புள்ளிவிவர அடிப்படையிலும் ஆராயவும், இந்திய அரசியலமைப்பின் விதித்துறைகளின்படி அவர்களுடைய முன்னேற்றத்திற்காகக் குறிப்பிட்ட நடவடிக்கைகளைப் பரிவுரை செய்யவும் அமைக்கப்பட்ட தமிழ் நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு தனது அறிக்கையை அளித்துள்ளது; அது அரசின் பரிசீலனையில் உள்ளது. 1985-86-ல் பிற்படுத்தப்பட்டோருக்காக 20 மாணவர் இல்லங்களையும், ஆதிதிராவிடர் களுக்காக 15 மாணவர் இல்லங்களையும் ரூ. 23 இலட்சம் செலவில் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது.

மக்கள் நல்வாழ்வு.

53. கி.பி. 2000 ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் நல்வாழ்வு அளிப்பதென அரசு முடிவுசெய்துள்ளது. இக்கொள்கையையொட்டி விரைவான மருத்துவ உதவி அளிக்கவும் பல்வேறு நோய்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்



1985 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அரசு பல வசதிகளை அளித்துள்ளது. 1984 டிசம்பர் வரை கூடுதலாக 2,343 சுகாதாரத் துணை நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க 2,284 துணை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். எஞ்சியவை 1984-85 இறுதிக்குள் ஏற்படுத்தப் படும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2,978 துணை நிலையங்களை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் சமவெளிப் பகுதியில் 5,000 பேர்களுக்கு ஒன்று என்ற வீதத்திலும் மலைப் பகுதிகளில் 3,000 பேர்களுக்கு ஒன்று என்ற வீதத்திலும் துணைச் சுகாதார நிலையங்களை ஏற்படுத்தும் நோக்குடன் ரூ. 44.6 இலட்சம் செலவில் 20 துணை நிலையங்களை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

54. கைத்தறி நெசவாளர், பீடித் தொழிலாளர்கள் பயனுக்காக சுகாதாரப் பாதுகாப்பு அடங்கல் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் இயங்கும் சிறிய கதிரியக்கவியல் பிரிவுகளின் உதவியுடனான ஐந்து இயங்கும் மருத்துவப் பிரிவுகள் சேலம், ஈரோடு, திண்டுக்கல், தூத்துக்குடி, வேலூர் ஆகிய இடங்களிலிருந்து தொடங்கி மாநிலம் முழுவதிலும் உள்ள எல்லா இடங்களுக்கும் சென்று சிகிச்சை அளிக்கும்.

55. அளவான குடும்பத்தில்தான் வளமான வாழ்வு உள்ளது என்பதை மக்கள் உணர்ந்து, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களில் தாமாகவே முன் வந்து கலந்து கொண்டு பயன்பெற்றால்தான் இத்திட்டம் வெற்றிபெறும் என்பதை அரசு திண்ணமாக நம்புகிறது. இம்மாநிலத்தில் குடும்ப நலத் திட்டங்களை விரைவாகச் செயற்படுத்தும் நோக்குடன் விரிவான அளவில் பொது மக்களுக்கு குடும்ப நலம் பற்றி அறிவு புகட்டப்படுகிறது. இதற்கு வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் போன்ற சாதனங்கள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் குடும்ப நலத் திட்டப் பணிகளும் சாதனங் களும் அளிக்கப்படுகின்றன. 1984-85-ல் 4.75 இலட்சம் பேருக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யவேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, 1985 பிப்ரவரி இறுதிவரை 4,16,145 கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. நிதி ஆண்டு இறுதிக்குள் இந்த இலக்கு எய்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1985-86-ல் ரூ. 87.94 இலட்சம் இறுதிச் செலவில் கூடுதலாகக் கருத்தடை அறுவை சிகிச்சைக்குப் பிந்திய சிகிச்சை அளிப்பதற்காக 250 படுக்கைகளுக்கு அனுமதி வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 26

56. சேலத்தில் மருத்துவக் கல்லூரி ஒன்றைத் தொடங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு நிதி ஒதுக்குவதற்கான விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. விருதுநகர், சிவகங்கை அரசு மருத்துவ மனைகளில் ரூ. 30 இலட்சம் செலவில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

## இந்தியமுறை மருத்துவம், ஹோமியோபதி.

57. இந்திய முறை மருத்துவத்தின் மேம்பாட்டிற்கு அரசு தொடர்ந்து சிறப்பிடம் அளித்து வருகிறது. 1984-85-ல் மாநிலத்தின் 15 மாவட்டங்களில் மாவட்ட சித்த மருத்துவ அதிகாரிகளை அரசு நியமித்துள்ளது. 1985-86-ல் நான்கு மாவட்டங்களில் ரூ. 10 இலட்சம் செலவில் சித்த மருந்தகத்தை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. வரும் ஆண்டில் ரூ. 3 இலட்சம் செலவில் இந்திய முறை மருத்துவம் பற்றிய புத்தகங்களையும், கருவி நூல்களையும் அச்சிட்டு வெளியிடும் திட்டம் ஒன்றையும் அரசு மேற்கொண்டுள்ளது.

## வீட்டுவசதி-நகர்ப்பகுதி மேம்பாடு.

58. அரசு, குறிப்பாக சமூகத்தில் ஏழ்மை நிலையிலுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக உள்ளது. ஏழைமக்கள் அனைவருக்கும் வீடுகட்டித் தரவேண்டுமென்ற அரசின் கொள்கையை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியமும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும் நிறைவேற்றி வருகின்றன. 1984-85 ஆம் ஆண்டில் குடிசைப் பகுதி மாற்று வாரியம், அரசு அளிக்கும் மானியம் ரூ. 200 இலட்சத்தைப் பயன்படுத்தியும், வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து ரூ. 152 இலட்சம் கடன்பெற்றும் 2,000 குடியிருப்புகளைக் கட்டும் முயற்சியை மேற்கொண்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் சென்னை மாநகரிலும், மாவட்டத் தலைமையிடங்களிலும் 1,000 குடியிருப்புகளைக் கட்ட இவ்வாரியம் கருதியுள்ளது. இது போன்றே 1985-86 ஆம் ஆண்டில் விரைவுபடுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதியொதுக்கம் ரூ. 70 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனுடன், வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து இணையாக நிதி உதவிபெற்று சென்னை மாநகரிலும், வெளியூர்களிலுமுள்ள 10,000 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படும். சென்னை நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் , ரூ. 27.80 கோடி மதிப்பீட்டுச் செலவில் 50,000 குடிசைவாழ் குடும்பங்களுக்குப் பயனளிக்கும் வகையில் 1980-81 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 1983-84 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின்கீழ் 35,000 குடும்பங்கள் பயனடைந்தன. 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 6 கோடி செலவில் 15,000 குடும்பங்களுக்கு வீடு கட்டித்தரக் கருதப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதன் மூலமும் வீட்டை மேம்படுத்துவதற்குக் கடன் வழங்குவதன் மூலமும் இத் திட்டத்தின்கீழ் ரூ. 5 கோடி செலவிடக் கருதப்பட்டுள்ளது.



1985 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

59. சென்னை நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் -ல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செயற்படுத்திவரும் மனைகளும் பணிகளும் என்ற திட்டத்தின் கீழ் 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 1.3 கோடி செலவாகுமென்று எதிர்பார்க்கப் பட்டது. 1985-86 ஆம் ஆண்டில் எஞ்சிய பணிகளை முடிப்பதற்காக ரூ. 1.20 கோடி அளிக்கப்பட்டுள்ளது. சென்னை நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் III-ஐச் சேர்ந்த மதுரவாயல் திட்டத்தின்கீழ் 1985-86 ஆம் ஆண்டில் 2,715 வீடுகளைக் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை நகர்ப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் II-ன்கீழ் பணிகளை மேற்கொள்வதற்காக 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ. 350 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

60. சென்னைப் பெருநகர்ப் பகுதியை முறையாக மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழு பெருநகர்ப் பகுதியில் திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல், மேம்படுத்தல் பணியில் ஈடுபட்டுள்ளது. சென்னை மாநகரில் வர்த்தக மையமான பகுதியில் நெரிசலைத் தவிர்க்க நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போதுள்ள கொத்தவால் சாவடியை கோயம்பேட்டுக்கு மாற்றுதல், இரும்பு, உருக்கு இரும்பு சாமான்கள் கடைகளைச் சாத்தான்காட்டுக்கு மாற்றுதல், கோயம்பேடு, மாதவரத்தில் பேருந்து, டிரக் நிலையங்களை அமைத்தல் ஆகியவை இதில் அடங்கும். சென்னை நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றை ஒருங்கிணைத்தல், செயற்படுத்தல் இந்த வளர்ச்சிக் குழுவின் பொறுப்பாகும். மாநில அரசு நிதிகளிலிருந்தும், நிறுவன நிதி ஆதாரங்களிலிருந்தும் மணலி, மறைமலை நகர் ஆகிய இடங்களில் துணை நகரங்களை மேம்படுத்த சென்னை பெருநகர வளர்ச்சிக் குழு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்த வளர்ச்சிக் குழு செயற்படுத்தும் பல்வேறு திட்டங்களுக்கு 1985-86-ல் ரூ. 355 இலட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

61. சென்னை கடற்கரை-மயிலாப்பூர் லஸ் வரையிலான விரைவுப் போக்குவரத்துத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மொத்தத் தொலைவு 8.45 கிலோ மீட்டராகும். இதற்குச் சுமாராக ரூ. 60 கோடி செலவாகும். அப்பகுதி நெடுக அரசுக்குச் சொந்தமான 62 ஏக்கர் காலி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 26

நிலத்தை ரயில்வே துறையிடம் இலவசமாக ஒப்படைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தை விரைவு படுத்துவதற்காகச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழு உதவித் தலைவர் தலைமையின்கீழ் உயர்நிலை ஒருங்கிணைப்புக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதல் கட்டப் பணி இப்போது தொடங்கப்பட்டுள்ளது.

62. கிராம வீட்டுவசதித் திட்டத்தை அரசு செயற்படுத்தி வருகிறது. 1985-86-ல் கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம், கிராமப்புற வேலை வாய்ப்புத் தேசிய திட்டம். கிராம வீட்டுவசதித் திட்டம் ஆகியவற்றின் கீழ் கிராமப்புறத்தில் வீடுகள் கட்டித் தரப்படும். வரும் ஆண்டில் அதிக எண்ணிக்கையில் வீடுகள் கட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

63. கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் ஏனைய வட்டாரப் பகுதிகளில் நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தை ரூ. 18 கோடி செலவில் செயற்படுத்த அரசு கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது. இத் திட்டத்திற்கான விவரங்கள் தயாரிக்கப்பட்டு, அவற்றை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும். சிறிய, நடுத்தர நகரங்களுக்கான, நகர்ப் பகுதி வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்டத்தை அரசு தொடர்ந்து செயற்படுத்தி வருகிறது. மத்திய உதவித் திட்டம், மாநில திட்டப் பணி ஆகியவற்றின்கீழ் இத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1985-86-ல் இதற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 7.10 கோடியாகும்.

## கூட்டுறவு.

64. உழவர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் வசதிகளை அளிக்க, அரசு செய்யும் முயற்சிகளில், கூட்டுறவுச் சங்கங்கள் முக்கியமான பங்கு வகிக்கின்றன. எனினும், உழவர்கள் அசல் தொகையை முறையாகத் திருப்பிச் செலுத்துவதைப் பொறுத்துதான் இத் திட்டத்தின் வெற்றி அமைந்துள்ளது. கடந்த காலத்தில் செலுத்தப்பட வேண்டிய பாக்கித் தொகை அதிகமாகச் சேர்ந்துவிட்டதால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இடர்ப்பாடான நிலைமை ஏற்பட்டது. கூட்டுறவுக் கடன்களை உழவர்கள் திருப்பிச் செலுத்துவதில் முன்னேற்றம் ஏற்பட்டதால், வேளாண்மைக் கடன் வழங்கு பணியில், கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களும் சிறந்த முன்னேற்றமடைந்துள்ளன. நடப்பாண்டில் 1985 ஜனவரி வரை பயிரிடுவதற்காக வழங்கப்பட்ட குறுகிய காலக் கடன்களும், துணைத் தொழில்களை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட நடுத்தரக் காலக் கடன்களும் ரூ. 108.20 கோடியாக அதிகரித்தது.



1985 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

முந்தைய ஆண்டு (1983-84) முழுவதிலும் ரூ. 88.56 கோடிதான் கடனாக
வழங்கப்பட்டது. 1985-86 ஆம் ஆண்டில் இக்கடன் தொகையை ரூ. 155
கோடியாக அதிகரிக்கக் கருதப்பட்டுள்ளது. வேளாண்மைக்காக 1985 ஜனவரி
வரை ரூ. 10.98 கோடி நீண்ட காலக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம்
ஆண்டில் நீண்ட காலக் கடன் ரூ. 18 கோடி வழங்கக் கருதப்படுகிறது.
நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் உட்பட கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்கள்
நடப்பாண்டில் 1985 ஜனவரி வரை நகைகளின் பேரில் ரூ. 174.56 கோடி கடன்
அளித்துள்ளன. இவற்றில் ரூ. 53.54 கோடி, கிராம வேளாண்மைப் பணிக்
கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்டவையாகும்.

65. குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன் தவணைகளை உரிய காலத்தில்
திருப்பிச்செலுத்தும் உழவர்களுக்குத் தொடர்ந்து வட்டியில் இரண்டு விழுக்காடு
தள்ளுபடி அளிக்கப்படுகிறது. உழவர்களின் கடன் சுமையைக் குறைக்கும்
மற்றொரு நடவடிக்கையாக 1984 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள்
நிலவரப்படி, உழவர்கள், தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் 1985 ஆம்
ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளுக்கு முன்னர் திருப்பிச் செலுத்தினால்,
காலங்கடந்த நிலுவைத் தொகைகள் மீதான வட்டியையும், தொடக்க நில வள
வங்கிகளில் கடன் வாங்கியவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் தண்ட
வட்டியையும் தள்ளுபடி செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. 1983-84 ஆம்
ஆண்டில் கடன் பாக்கி/காலங்கடந்த நிலுவை முழுவதையும் உழவர்கள்
திருப்பிச் செலுத்தியிருந்தால், காலங்கடந்த நிலுவைத் தொகை மீது
அவ்வாண்டில் வசூலிக்கப்பட்ட வட்டித் தொகையும் தண்ட வட்டித் தொகையும்
திருப்பியளிக்கப்பட்டன. 1985 பிப்ரவரி 15 வரை 74,274 பேர் ரூ. 2.20 கோடி
அளவுக்கு இச்சலுகையைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

66. ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த வேளாண்மைக் குடும்பங்களைக்
கூட்டுறவு அமைப்பின்கீழ்க் கொண்டுவரும் பொருட்டு, அத்தகைய ஒவ்வொரு
குடும்பத்திலுள்ள ஒருவர், கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கத்தில் உறுப்பினர்
ஆவதற்கு அரசு ரூ. 100 உதவித் தொகை வழங்குகிறது. இதுவரை 90,000
குடும்பங்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளன.
1985-86 ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சம் உதவித் தொகை அளிப்பதன் மூலம்
மேலும் 10,000 குடும்பங்களை இதன்கீழ்க் கொண்டு வரக் கருதப்பட்டுள்ளது.
ஆதி திராவிடர்கள் கூடுதலாகக் கடன் வாங்க இயலும் வகையில் கடன் வழங்கு
சங்கங்களின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 250-க்கு மேற்படாமல்
வட்டியில்லாக் கடன் வழங்கக் கருதப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில்
இத் திட்டத்தின்கீழ் 1,000 உறுப்பினர்களுக்கு உதவியளிக்கப்படும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 26

67. கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து உழவர்களுக்கு வேளாண் இடுபொருள்களை வழங்கிவருகின்றன. நடப்பாண்டில் 1985 ஜனவரி வரை சுமார் ரூ. 49 கோடி மதிப்புள்ள இரசாயன உரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் இதனை ரூ. 70 கோடியாக அதிகரிக்கக் கருதப்படுகிறது. உழவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நெல் வழங்கிய காவிரி கழிமுகப் பகுதியிலுள்ள உழவர்களுக்கும், குறுவைப் பருவத்தின்போது வேளாண்மைத் துறைக்கு நெல்விதை வழங்கிய விதைப் பண்ணை உழவர்களுக்கும் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 15 மதிப்புள்ள உரங்களை அரசு வழங்கியது. இத் திட்டத்தின்கீழ்க் கூட்டுறவுச் சங்கங்கள், 1985 ஜனவரி வரை ரூ. 7.37 கோடி மதிப்புள்ள உரங்களை வழங்கின. அரசு இந்த ஊக்கத் திட்டத்தை சம்பா பருவத்திற்கும் நீட்டித்துள்ளது.

68. கூட்டுறவுச் சங்கங்கள், குறிப்பாக, கிராமப் பகுதியில் நியாயமான விலையில் இன்றியமையா நுகர்பொருள்களை வழங்குவதில் தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆயிரம் குடும்பங்களுக்கு ஒரு நியாயவிலைக் கடை இருக்கும் பொருட்டு கூட்டுறவுச் சங்கங்கள், கிராமப் பகுதிகளில் கூடுதலாகத் தொடங்கிய 1,439 கடைகள் உட்பட 2,700-க்கு மேற்பட்ட கடைகளை ஏற்படுத்தியுள்ளன. கிராமக் கடைகள் 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 1,22.82 கோடி அளவுக்கு விற்பனை செய்துள்ளன. நடப்பாண்டில் 1984 டிசம்பர் வரை ரூ. 90.15 கோடி அளவுக்கு விற்பனை செய்துள்ளன.

## மின் சக்தி.

69. மின் உற்பத்தியில், தொழில் வளர்ச்சியும், வேலை வாய்ப்பும் இணைந்துள்ளன என்பதை அவையினர் நன்கு அறிவர். அதனால்தான் மாநில அரசின் ஆண்டுத் திட்டங்களில், மின் உற்பத்திக்கான நிதி ஒதுக்கீடு முக்கிய இடம் வகிக்கிறது. 1985-86 ஆம் ஆண்டில், இதற்கான நிதி ஒதுக்கீட்டினை நடப்பாண்டு அளவான ரூ. 237 கோடியிலிருந்து ரூ. 326 கோடியாக உயர்த்துவ தென்று கருதப்பட்டுள்ளது. இலவசமாக மின்சாரம் வழங்க சிறு உழவர் களுக்கும். குடிசைப் பகுதியில் வாழ்வோர்களுக்கும் அண்மையில் அளிக்கப் பட்ட சலுகைகள், மின்வாரியத்தின் வருவாயை மேலும் குறைத்தது. மின் வாரியம் திட்ட இலக்கை எய்த அரசு, கணிசமான அளவிற்கு உதவும். கிராமங் களுக்கு மின்வசதி செய்து கொடுக்கவும், விசையேற்றங்களுக்கு மின்இணைப்பு அளிக்கவும் அரசு பெருமுயற்சி எடுத்துவருகிறது. 1984-85 ஆம் ஆண்டில் கிராமங்களுக்கு மின் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று இலக்கு



1985 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

நிர்ணயித்திருந்ததில், 1985 ஜனவரி வரை 23 கிராமங்களுக்கு மின்வசதி செய்து கொடுக்கப்பட்டது. ஆறாவது திட்டக் காலத்தில், 1983-84 வரை 95,279 விசை யேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டது. 1984-85 ஆம் ஆண்டில் 50,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிக்க வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள மாநிலங்களிலேயே அதிக எண்ணிக்கையில் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளித்த மாநிலமாகத் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நினைவு கொள்ளலாம்.

70. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், கூடுதலாக்கப்பட்ட மின் உற்பத்தி நிறுவுத்திறன் மாநில அரசுத் துறையில் 420 மெகாவாட்டாகவும், மத்திய அரசுத் துறையில் 235 மெகாவாட்டாகவும் இருக்கும். மேற்சொன்ன வற்றுடன், நான்கு புனல் மின் திட்டங்கள் குறித்த பணியும், ஒரு அனல் மின் திட்டம் குறித்த பணியும் நடைபெற்று வருகின்றன. இந்த நான்கு புனல் மின் திட்டங்களில் சேர்வலாறு புனல் மின் திட்டம் (20 மெகாவாட்) 1985 ஜூன் திங்களில் செயற்படத் தொடங்கும். காடம்பாறை நீரேற்றுத் திட்டத்தின் (400 மெகாவாட்) முதல் பிரிவு (100 மெகாவாட்) 1987 ஜனவரியிலும், கீழ் மேட்டூர் புனல் மின் திட்டத்தின் (120 மெகாவாட்) முதல் பிரிவு (15 மெகா வாட்) 1986 செப்டம்பரிலும், குந்தா V ஆம் மின் உற்பத்தி நிலையத்தின் (20 மெகாவாட்) கூடுதல் பிரிவு 1987 செப்டம்பரிலும் செயற்படத் தொடங்கும். மேட்டூர் அனல் மின் திட்டத்தின், நிலை I, நிலை II-ன் கீழ்க் கூடுதலாக 840 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. 210 மெகா வாட் திறன் கொண்ட முதல் பிரிவு 1986 டிசம்பரில் செயற்படத் தொடங்கும். மேற்சொன்ன திட்டங்கள் மூலம் கூடுதலாக உற்பத்தி செய்யப்படும் அளவு 1,400 மெகாவாட்டாக இருக்கும். வடசென்னை மின் உற்பத்தித் திட்டம் (630 மெகாவாட்), தூத்துக்குடி விரிவாக்க அனல் மின் திட்டம் (420 மெகா வாட்) ஆகியவற்றிற்கு தொழில்நுட்ப வகையில் இசைவளிக்கப்பட்டுள்ளது. ஆனால், முதலீடு குறித்து மத்திய திட்டக் குழுவின் முடிவு எதிர்பார்க்கப் படுகிறது. வாயு சுழற்சியின் உற்பத்தித் திட்டமும் (கேஸ் டர்பைன் திட்டம்) (100 மெகாவாட்) மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவை புதிய திட்டங்களாகும். இவற்றை ஏழாவது திட்டக் காலத்தில் மேற்கொள்வதென்று உத்தேசிக்கப் பட்டுள்ளது. தூத்துக்குடி விரிவாக்க அனல் மின் திட்டத்தில் 210 மெகாவாட் திறன் கொண்ட ஒரு பிரிவும் வட சென்னையில் அதே திறன் கொண்ட மற்றொரு பிரிவும் வாயு சுழற்சி மின் உற்பத்தித் திட்டத்தின் 50 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு பிரிவுகளும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதிக்குள் செயற்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகின்றன.

**பாசனம்.**

71. தமிழ்நாட்டில், போதிய அளவிற்கு இயற்கை வளங்கள் இல்லாமலிருந்த போதிலும், தற்போது கிடைக்கக்கூடிய வளங்களை அதிக அளவிற்குப் பயன் படுத்திக் கொண்ட பெருமை தமிழ்நாட்டையே சாரும். குறிப்பாக பாசனத் துறையைப் பொறுத்தமட்டில் இது முழுவதும் உண்மையாகும். ஏனெனில் கிடைக்கக்கூடிய மேற்பரப்பு நீர் ஏறக்குறைய முழுமையும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆகையால், தற்போதுள்ள பழைய பாசன ஏற்பாட்டை நவீனப் படுத்தி, முறையான நீர் ஏற்பாட்டைக் கொண்டுவருவது எதிர்காலத் திட்டமாகும்.

72. பெரியாறு-வைகை பாசனத் திட்டத்தை நவீனப்படுத்தி I ஆம் நிலையில் 10,305 எக்டேர் நிலப்பரப்பிற்கும், II ஆம் நிலையில் 7,521 எக்டேர் நிலப்பரப்பிற்கும் பாசனம் அளிக்க வகைசெய்யப்பட்டது. ரூபாய் 44.50 கோடி செலவிலான I ஆம் நிலைத் திட்டம் உலக வங்கியின் கடனுடன் 1984 டிசம்பரில் முடிக்கப்பட்டுள்ளது. ரூபாய் 56.86 கோடி செலவிலான II ஆம் நிலைத் திட்டம், 35 மில்லியன் அமெரிக்க டாலர் உலக வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது, 1988 மார்ச்சில் முடிக்கப்பட வேண்டுமெனத் திட்டமிடப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டுக்குரிய செலவு ரூ. 14,056 கோடியாகும்.

73. உலக வங்கி உதவியுடன் ரூ. 102 கோடி செலவிலான தஞ்சாவூர் கால்வாயை நவீனப்படுத்தும் திட்டம், 1985-86 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக மேற்கொள்வதென்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூபாய் 18 கோடி மதிப்பீட்டுச் செலவில், பரம்பிக்குளம்-ஆளியாறு ஆயக்கட்டுப் பகுதியை விரிவாக்கும் திட்டம் நடைபெற்று வருகிறது. 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கம் ரூ. 3.10 கோடியாகும். மேலும், ரூ. 6 கோடி மதிப்பீட்டுச் செலவில் கூடுதலாக 14,165 எக்டேர் பரப்பிற்கு பாசன வசதி அளிப்பதற்கான பணிக்கு அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில், 150 ஏரிகளை நவீனப்படுத்துவதற்கான திட்டத்திற்கு ஐரோப்பிய பொருளாதாரக் குழு ரூ. 25 கோடி மானிய உதவி அளிக்க ஒப்புக் கொண்டுள்ளது. வரும் ஆண்டில் இத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கம் ரூ. 6.47 கோடியாகும்.





**காடுகள்.**

74. வனப் பாதுகாப்பு, சமூகக் காடு வளர்ப்புத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், ஸ்வீடிஷ் அனைத்து நாட்டு மேம்பாட்டு அமைப்பின் உதவியுடன் ஒரு பெருந் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1985-86 ஆம் ஆண்டில் இதற்கான செலவு ரூ. 10.05 கோடியாக இருக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ்க் காடு வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

75. அரசு ரப்பர் மேம்பாட்டுக் கழகம் 1984 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாளன்று அமைக்கப்பட்டது. ரப்பர் பயிரிடுவதற்காக 4,785 எக்டேர் பரப்பளவுள்ள நிலம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மூன்று திங்களில், அதாவது குறுகிய கால அளவில் இக் கழகம் ரூ. 2 கோடி அளவுக்கு வருவாய் ஈட்டியுள்ளது.

76. இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோருக்கு மறுவாழ்வு அளிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், இதுவரை 3,300 குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளித்துள்ளது. ஆண்டொன்றுக்கு 1.5 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தி செய்யக்கூடிய திறன் கொண்ட மற்றொரு தேயிலைத் தொழிற்சாலையை, ரூ. 180 இலட்சம் செலவில் இக் கழகத்தின் பொறுப்பின்கீழ் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. தேயிலையை ஏற்றுமதி செய்யும் பணியையும் மேற்கொண்டுள்ள இக் கழகம் 1983-84 ஆம் ஆண்டிலிருந்து ஆதாயம் ஈட்டத் தொடங்கியுள்ளது.

**காவல் துறை.**

77. அண்மைக்கால ஆண்டுகளில் காவல் துறையின் பணி குறிப்பிடத்தக்க அளவில் மாற்றம் அடைந்துள்ளது. சட்டம்-ஒழுங்கு, குற்றத் தடுப்பு ஆகியவற்றைச் செயற்படுத்துவதுடன் நலிந்த பிரிவினரைப் பாதிக்கும் சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் போன்ற சமூகச் சட்டங்களைச் செயல் படுத்துவதில் காவல் துறை தீவிரமாக ஈடுபட்டுள்ளது. தமிழ்நாடு காவல் துறை இவ்விரு பணிகளிலும் தொடர்ந்து நல்ல முறையில் செயலாற்றி வருகிறது. மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு நிலைமை செவ்விய முறையில் இருந்து வருகிறது. காவலரின் திறமையை மேம்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை

மேற்கொண்டுள்ளது. காவல் துறை தகவல் தொடர்பு நிலையை உயர்த்த அண்மையில் ரூ. 64.30 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்ட பணி, சட்டம்-ஒழுங்கு நிலைமையை மேம்படுத்த உதவுவதோடு, விரைவில் குற்ற நிகழ்வுகளைக் கண்டு பிடிக்கவும் உதவி வருகிறது. 1985-86-ல் ரூ. 25 இலட்சம் செலவில் புதிய காவல் நிலையங்களை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. காவல் நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டும் பணி ரூ. 59.86 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

### சுற்றுச் சூழல் பாதுகாப்பு.

78. சுற்றுப்புறத் தூய்மையைப் பேணிக் காக்க வேண்டிய அவசியத்தை அரசு நன்கு அறிந்துள்ளது. இதற்கு ஆக்கபூர்வமான, நடைமுறைக்குகந்த, அறிவார்ந்த அணுகுமுறை தேவையாக உள்ளது. ஏனெனில், மனிதர்களின் தேவைகளைச் சுற்றுப்புறச் சூழலைச் சீர்படுத்துவதன் மூலம் ஈடுகட்ட இயலும். இதற்கு வளவாயில்களை நன்கு நிர்வகிப்பது, தூய்மைக் கேட்டைக் கட்டுப்படுத்துதல், ஏனைய சுற்றுப்புறத் தூய்மைக் கேட்டை அகற்றுதல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட தொழில்களில் காற்றுத் தூய்மைக் கேட்டை கட்டுப்படுத்துவதற்கான ஆய்வையும், பெரிய நீர் வாயில்களில் ஆய்வை மேற்கொள்ளவும், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்து ஆய்வை மேற்கொள்ளவும் தமிழ்நாடு தூய்மைக்கேடு பாதுகாப்பு வாரியம் உத்தேசித்துள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 9.76 இலட்சம் செலவில் வட்டார ஆய்வுக் கூடங்களை அமைத்தும், சுற்றுப்புறச் சுகாதார வாரியத்தை வலுப்படுத்தியும், அதற்கு உதவ அரசு முடிவு செய்துள்ளது.

### மின்னணுவியல், அறிவியல், தொழில்நுட்பம்.

79. இம் முக்கியத் துறையின் தனிப் பொறுப்பை மேற்கொள்ளவும், அதன் விரைவான வளர்ச்சியை உறுதி செய்யவும் மின்னணுவியல், அறிவியல், தொழில் நுட்பம் என்ற புதிய துறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்தில் மின்னணுவியல் தொழிலை விரைவாக விரிவுபடுத்துவதும், நவீன வாழ்வில் மின்னணுவியல் தொழில் நுட்பத்தைப் பரவலாகப் பயன்படுத்தச் செய்வதும் அரசின் கொள்கையாகும். தமிழ்நாடு, மின்னணுவியலில் முதன்மை இடம் வகிக்கும் வகையில் மின்னணுவியல் தொழில் வளர்ச்சியில் பெரும் திட்டத்தைத் தொடங்குவதற்காக தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் வலுப்படுத்தப்பட்டு போதிய நிதி வசதியும் அளிக்கப்பட்டுள்ளது. நடைமுறையில் மின்னணுவியல் தொழில்கள் முழுவதும் அடங்கியுள்ள 19



கூட்டு அமைப்புகளைத் தொடங்க இக்கழகம் அனுமதி பெற்றுள்ளது. இப் பத்தாண்டுக் காலத்தில் பொது, கூட்டுறவு துறைகளில் மட்டும், ரூ. 200 கோடிக்கு அதிகமாக மூலதனத்தைத் திரட்ட இயலும் என இந் நிறுவனம் எதிர்பார்க்கிறது. சென்ற ஆண்டின் சொற்ப விற்பனைத் தொகையான ரூ. 35 இலட்சத்திலிருந்து, நடப்பாண்டில் எல்காட் நிறுவனமும், அதன் கூட்டு நிறுவனங்களும் ரூ. 5 கோடி விற்பனைத் தொகையையும், வரும் ஆண்டில் ரூ. 15 கோடி விற்பனைத் தொகையையும் எட்ட இயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாநில அரசு 1985—86 ஆம் ஆண்டில் மேலும் ரூ. 1.5 கோடி அளவுக்கு எல்காட் நிறுவனத்திற்கு நிதியுதவி அளிக்கும்.

80. 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 6.25 இலட்சம் செலவில் மூலப்பொருள் கிடங்கையும், ரூ. 9 இலட்சம் செலவில் கோயம்புத்தூர் தொழிற்பேட்டையில் பொது வசதி நிலையத்தையும் ரூ. 6.7 இலட்சம் செலவில் திருச்சியில் மின்னணுவியல் பொருள்-மேம்பாட்டு வளர்ச்சி மையத்தையும் ஏற்படுத்த அரசு கருதியுள்ளது.

81. மேற்கு மலைத் தொடர் பொருளாதார வளர்ச்சியில் இயற்கை ஆதாரங்களை உரிய அளவில் பயன்படுத்துவதற்கும், நிலத்தடி நீர், ஏரிப் பாசனம் ஆகியவற்றைத் திறம்படவும் ஒருங்கிணைந்த முறையிலும் பயன்படுத்துவதற்கும் தொலை உணர்வுத் தொழில் நுட்ப முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அண்ணா பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள தொலை உணர்வு மையம், ஒன்றுக்கொன்று தொடர்புள்ள, முறைப்படுத்தும் கணிப் பொறிகளையும் ஏனைய நவீன சாதனங்களையும் வாங்க வேண்டியுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 80 இலட்சம் செலவில் தொலை உணர்வு மையத்தை வலுப்படுத்தும் திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

82. தொழில் நுட்பத் தேர்ச்சி பெற்றோரை உருவாக்குவதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. ரூ. 20 இலட்சம் செலவில் காந்தி கிராமத்திலும், திருப்பூரிலும் இரு மகளிர் தொழிற் பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்த அரசு கருதியுள்ளது.

### செய்தி—சுற்றுலா.

83. தகவல் தொழில் நுட்பவியலில் நவீன சாதனங்களை அதிக அளவில் பயன்படுத்த செய்தி-மக்கள் தொடர்புத் துறை திட்டமிட்டு, நவீன தொழில் நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதில் ஈடுபட்டும் வருகிறது. இந்த மின்னணுவியல் யுகத்தில், வீடியோ, மிகச்சிறந்த தொடர்பு சாதனமாக ஆகிவிட்டது. அரசின் முக்கிய நேரிடை விளம்பரச் சாதனமாக மாவட்டங்களில்

படிப்படியான முறையில் இவற்றை நிறுவத் துறை திட்டமிட்டுள்ளது. 1985-86-ல் இதற்கு ஆகும் செலவு ரூ. 4.75 இலட்சமாகும். மாணவர்களின் பயனுக்காக நவீன தொலைக்காட்சி கருவிகள் இறக்குமதி செய்யப்பட்டு, திரைப்பட, தொலைக் காட்சி நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளன. பொதுக் கூட்டங்களையும், கலை நிகழ்ச்சிகளையும் ஏற்ற வகையில் நடத்தவும் தகவல் மையங்களை அமைக்கவும் மாவட்டங்களில் படிப்படியான நிலையில் திரையரங்கு—தகவல் நிலையங்களைக் கட்டும் பணியை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. கவியரசர் கண்ணதாசன் நினைவாக, காரைக்குடியில் மணிமண்டபம் ஒன்றையும் திருப்பூரில் விடுதலை வீரர் திருப்பூர் குமரனின் நினைவாக நினைவாலயம் ஒன்றையும் ரூ. 45 இலட்சம் செலவில் கட்ட அரசு முடிவு செய்துள்ளது.

84. தமிழ்நாட்டில் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கு அரசு அதிகச் சிறப்பிடம் அளித்துள்ளது. அதன்படி உதகமண்டலத்தில் மொத்தம் ரூ. 25 இலட்சம் செலவில் மிதக்கும் உணவகமும், மக்கள் நடந்து செல்வதற்கான அலங்காரப் பாலமும் கட்டக் கருதப்பட்டுள்ளது. மாவட்டச் சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதற்காக 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 8 இலட்சம் வழங்க அரசு கருதியுள்ளது. இம் மாநிலத்தில் சுற்றுலா—வளர்ச்சித் திட்டத்தை மேம்படுத்துவதை விரைவுப்படுத்துவதற்காக, கூட்டுத் துறையில் அரசு தனியார் தொழில் முனைவோருடன் பங்கு கொண்டு சுற்றுலாத் திட்டத்தைச் செயற்படுத்தக் கருதி வருகிறது. வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் இம் மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தில் முதலீடு செய்வதை அரசு ஊக்குவிக்கும். இதனால் அந்நியச் செலாவணி வகையில் சுற்றுலாத் துறைக்குக் கூடுதலாக முதலீடு கிடைப்பது மட்டுமின்றி அனைத்து நாட்டு தரத்திற்கேற்ப சுற்றுலா அடிப்படை வசதிகள் அளிப்பதில் வெளிநாட்டு தொழில் நுட்ப முறைகளும் திறமையான நிருவாக அமைப்பு முறைகளும் கிடைக்கும்.

### நிறுவன நிதி.

85. வணிக வங்கிகள் முன்னுரிமைப் பிரிவுகளுக்குக் கடன் வசதி அளிப்பதை முறைப்படுத்துவதற்காக நிறுவன நிதித் துறையை அரசு ஏற்படுத்தியது. இத்துறை, மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக, கிராமப்பகுதி மேம்பாட்டு ஒருங்கிணைந்தத் திட்டம், சிறு உழவர்களுக்கும் சொற்ப நில உழவர்களுக்கும் நிதி உதவியளிக்கும் பொருந் திட்டம், படித்த, வேலையற்ற இளைஞர்களுக்குப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டம் முதலிய பல்வேறு திட்டங்களின்கீழ் சமூகத்தில் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினருக்கு வங்கி





களிடமிருந்து கடனுதவி அளிக்க ஏற்பாடு செய்துள்ளது. 1984—85 ஆம் ஆண்டில் ரூ. 100 கோடி நிதியுதவியுடன் 5 இலட்சம் பேருக்கு உதவியளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களிலேயே 6 இலட்சம் பேருக்கு அதிகமாகச் சுமார் ரூ. 165 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதே வேகத்தில் 1985—86 ஆம் ஆண்டிலும் இத் திட்டம் செயற்படுத்தப்படும்.

### தொழிலாளர் நலன்

86. குடிமக்கள் என்ற வகையில் கிராமத் தொழிலாளர்களின் உரிமைகளையும் கடமைகளையும் எடுத்துக் கூறவும், தொழில் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றை அமைத்துக்கொள்ள ஊக்கமளிக்கவும் அவர்களுக்குத் தொழிலாளர் நலச் சட்டங்கள், சமூக நலச் சட்டங்களை எடுத்துக் கூறவும் வளர்ச்சி வட்டார அளவில் கிராம கௌரவ அமைப்பாளர்களை நியமிப்பதற்காக திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டம் 1984—85 ஆம் ஆண்டில் 75 வளர்ச்சி வட்டாரங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. இது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். 1985—86 ஆம் ஆண்டில் மேலும் 100 வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டத்தை நீட்டிக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

### தமிழ் வளர்ச்சி.

87. தமிழகத்தின் தொன்மையான பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் கட்டிக் காக்கும் பொருட்டும் தமிழ் பண்பாட்டின் பல்வேறு கருத்துக்கூறுகளின் வளர்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கவும், தமிழ் மொழியை ஆட்சி மொழியாகச் செயற்படுத்தவும் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் ஆட்சி மொழியாக இருப்பதால், அரசு தன்னுடைய அலுவல்கள் அனைத்தையும் தமிழில் நடத்த தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும். பல்வேறு ஊக்கத் தொகைகள் அளிப்பதன் மூலமும் அதாவது தற்போதுள்ள திரு. வி. க. பரிசு போன்று திருவள்ளுவர், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பெயரில் புதிய பரிசுகளை வழங்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. பண்டைய தமிழ் மக்களின் பண்பைச் சிறப்பாக எடுத்தியம்புவது சங்க இலக்கியமாகும். சங்ககாலப் புலவர்களின் நினைவாக, அவர்கள் பிறந்த இடங்களில் நினைவுச் சின்னம் எழுப்பும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளது. முதற்கண் பல்வேறு மாவட்டங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட 10 இடங்களில் இத்தகைய நினைவுச் சின்னங்களை நிறுவ அரசு திட்டமிட்டுள்ளது.

### வருவாய்

88. 1985—86-ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து செய்யூரில் புதிய வட்டத்தை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. அதேபோல 1985—86-ல் தருமபுரி, ஓசூர் வருவாய் கோட்டங்களைச் சீரமைத்து ரூ. 22 இலட்சம் செலவில் கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கோட்டம் ஒன்றை ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது.

### முன்னாள் படைவீரர் நலன்

89. பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட படைவீரர்கள் மறுவாழ்வுக்கு வழி வகுத்து, அவர்களை ஏனைய தொழில்களில் அமர்த்த வகை செய்யும் நலத் திட்டங்களுக்கு அரசு சிறப்பிடம் அளித்து வருகிறது. எனவே, முன்னாள் படைவீரர்களுக்கு நிதி உதவி அளிக்கவும் பல்வேறு வணிக நடவடிக்கைகளைத் தொடங்கவும், நடத்தவும் எல்லாவிதமான உதவிகளை அளிக்க முன்னாள் படைவீரர்கள் நல நிறுவனமொன்றை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

### கப்பல் போக்குவரத்து

90. அனல் மின் உற்பத்தி நிலையங்கள் நன்கு செயல்படவும், அவற்றின் உற்பத்தித் திறனை உயர்த்தவும் நிலக்கரியை மின் உற்பத்தி நிலையங்களுக்குக் குறைவான செலவில் எடுத்துச் செல்ல இயலும் வகையில், அரசு சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கப்பல்கள் ஐந்தைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது. முதல் கப்பல் கட்டப்பட்டு வருகிறது. இது விரைவில் செயற்படத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சிறார் நலத் திட்டங்கள்

91. 1982 ஜூலையில் கொண்டு வரப்பட்ட முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் நம் மாநிலத்தில் மட்டுமின்றி பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் பாராட்டுதலைப் பெற்று வருகிறது. இத் திட்டம் 65,344 மையங்களில் செயற்பட்டு வருகிறது. 2 முதல் 4 வயதுவரை உள்ள 24.34 இலட்சம் குழந்தைகளும், 5 முதல் 9 வயது வரையுள்ள 38.65 இலட்சம் குழந்தைகளும், 10 முதல் 15 வயது வரையுள்ள 16.72 இலட்சம் சிறுவர்,





சிறுமியரும் இதனால் பயன் பெற்று வருகின்றனர். இவர்களுடன் முதியோர் உதவித் தொகை பெறுபவர்களும், முன்னாள் படை வீரர்களும் இதனால் பயன்பெறுகின்றனர். இத் திட்டம் 10 முதல் 15 வயது வரை உள்ளவர்களுக்கு 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் முதல் நீட்டிக்கப்பட்டது. இப்புள்ளி விவரங்கள், இவர்களுக்குச் சத்துணவை முறையாக வழங்குவதில் உள்ள பிரச்சினைகளின் அளவைத் தெளிவாகக் காட்டும். குழந்தைகளின் நலனுக்காக அரசு பெருமுயற்சி எடுத்துக் கொண்டு அயராது பாடுபட்டு வருகிறது என்பதை இத் திட்டம் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இத் திட்டத்தின்கீழ் பயனடையும் சிறார்களின் உயரமும் எடையும், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழு தெரிவித்த அளவைவிட கடந்த 12 மாதங்களில் அதிகரித்துள்ளது என்பது அண்மையில் நடத்தப்பட்ட ஆய்விலிருந்து தெரிய வருகிறது. திட்டம் தொடங்குகையில் 32 விழுக்காடு குழந்தைகள் ஊட்டச் சத்துடன் இருந்தனர். ஓராண்டுக்குப் பின்னர் 78 விழுக்காடு குழந்தைகள் ஊட்டச் சத்து பெற்று உடல் நலனுடன் வாழ்கின்றனர். இது மட்டுமல்ல, தொடக்கப் பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை இத்திட்டத்தின் பயனாக உயர்ந்துள்ளது. பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்டுச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. சிறார் நலனுக்காக அரசு தற்போது விரிவான திட்டத்தைக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளது. இவ்வாறாகக் குழந்தைகளின் அடிப்படை வசதிகள் அனைத்தையும் பாதுகாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் வகுப்பிலிருந்து 8 ஆம் வகுப்புவரை உள்ள, தகுதியுள்ள, ஏழைக் குழந்தைகள் அனைவருக்கும் 15—9—1985 முதல் ஆண்டொன்றுக்கு ரூ. 13.5 கோடி செலவில் இலவச சீருடை வழங்குவது என அரசு முடிவு செய்துள்ளது. கிராமப் பகுதிகளில் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கும் இத் திட்டம் உதவும். தமிழ் நாடு கிராமப்புற இளைஞர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சீருடைகளைத் தைக்க கிராமப் பகுதிகளில் உள்ள மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்படும். கிராம வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் அவர்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்படும். இவ்வாறாக, மகளிரின் பொருளாதார, சமூக நிலையை இத் திட்டம் உயர்த்தும். முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையுள்ள, தகுதியுள்ள, ஏழை மாணவ-மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 11.5 கோடி செலவில் இலவசமாகப் பாடபுத்தகங்களை வழங்குவதென்று அரசு முடிவு செய்துள்ளது. பாலர் பள்ளி குழந்தைகளுக்கு முறையாக மருத்துவப் பரிசோதனையும் அளிக்கப்பட்டு வருகிறது. குழந்தைகளுக்கு முழு சுகாதாரப் பாதுகாப்பு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 26

அளிப்பதற்காக, சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள் வலுப்படுத்தப்படும். ஏனெனில் இக் குழந்தைகள்தாம் தமிழ்நாட்டின் வலிவுமிக்க வளம் மிக்க வருங் காலத்திற்கு வழி வகுப்பவர்.

### இளைஞர் நலப் பணிகள்

92. சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு இளைஞர்களின் ஏற்றமிகு எழுச்சியையும், பொங்கியெழும் ஆர்வத்தையும் ஆக்க பூர்வமாகப் பயன்படுத்த வேண்டுமென்பதோடு மட்டுமின்றி, இன்றைக்கு உலக மக்கள் தொகையில் குறிப்பிடத்தக்க விழுக்காடு இளைஞர்கள் உள்ளனர் என்பதை உணர்த்தவுமே 1985 ஆம் ஆண்டு, உலகம் முழுவதிலும் இளைஞர் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது. நம் நாட்டில்கூட, 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி, மொத்த மக்கள் தொகையில் 32 விழுக்காடு இளைஞர்கள் ஆவர்.

93. இளைஞர்கள் என்று குறிப்பிட, பல்வேறு நாடுகள், பல்வேறு வயதுத் தொகுதியினரைக் கணக்கில் எடுத்துக்கொண்டுள்ளன. இந்தியாவில் இதற்காக 15 முதல் 35 வயது வரையுள்ளவர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். இதன் அடிப்படையில், தமிழ் நாட்டில், மொத்தமுள்ள 4.85 கோடி மக்கள்தொகையில் 1.54 கோடி பேர் இந்த வயதுத் தொகுதியில் வருகின்றனர். அவர்களில் 75 இலட்சம் பேர் ஆண்கள், 79 இலட்சம் பேர் பெண்கள் ஆவர். இந்த வயதுத் தொகுதியினர்களில் ஆண்களை விட பெண்கள் அதிகமாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் 32.25 விழுக்காடு ஆவர். ஆகையால் இந்த உலக இளைஞர் ஆண்டில், இளைய சமுதாயத்தினர் உடல் நலமும் உள்ளப் பாங்கும் பெறுவதற்கு மட்டுமின்றி, நாட்டின் பொருளாதார, சமூக வளர்ச்சியில் ஆக்க முறையில் பணியாற்ற அவர்களுக்குத் தேவைப்படக்கூடிய வசதிகளையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக்கொடுக்க நாம் திட்டம் தொடங்குவது சாலப் பொருத்தமுடையதாகும்.

94. ஏற்கெனவே, இவ்வரசு, இளைஞர் நலத்துறை என்ற ஒரு துறையைத் தனியாக ஏற்படுத்தியுள்ளது. நடப்பாண்டில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்தை இவ்வரசு தொடங்கியுள்ளது. இளைஞர் சக்தியை ஒன்று திரட்டி ஆக்கப்பூர்வமான பணிக்குப் பயன்படுத்துவதற்காகவே இவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது, தேசிய சமூகப் பணித் திட்டம், நேரு இளைஞர் மையங்கள் போன்ற சில அமைப்புகளும் திட்டங்களும் உள்ள



1985 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சமுதாய, ஏனைய நடவடிக்கைகைகளில் பங்கு கொள்ள இவை, இளைஞர்களுக்கு வாய்ப்பை ஓரளவிற்கு நல்குகின்றன. வரும் ஆண்டில், இம் மாநிலத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் இளைஞர் மையங்களைத் தொடங்க வேண்டுமென அரசு கருதுகிறது. இவை இளைய சமுதாயத்தினரின் அறிவுத் திறனையும், உடல் உறுதியையும் வளர்க்க வகை செய்யும். சாதி, சமய அல்லது அரசியல் பாதிப்பின்றி, இளைஞர்கள் இம் முறையில் பணியாற்ற இந்த மையங்கள் வழிகாட்டி அமைப்புகளாகச் செயல்படும். இம் மாநிலத்திலுள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களில், "இளைஞர் விளையாட்டு மையங்கள்" தொடங்கப்படும். ஊராட்சி ஒன்றியங்கள் இவற்றிற்குத் தேவையான நிலத்தை அளிக்கும். தகுதியான பயிற்சி ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ், விளையாட்டுகள் அவை தொடர்பான நடவடிக்கைகளுக்கு அவசியமான அடிப்படை வசதிகளை இளைஞர் நலத்துறை செய்து கொடுக்கும். இம் மாநிலத்தில் இத்தகைய வசதிகளை செய்துகொடுப்பதற்கான அமைப்பு முறையை உருவாக்கக் கருதப்பட்டுள்ளது. இது இளைஞர் சக்தியை நன் முறையில் ஒன்று திரட்டும். மேலும், அவசியமாயின் அவர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களிடம் மண்டிக் கிடக்கும் திறமையை வெளிக்கொணர்ந்து பிற்காலத்தில் அவர்கள் தேசிய, அனைத்து நாட்டு அளவில் புகழ் பெற்று விளங்கப் பெரிதும் உதவும். இத்திட்டத்திற்குத் தொடக்கத்தில் தோராயமாக ரூ. 4 கோடி அளவில் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது அரசின் நிதி உதவி மூலமும், உள்ளாட்சி மன்றங்கள் அளிக்கும் பங்குத் தொகை மூலமும் பெறப்படும்.

### அரசுப் பணியாளர்களுக்கான நலன்.

95. நான்காவது சம்பளக் குழுவை அமைப்பது என்ற அரசின் முடிவை கடந்த ஆண்டு என்னுடைய வரவு-செலவுத் திட்ட உரையில் நான் அறிவித்திருந்தேன். சம்பளக் குழுவின் பணி, முடிவடையும் நிலையிலுள்ளது என்பதையும் அது அதன் அறிக்கையைத் தமிழ் புத்தாண்டு பிறப்பதற்கு முன் (13—4—1985) அரசுக்கு அளிக்கும் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு, அறிக்கையை ஆய்வு செய்து, அதன்படி விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்று இந்த அவைக்கு நான் உறுதியளிக்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 26

96. 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், குடும்ப நல நிதித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மொத்தத் தொகையை ரூ. 10,000-லிருந்து 20,000 ஆக உயர்த்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான ஆணைகள் நடப்பாண்டில் வெளியிடப்படும்.

97. 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் அன்றோ அதற்குப் பிறகோ ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்களின் ஓய்வூதியத் தொகையின் உச்ச வரம்பு ரூ. 1,500 என்பதை நீக்கிவிட அரசு முடிவு செய்துள்ளது. மேலும், பணிக் கொடையின் உச்சவரம்பு ரூ. 36,000-லிருந்து ரூ. 50,000 ஆக உயர்த்தப்படும்.

## வரவு-செலவுத் திட்ட விவரம்.

98. எதிர்பார்க்கக்கூடிய அனைத்து முக்கியமான செலவினங்களுக்கும் 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் போதிய அளவுக்கு நிதி ஒதுக்கம் செய்ய அதிகக் கவனம் எடுத்துக் கொண்டிருந்த போதிலும்கூட திருத்த மதிப்பீட்டில் இவ்வாண்டிற்கான வருவாய்க் கணக்குக் குறித்த செலவு ரூ. 120 கோடி உயர்ந்துள்ளது. இந்த உயர்வுக்கான முக்கியமான காரணங்கள், நேரடிக் கொள்முதல் மூலம் பெறப்பட்ட நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 15 என்ற வீதத்தில் உற்பத்தி ஊக்கத் தொகை வழங்கியது, கரும்பிற்கான அதிக விலைக்கு உதவித் தொகை வழங்கியது, முதியோர் ஓய்வூதியம் பெற இருந்தவர்களுக்கெல்லாம் ஓய்வூதியம் வழங்கியது, அனாதை இல்லங்களைத் தொடங்கியது, 94 உயர்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கியது, 9 முறை அகவிலைப்படி வீதங்களை உயர்த்தியது, அரசு ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணத் தொகை வழங்கியது, வட்டாட்சியர்களுக்கு மதிப்பூதியத் தொகையை உயர்த்தியது, ஆண்டில் அறிவிக்கப்பட்ட ஏனைய பல நல்வாழ்வு நடவடிக்கைகள் ஆகியவையாகும். இருப்பினும் திருத்த மதிப்பீட்டின்படி மூலதனக் கணக்கின்கீழான செலவு, வரவு-செலவுத் திட்டச் செலவு அளவிலிருந்து அதிக மாற்றம் பெறவில்லை.

## நிதி நிலை.

99. சட்டமன்றத்தில் வைக்கப்பட்ட 1983-84 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில், அவ்வாண்டில் எதிர்பார்க்கப்பட்ட பற்றாக்குறை ரூ. 129.3 கோடி என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவீர். இருப்பினும், 1983-84 ஆம் ஆண்டிற்குரிய பற்றாக்குறை ரூ. 42.43 கோடியேயாகும். இவ்வாறு பற்றாக்குறை அதிக அளவுக்குக் குறைந்ததற்கான காரணம், செலவுகளை



1985 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

உன்னிப்பாகக் கண்காணித்து முறைப்படுத்தியதும் சிக்கனத்தை அதிக அளவிற்குக் கடைபிடிக்க பெருமுயற்சி எடுத்துக் கொண்டதுமாகும். மத்திய அரசு, நடுத்தரக் காலக் கடனாக ரூ. 55.78 கோடி வழங்கியது. இதுவும் இந்தக் குறைவுக்கான காரணமாகும். இவ்வாண்டிற்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கையை அவைமுன் வைத்து ஆற்றிய உரையில் இவ்வாண்டின் இறுதியில் நிகரப்பற்றாக்குறை ரூ. 167.5 கோடியிருக்கும் என்று நான் குறிப்பிட்டிருந்தேன். இருப்பினும், தற்போது தயாரிக்கப்பட்டுள்ள திருத்த மதிப்பீடுகள் இவ்வாண்டில் ரூ. 84.87 கோடி பற்றாக்குறையாக இருக்குமென்று காட்டுகிறது. இவ்வாண்டில் அரசு எண்ணற்ற நலத் திட்டங்களை அறிவித்திருந்த போதிலும்கூட இது குறித்த கூடுதல் செலவு, அதிகமாகக் கிடைக்கப்பெற்ற வருவாய்க் கணக்கு வரவுகள் மூலமும், ஏனைய நிலைகளில் செலவில் சிக்கனம் மேற்கொண்டதன் மூலமும் ஈடு செய்யப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டிற்கான தொடக்கநிலை சிறந்த முறையில் இருந்ததால் இந்த மேம்பட்ட நிலை ஏற்பட்டுள்ளது.

100. 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கில் வரவு ரூ. 2,368.46 கோடியாகும். வருவாய்க் கணக்கில், செலவு ரூ. 2,314.86 கோடியாகும். இதன்படி வருவாய்க் கணக்கில் ரூ. 53.60 கோடி உபரியாக இருக்கும். மூலதனச் செலவு ரூ. 156.95 கோடியாக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. பொதுக்கடன் என்பதன்கீழ் நிகர உபரி ரூ. 166.75 கோடியாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கடன்கள்-முன்பணங்கள் என்பதன்கீழான நிகர வரவு-செலவு ரூ. 312.65 கோடி பற்றாக்குறையைக் காட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தத்தில் தொகுநிதியில் ரூபாய் 249.26 கோடி பற்றாக்குறையாக இருக்கும். பொதுக் கணக்கு என்பதன்கீழ் உபரியாக உள்ள ரூ. 20.93 கோடியைக் கணக்கில் எடுத்துக்கொண்டால் ரூபாய் 228.33 கோடி பற்றாக்குறையாக இருக்கும். இத்துடன் தொடக்கப் பற்றாக்குறை ரூ. 84.87 கோடியைக் கணக்கில் எடுத்துக்கொண்டால் அடுத்த நிதியாண்டிற்கான இறுதிப் பற்றாக்குறை ரூ. 313.20 கோடியாக இருக்கும்.

101. அடுத்த நிதியாண்டிற்கான இறுதி பற்றாக்குறையைக் கணக்கிடுகையில் அரசுக்கு உள்ள முக்கியமான இடர்ப்பாடு, அடுத்த ஆண்டிற்கான திட்டச் செலவை மத்திய திட்டக்குழு இன்னும் முடிவு செய்யவில்லை என்பதும், ஏழாவது திட்டத்தின் முதலாண்டாக உள்ள 1985-86 ஆம் ஆண்டிற்கு, மத்திய அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய அதிக நிதி உதவியைப் பொறுத்தமட்டில் தெளிவான விவரங்கள் பெறப்படாமையும் ஆகும். காட்கில் வகுத்த விதிமுறையின்படி மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட மத்திய நிதி உதவித் தொகை

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 26

யில் தமிழ்நாடு குறைவான பங்கைப் பெற்றது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். ஏனெனில் நபர்வாரி வருமானம் தேசிய சராசரியைவிடக் குறைவாக உள்ள மாநிலங்களுக்கு அளிக்க வேண்டிய உரியபங்கு நமக்கு மறுக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகை அடிப்படையில் நிதி உதவியின் அளவை நிர்ணயிக்கும் போது 1971 ஆம் ஆண்டு மாநிலங்களில் இருந்த மக்கள் தொகையை அடிப்படையாகக் கொள்ளவேண்டுமென மத்திய அரசு சரியான முடிவை எடுத்திருந்தபோதிலும், அதே அடிப்படையை மாநிலங்களின் நபர்வாரி வருமானத்தைக் கணக்கிட எடுத்துக்கொள்ளவில்லை. அதன் விளைவாக ஆண்டு மக்கள்தொகை பெருக்கவிதம், தேசிய சராசரி அளவை விடக் குறைவாக உள்ள தமிழ்நாடு போன்ற மாநிலங்கள். குடும்ப நலத் திட்டத்தைச் செவ்விய முறையில் செயற்படுத்தியதன் காரணமாக, அதிக நபர்வாரி வருமானம் பெறும் மாநிலங்களாகக் காட்டப்படுகின்றன. இந் நிலையை மாற்றுமாறு நாம் மத்திய அரசை கேட்டுள்ளோம். அவ்வாறு செய்தால், மத்திய அரசு அளிக்கும் நிதியுதவியில் நம் பங்கு அதிகரிக்கும். மாநில அரசின் வரி விதிப்புத் திறன் அடிப்படையில் செய்த வரி விதிப்பு முயற்சிகள், போதுமான அளவிற்கு இயற்கை வளங்கள் இல்லாமை, ஏழ்மை நிலை, வேலைவாய்ப்பின்மை போன்ற ஏனைய பின்தங்கிய நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தகுந்தவாறு முன்னுரிமைச் சலுகை அளித்து காட்கில் விதிமுறையைத் திருத்தியமைக்கவேண்டுமென நாம் கேட்டுள்ளோம். தேசிய கொள்கைகளை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கும் சில முன்னுரிமைச் சலுகை அளிக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளோம். அதன் அடிப்படையில், தேசிய வளர்ச்சிக் குழு முடிவு செய்யக்கூடிய வகையில் இந்த விதிமுறையில் மாற்றம் செய்தால் அதன் மூலம், தமிழ்நாடு, மத்திய அரசிடமிருந்து உரிய பங்கை பெறக்கூடும். மேலும், மொத்தத்தில் ஏழாவது திட்டக் காலத்தில் கிடைக்கக்கூடிய நிதியுதவி ஆறாவது திட்ட காலத்தில் இருந்ததைவிட அதிகமாக இருக்குமென்று எதிர்பார்க்கிறோம். வரும் ஆண்டில், மத்திய அரசு, மாநிலங்களுக்கு, அளிக்கக்கூடிய நிதியுதவியின் அளவை மத்திய அரசு முடிவு செய்வதன் அடிப்படையில் கூடுதல் வருவாய் கிடைக்கும் என்றும் அதன் பயனாகப் பற்றாக்குறை குறையும் என்றும் எதிர்பார்க்கிறோம். வரவு-செலவுத் திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள, திட்டச் செலவின் அளவு, மாநிலங்களுக்கான திட்ட ஒதுக்கீடுகளை மத்திய திட்டக்குழு முடிவு செய்வதன் அடிப்படையில் மாறக்கூடும் என்று நான் இங்கு குறிப்பிட விழைகிறேன்.

102. பொருளாதார வளர்ச்சியின் நோக்கங்களை எய்தவும், மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும் மாநில அரசு மேற்கொண்டுள்ள பெரும் பொறுப்புகளை நிறைவேற்ற அதிக நிதி வாயில்களைத் திரட்டவேண்டியது



1985 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அவசியம் என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். மதிப்பிற்குரிய உறுப்பினர்களும் இதை ஏற்றுக் கொள்வார்கள். அதே நேரத்தில் இந்த நடவடிக்கைகள் பணவீக்கத்தை அதிகரிக்காமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டியது அரசின் நோக்கமாகும்.

103. இம் மாநிலத்தின் நிதி வாயில்களைப் பெருக்க வேண்டிய அவசியம் மிக அதிகமாக இருந்தபோதிலும் மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் அறிவித்துள்ள புதிய வரிகளால் பெட்ரோலியப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ள நிலையில், வரி உயர்வால் நுகர்வோர்களுக்கு இடர்ப்பாடு உண்டாகக் கூடிய பண்டங்கள் மீது புதிய வரிகள் விதிப்பதையும் வரிகளைக் கூடுதலாக்குவதையும் தவிர்த்துள்ளேன். சாதாரண மக்களைப் பாதிக்காத வகையில் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டக்கூடிய தெரிந்தெடுக்கப்பட்ட சில வரி விதிப்பு நடவடிக்கைகள் மட்டும்தான் கருதிப் பார்க்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டில் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ள வரி விதிப்பு நடவடிக்கைகளை தற்பொழுது கீழே குறிப்பிடுகிறேன்:—

(1) சாராயத்தின் மீது உள்ள ஆயத் தீர்வையை பல்க் லிட்டர் ஒன்றுக்கு 4 ரூபாயிலிருந்து 6 ரூபாயாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(2) சாராயத்தின் மீதான விற்பனை வரி தற்பொழுதுள்ள 6 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக உயர்த்தப்படும்.

இந் நடவடிக்கைகளால் அரசுக்குக் கூடுதலாக ரூ. 40 கோடி அளவிற்கு வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. விற்பனையாளர்களின் ஆதாய விகிதம், நியாயமான அளவிற்கும் அதிகமாகவே இருப்பதால் இந்த வரிச் சுமையை அவர்களே ஏற்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(3) பல்வேறு வகை மோட்டார் வாகனங்கள் மீது தற்பொழுதுள்ள வரி விகிதத்தை உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகன வரி சட்டத்தில் இதற்கான திருத்தங்கள் சட்டமன்றப் பேரவை மேலவையில் கொண்டுவரப்படும்.

இந்த வரி உயர்வு நடவடிக்கைகள் மூலம் சுமார் 10 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிடைக்கும். இதன் பெரும் பகுதி, நகரப் பேருந்துகளுக்கு, பயணி ஒருவருக்கு ரூ. 150 என்ற காலாண்டுக் கட்டணம், பயணி ஒருவருக்கு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 26

யில் தமிழ்நாடு குறைவான பங்கைப் பெற்றது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். ஏனெனில் நபர்வாரி வருமானம் தேசிய சராசரியைவிடக் குறைவாக உள்ள மாநிலங்களுக்கு அளிக்க வேண்டிய உரியபங்கு நமக்கு மறுக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகை அடிப்படையில் நிதி உதவியின் அளவை நிர்ணயிக்கும் போது 1971 ஆம் ஆண்டு மாநிலங்களில் இருந்த மக்கள் தொகையை அடிப்படையாகக் கொள்ளவேண்டுமென மத்திய அரசு சரியான முடிவை எடுத்திருந்தபோதிலும், அதே அடிப்படையை மாநிலங்களின் நபர்வாரி வருமானத்தைக் கணக்கிட எடுத்துக்கொள்ளவில்லை. அதன் விளைவாக ஆண்டு மக்கள்தொகை பெருக்கவீதம், தேசிய சராசரி அளவை விடக் குறைவாக உள்ள தமிழ்நாடு போன்ற மாநிலங்கள். குடும்ப நலத் திட்டத்தைச் செவ்விய முறையில் செயற்படுத்தியதன் காரணமாக, அதிக நபர்வாரி வருமானம் பெறும் மாநிலங்களாகக் காட்டப்படுகின்றன. இந் நிலையை மாற்றுமாறு நாம் மத்திய அரசை கேட்டுள்ளோம். அவ்வாறு செய்தால், மத்திய அரசு அளிக்கும் நிதியுதவியில் நம் பங்கு அதிகரிக்கும். மாநில அரசின் வரி விதிப்புத் திறன் அடிப்படையில் செய்த வரி விதிப்பு முயற்சிகள், போதுமான அளவிற்கு இயற்கை வளங்கள் இல்லாமை, ஏழ்மை நிலை, வேலைவாய்ப்பின்மை போன்ற ஏனைய பின்தங்கிய நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தகுந்தவாறு முன்னுரிமைச் சலுகை அளித்து காட்கில் விதிமுறையைத் திருத்தியமைக்கவேண்டுமென நாம் கேட்டுள்ளோம். தேசிய கொள்கைகளை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கும் சில முன்னுரிமைச் சலுகை அளிக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளோம். அதன் அடிப்படையில், தேசிய வளர்ச்சிக் குழு முடிவு செய்யக்கூடிய வகையில் இந்த விதிமுறையில் மாற்றம் செய்தால் அதன் மூலம், தமிழ்நாடு, மத்திய அரசிடமிருந்து உரிய பங்கை பெறக்கூடும். மேலும், மொத்தத்தில் ஏழாவது திட்டக் காலத்தில் கிடைக்கக்கூடிய நிதியுதவி ஆறாவது திட்ட காலத்தில் இருந்ததைவிட அதிகமாக இருக்குமென்று எதிர்பார்க்கிறோம். வரும் ஆண்டில், மத்திய அரசு, மாநிலங்களுக்கு, அளிக்கக்கூடிய நிதியுதவியின் அளவை மத்திய அரசு முடிவு செய்வதன் அடிப்படையில் கூடுதல் வருவாய் கிடைக்கும் என்றும் அதன் பயனாகப் பற்றாக்குறை குறையும் என்றும் எதிர்பார்க்கிறோம். வரவு-செலவுத் திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள, திட்டச் செலவின் அளவு, மாநிலங்களுக்கான திட்ட ஒதுக்கீடுகளை மத்திய திட்டக்குழு முடிவு செய்வதன் அடிப்படையில் மாறக்கூடும் என்று நான் இங்கு குறிப்பிட விழைகிறேன்.

102. பொருளாதார வளர்ச்சியின் நோக்கங்களை எய்தவும், மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும் மாநில அரசு மேற்கொண்டுள்ள பெரும் பொறுப்புகளை நிறைவேற்ற அதிக நிதி வாயில்களைத் திரட்டவேண்டியது



1985 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அவசியம் என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். மதிப்பிற்குரிய உறுப்பினர்களும் இதை ஏற்றுக் கொள்வார்கள். அதே நேரத்தில் இந்த நடவடிக்கைகள் பணவீக்கத்தை அதிகரிக்காமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டியது அரசின் நோக்கமாகும்.

103. இம் மாநிலத்தின் நிதி வாயில்களைப் பெருக்க வேண்டிய அவசியம் மிக அதிகமாக இருந்தபோதிலும் மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் அறிவித்துள்ள புதிய வரிகளால் பெட்ரோலியப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ள நிலையில், வரி உயர்வால் நுகர்வோர்களுக்கு இடர்ப்பாடு உண்டாகக் கூடிய பண்டங்கள் மீது புதிய வரிகள் விதிப்பதையும் வரிகளைக் கூடுதலாக்குவதையும் தவிர்த்துள்ளேன். சாதாரண மக்களைப் பாதிக்காத வகையில் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டக்கூடிய தெரிந்தெடுக்கப்பட்ட சில வரி விதிப்பு நடவடிக்கைகள் மட்டும்தான் கருதிப் பார்க்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டில் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ள வரி விதிப்பு நடவடிக்கைகளை தற்பொழுது கீழே குறிப்பிடுகிறேன்:—

(1) சாராயத்தின் மீது உள்ள ஆயத் தீர்வையை பல்க் லிட்டர் ஒன்றுக்கு 4 ரூபாயிலிருந்து 6 ரூபாயாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(2) சாராயத்தின் மீதான விற்பனை வரி தற்பொழுதுள்ள 6 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக உயர்த்தப்படும்.

இந் நடவடிக்கைகளால் அரசுக்குக் கூடுதலாக ரூ. 40 கோடி அளவிற்கு வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. விற்பனையாளர்களின் ஆதாய விகிதம், நியாயமான அளவிற்கும் அதிகமாகவே இருப்பதால் இந்த வரிச் சுமையை அவர்களே ஏற்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(3) பல்வேறு வகை மோட்டார் வாகனங்கள் மீது தற்பொழுதுள்ள வரி விகிதத்தை உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகன வரி சட்டத்தில் இதற்கான திருத்தங்கள் சட்டமன்றப் பேரவை மேலவையில் கொண்டுவரப்படும்.

இந்த வரி உயர்வு நடவடிக்கைகள் மூலம் சுமார் 10 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிடைக்கும். இதன் பெரும் பகுதி, நகரப் பேருந்துகளுக்கு, பயணி ஒருவருக்கு ரூ. 150 என்ற காலாண்டுக் கட்டணம், பயணி ஒருவருக்கு

ரூ. 180 ஆக உயர்த்தப்படுவதன் மூலமும் வெளியூர் பேருந்துகளுக்கு, பயணி ஒருவருக்கு ரூ. 195 என்ற காலாண்டுக் கட்டணத்தை பயணி ஒருவருக்கு ரூ. 225 என்று உயர்த்துவதன் மூலமும் கிடைக்கும்.

(4) கடந்த பல ஆண்டுகளில் பெருவகைக் கனிமங்கள், சிறு வகைக் கனிமங்கள் மற்றும் அவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் ஆகியவற்றின் விலையில் அதிகமான ஏற்றம் ஏற்பட்டுள்ளது. கனிமச் சுரங்கப் பணிகளை முறைப்படுத்த, நிருவாக அமைப்பைச் சீர்ப்படுத்தவும் அரசு கூடுதல் செலவினத்தை ஏற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே சிர்க்கண்ட செலவினத்தை பெருவகை கனிமப் பொருள்கள் மீது தற்பொழுதுள்ள உரிமை வரித் தொகைக்குச் rcayalty சமமான அளவில் கனிம உரிமை வரி (Mire al Rights Tax) விதிப்பது அவசியம் என்று கருதப்படுகிறது :—

(1) சுண்ணாம்புக் கல் (Lime s:one)
(2) பழுப்பு நிலக்கரி (Lignite)
(3) மாக்னஸைட் (Magnesite)
(4) பாக்ஸைட் (Bauxite)
(5) இல்லுமினைட் (Ilumenite)
(6) ஜிர்க்கான் (Zircon)
(7) ஜிப்ஸம் Gypsum)

மேலும் சிறிய கனிம வகைகளுக்கு விதிக்கப்படும் உரிமை வரியை Seigniorage Fee உயர்த்தவும் அவற்றின் ஏலத்தின்போது நிர்ணயிக்கின்ற குறைந்தபட்சத் தொகையை உயர்த்தி நிர்ணயிக்கவும் உத்தேசிக்கப்படுகின்றது. கறுப்பு வண்ணக் கருங்கற்கள் சாம்பல் வண்ணக் கருங்கற்கள் ஆகியவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய மிகப் பெரிய வாய்ப்பினை உடையதாய் இருக்கின்றன. அவற்றின் விலை, ஏற்றுமதிச் சந்தையில் ஆண்டுதோறும் ஏறிக்கொண்டே போகின்றது. தற்பொழுது நடைமுறையில் உள்ள உரிமை வரி, இந்த விலைகளோடு ஒப்பிடும்போது மிகக் குறைந்ததாகவே உள்ளது. கறுப்பு வண்ணக் கற்கள் மீதான உரிமை வரியை ஒரு கன மீட்டருக்கு 200 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக உயர்த்தவும், ஏற்றுமதிக்காக பெரிய சதுர வடிவில் வெட்டி எடுக்கப்படும் சாம்பல் வண்ணக் கற்களுக்கு கன மீட்டர் ஒன்றுக்கு ரூ. 200 உரிமை வரி விதிக்கவும் அரசு உத்தேசித்துள்ளது.



உள்நாட்டு உபயோகத்திற்காகப் பயன்படுத்தப்படும் சாம்பல் வண்ணக் கற்கள் மீது கன மீட்டர் ஒன்றுக்கு விதிக்கப்படுகின்ற உரிமை வரி ரூ. 1.60 என்பது மாற்றம் இன்றி அப்படியே இருக்கும். இந்த நடவடிக்கைகள் மூலம் ரூபாய் [illegible] கோடி கூடுதல் வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

104. மேற்கூறிய வரி விதிப்பு நடவடிக்கைகள் மூலம் ஒட்டு மொத்தமாக ரூபாய் 54 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும்.

105. நுகர்வோர்களுக்கு ஏற்படக்கூடிய அல்லல்களைப் போக்கவும், பொருளாதாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த துறைகளின் வளர்ச்சி பாதிக்காத வகையிலும் விற்பனை வரி விதிப்பு நடவடிக்கைகள் அமைவதற்காக, விற்பனை வரி அமைப்பை, அரசு, அவ்வப்போது ஆய்வு செய்தும் பரிசீலித்தும் வந்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். பல்வேறு பொருட்களின் மீதான பல முனை வரியை ஒரு முனை வரியாக மாற்ற வேண்டும் என்று வணிகர்கள் கோரி வந்துள்ளார்கள். வரி ஏய்ப்பைத் தவிர்க்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் பின்னணியில் இந்த கோரிக்கைகளைப் பரிசீலிக்க வேண்டி உள்ளது. தொடக்க முயற்சியாக, எல்லோராலும் உபயோகப்படுத்தப்படும் மிளகாய், புளி, மஞ்சள், கொத்துமல்லி, மிளகு ஆகிய ஒரு சில வேளாண்மைப் பண்டங்கள் மீது தற்பொழுதுள்ள 5 விழுக்காடு பல முனை வரியை 8 விழுக்காடு ஒரு முனை வரியாக மாற்ற உத்தேசிக்கிறேன். இந்த மாற்றத்தால் சந்தையில் இப் பண்டங்களின் விலை குறையும் என்பதால் நுகர்வோர் அனைவரும் இதை வரவேற்பர் என்று உறுதியாக நம்புகிறேன். இதனால் சிறு வர்த்தகர்கள், சில்லறை வியாபாரிகள் ஆகியோருடைய பிரச்சினைகள் குறையும். வரி விதிப்பு நடைமுறைகளை எளிதாக்கவும் சீராக்கவும் உதவும் இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசுக்கு வணிகப் பெருமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்குவர் என்று எதிர்பார்க்கிறேன்.

106. விவசாய விளைப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியில் ஒரு பகுதியாக சிறு உழவர்கள் மற்றும் சொற்ப நில உழவர்களுக்கு உதவி செய்யும் வகையிலும், தற்பொழுதுள்ள இயற்கை உரங்களின் Manurse மீதான 5 விழுக்காடு பல முனை வரியை ஒட்டு மொத்தமாகத் தள்ளுபடி செய்ய உத்தேசிக்கப்படுகிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 26

107. தொழில் நுட்பப் புதுமைகளைப் புகுத்த முயற்சி மேற்கொண்டுள்ள இக் கால கட்டத்தில் மின்னணுவியல் தொழிலும் மற்றும் கணக்கிடு பொறிகளும் மிக முக்கியப் பங்கேற்கின்றன. தொழில் வளர்ச்சியில் இத்துறைக்குள்ள முக்கியத்துவத்தின் அடிப்படையில், இத் தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு இப்பொருட்கள் மீது தற்பொழுது விதிக்கப்படும் 12 விழுக்காடு விற்பனை வரி 10 விழுக்காடாகக் குறைக்கப்படும்.

108. இந் நடவடிக்கைகள் காரணமாக ரூபாய் 5 கோடி அளவில் வரி இழப்பு ஏற்படக்கூடும். ஆகவே கூடுதல் நிகர வருவாய் ரூ. 49 கோடியாக இருக்கும். இதன் காரணமாக இறுதிப் பற்றாக்குறை ரூபாய் 264.20 கோடியாக இருக்கும்.

109. திட்ட நிதியுதவி, பொது மக்கள், வங்கிகள் ஆகியோரிடமிருந்து பெறப்படும் கடன் தொகையில் அதிக பங்கு ஆகியவை தொடர்பாக, கூடுதல் மத்திய உதவி குறித்து எடுக்கப்படும் முடிவின் பலனாக இப்பற்றாக்குறை கணிசமான அளவுக்குக் குறையுமென்று எதிர்பார்க்கிறோம். மேலும் 1984-85 ஆண்டிறுதியில் இருக்கக்கூடிய இறுதி பற்றாக் குறையைப் போக்க இந்திய அரசு சிறப்பாக உதவி அளிக்குமென்றும் நாம் எதிர்பார்க்கிறோம்.

110. எந்தக் கொள்கைகளையும். குறிக்கோள்களையும், திட்டங்களையும் மக்கள் மன்றத்தில் முன் வைத்துப் பெரும்பாலான மக்களின் அன்பையும், ஆதரவையும், நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்று, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் சீரிய தலைமையின்கீழ் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டோமோ, அவற்றைச் சிலபலவாக அடுத்தடுத்து நிறைவேற்றி வருவதிலே இந்த அரசு கண்ணுங்கருத்துமாக இருக்கின்றது.

111. இந்த நிதி நிலை அறிக்கை, சென்ற காலத்தில் நிறைவேற்றப்பட்ட பணிகளையும், எதிர்காலத்தில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்ற பணிகளையும், விளக்கமாகவும், தெளிவாகவும் சுட்டிக் காட்டியுள்ளது.



1985 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

112. இந்த நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு, ஆய்வுரைகள் வழங்க இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஆழ்ந்த அறிவோடும், தெளிந்த சிந்தனையோடும், தூய நோக்கத்தோடும், பண்பட்ட மாண்போடும் எடுத்துரைக்கும் கருத்துக்கள் நாட்டை வளப் படுத்தவும் மக்களுக்கு நலம் பயக்கவும் பேருதவி புரியும் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் அன்பும், ஆதரவும், ஒத்துழைப்பும் அவையின் புகழை நிலைநாட்டவும், விவாதம் பயன்பட அமையவும் பெரிதும் உதவி புரியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

113. இந்த நிதிநிலை அறிக்கையை உருவாக்கிட எனக்குச் சிறப்பான முறையில் உதவியையும், ஒத்துழைப்பையும் நல்கிய நிதித் துறைச் செயலாளர் திரு. சி. இராமச்சந்திரன் அவர்களுக்கும் அவருடன் இணைந்து நின்று அரும் பணியாற்றிய அதிகாரிகள்—அலுவலாளர்கள் ஆகியோர்க்கும், அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்தோர்க்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

114. 1985-86 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை அன்புடன் ஏற்குமாறு அவையினரை விழைந்து கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம்.

(பிற்பகல் 4.35)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்று அவையில் என் அனுமதியின்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எழுப்பிய பிரச் சினையும், அதுபற்றி அவர் தெரிவித்த கருத்துக்களும் முழுதாக அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. எனவே, அவைகளை பத்திரிகைகள் பிரசுரிக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய மேலவை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 27—3—1985 புதன்கிழமை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 4-37)

[1985 மார்ச் 26

3. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

இல்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

49. 1985-86 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை அவை முன் வைத்து நிதி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

50. 1985-86 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட விளக்க நூல் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

51. 1985-86 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

52. 1985-86 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசின் நிதிநிலை விவரம் (வரவு-செலவுத் திட்டம்) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

53. நிதிநிலைக் குறிப்பு 1985-86 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

54. நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள் 1985-86 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

55. 1985-86 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி திட்டங்கள்) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

56. ஆண்டுத் திட்டம் 1985-86 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

57. 1985-86 ஆம் ஆண்டின் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

58. பதவிகள்—சம்பள வீதங்கள் பற்றிய விவர அறிக்கை, 1985-86 (ஆங்கிலம்).



1985 மார்ச் 26]

59. 1985-86 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

60. 1985-86 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 37—சாலைகளும் பாலங்களும், 52—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணி பற்றிய விவரங்கள் (ஆங்கிலம்).

61. 1985-86 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 39—சாலைகளும், பாலங்களும், 53—சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணி குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

62. விரிவான மானியக் கோரிக்கைகள், 1985-86—1, 2, 7, 8, 9, 11, 41, 47; 3, 13, 14, 15, 16; 4, 5, 6, 12; 10, 22; 20, 49; 17, 18, 19; 21, 25, 45, 55; 23, 28, 35; 24, 26, 27, 48, 50, 56; 30, 31, 32; 29, 33, 34; 36, 51; 37, 38, 52; 39, 53; 40, 44, 54; 42, 46, 58; 43, 57. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

இணைப்பு 49 1985 மார்ச் 26]

இணைப்பு I.

தமிழ்நாடு வருவாய்க் கணக்கில் வரவினமும் செலவினமும்.

அ. வருவாய்.

பழைய வகைப்பாடு.

| பெருந் தலைப்பு. (1) | 1938–39. (2) | 1967–68. (3) | 1968–69. (4) | 1969–70. (5) | 1970–71. (6) | 1971–72. (7) | 1972–73. (8) | 1973–74. (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| கூட்டு நிறுவன வரி நீங்கலாக, ஏனைய வருமான வரிகள்— | | | | | | | | |
| வருமான வரியில் பங்கு | 22.50 | 14,60.13 | 16,27.70 | 24,04.96 | 29,46.82 | 37,79.87 | 40,11.98 | 39,52.05 |
| வேளாண்மை வருமான வரி | .. | 1,61.71 | 1,88.05 | 1,97.28 | 1,83.25 | 2,01.14 | 2,17.52 | 2,17.20 |
| சொத்துரிமை வரி | .. | 1,19.57 | 55.38 | 58.87 | 63.78 | 76.23 | 85.21 | 1,42.95 |
| நிலவரி— | | | | | | | | |
| பாசனத்திற்குரிய பகுதி உட்பட, பெரு மொத்த வருவாய் | 7,00.78 | 6,57.89 | *3,28.67 | *3,20.87 | *4,14.92 | *4,49.08 | *7,36.28 | *7,84·53 |
| ஆயத் தீர்வை | 3,72.23 | 76.06 | 84.49 | 1,16.72 | 1,39.87 | 22,22.55 | 39,15.30 | 56,46.05 |
| வண்டிகள் மீது வரி | 81.22 | 16,83.26 | 18,65.17 | 19,46.98 | 21,84.15 | 22,99.34 | 26,15.24 | 27,62.74 |
| விற்பனை வரி | .. | 56,47.74 | 61,12.04 | 72,15.47 | 81,85.51 | 98,97.11 | 1,14,01.77 | 1,32,24.68 |
| ஏனைய வரிகளும், தீர்வைகளும் | 3.19 | 15,22.00 | 16.70,15 | 18,04.43 | 20,68.77 | 22,00.35 | 18,07.03 | 17,87.97 |
| முத்திரைத் தாள்கள் (நிகர வருவாய்) | 1,73.37 | 11,04.89 | 10,91.13 | 12.77,09 | 13,42.44 | 14,35.64 | 15,77.37 | 21,63.22 |
| பத்திரப் பதிவு | 32.70 | 2,29.81 | 2,59.52 | 2,76.11 | 3,35.95 | 3,36.60 | 3,45.41 | 3,99.17 |
| வட்டி | 19.73 | 20,63.67 | 31,17.60 | 19,01.61 | 19,36.75 | 31,20.94 | 28,32.61 | 16,75.51 |
| நீதி நிர்வாகம் | 15.39 | 1,37.91 | 1,55.30 | 1,80.15 | 1,81.00 | 1,36.11 | 1,11.89 | 1,22.69 |
| சிறைச்சாலைகள் | 5.98 | 41.32 | 53.59 | 63.11 | 73.85 | 76.43 | 80.76 | 87.94 |
| காவல் துறை | 5.66 | 56.44 | 57.12 | 67.17 | 49.98 | 1,05.52 | 96.12 | 1,35.13 |
| பல்வகைத் துறைகள் | 7.62 | 60.57 | 2,35.75 | 2,25.22 | 1,51.76 | 1,45.65 | 1,87.43 | 1,58.77 |
| துறைமுகங்களும், கப்பலுக்கு வழிகாட்டலும் | 44.67 | .. | .. | .. | .. | .. | .. | .. |
| கல்வி | 8.35 | 1,80.14 | 2,64.52 | 2,08.44 | 1,31.77 | 2,08.02 | 1,97.37 | 5,75.24 |
| மருத்துவம் | 10.25 | 1,86.09 | 1,02.39 | 2,94.14 | 2,60.08 | 3,24.12 | 3,75.26 | 3,57.78 |

* பாசனத்திற்குரிய பகுதி நீங்கலாக.

## இணைப்பு—தொடர்ச்சி.

### தமிழ்நாடு வருவாய்க் கணக்கில் வரவினமும் செலவினமும்—தொடர்ச்சி.

அ. வருவாய்—தொடர்ச்சி.

பழைய வகைப்பாடு—தொடர்ச்சி.

| பெருந் தலைப்பு. (1) | 1938–39. (2) | 1967–68. (3) | 1968–69. (4) | 1969–70. (5) | 1970–71. (6) | 1971–72. (7) | 1972–73. (8) | 1973–74. (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | | | | |
| பொதுச் சுகாதாரம் | 2.59 | 15.08 | 18.07 | 33.78 | 20.03 | 26.61 | 22.63 | 15.29 |
| குடும்ப நலன் | .. | .. | .. | .. | .. | .. | 0.92 | 2.20 |
| வேளாண்மை | 3.12 | 6,12.85 | 6,01.02 | 8,29.03 | 7,38.05 | 9,84.73 | 11,58.86 | 16,08.01 |
| கால்நடை வளர்ப்பு | 1.02 | 41.50 | 41.19 | 40.51 | 40.30 | 59.24 | 61.08 | 42.83 |
| கூட்டுறவு | 4.18 | 59.79 | 60.91 | 89.39 | 86.23 | 1,36.35 | 1,24.40 | 1,66.19 |
| தொழில்கள் | 18.85 | 2,67.15 | 3,81.71 | 3,09.37 | 3,38.20 | 2,75.18 | 3,40.34 | 3,37.31 |
| சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணி உள்ளாட்சி மேம்பாட்டுப் பணிகள் | .. | 17.39 | 12.16 | 10.99 | 10.82 | 12.83 | 13.08 | 32.69 |
| பல்வகை, சமூக, மேம்பாட்டு நிறுவனங்கள் | .. | 82.99 | 3,55.11 | 3,71.79 | 4,26.24 | 4,74.75 | 2,80.45 | 2,43.06 |
| பாசனம்— | | | | | | | | |
| நேரடி வருவாய் | 6.31 | 1,79.37 | 1,93.16 | 2,34.43 | 2,19.46 | 2,88.62 | 57.81 | 1,96.18 |
| (கழிக்கவும்)—நடைமுறைச் செலவுகள் | (—)38.39 | † | † | † | † | † | † | † |
| நிகர வருவாய்கள் | (—)32.08 | 1,79.37 | 1,93.16 | 2,34.43 | 2,19.46 | 2,88.62 | 57.81 | 1,96.18 |
| நேரடி வருவாய் | 1.99 | 23.60 | 1,60.19 | 1,39.19 | 1,24.79 | 1,52.80 | 7.22 | 9.27 |
| பொதுப் பணிகள் | 25.12 | 1,31.20 | 1,45.81 | 1,60.27 | 1,99.48 | 1,98.11 | 2,21.89 | 2,88.92 |
| மின்சாரத் திட்ட (பெரு மொத்த) வருவாய் | 42.51 | .. | .. | .. | .. | .. | .. | .. |
| கழிக்கவும்—நடைமுறைச் செலவுகள் | (—)24.81 | .. | .. | .. | .. | .. | .. | .. |
| நிகர வருவாய்கள் | 17.70 | .. | .. | .. | .. | .. | .. | .. |
| சாலை, நீர்வழிப் போக்குவரத்துத் திட்டங்கள்-மொத்த வருவாய் | .. | 11,59.50 | 15,66.85 | 17,64.26 | 17,02.39 | 18,19.87 | 12,54.26 | 14,67.45 |
| நடைமுறைச் செலவுகள் | † | † | † | † | † | † | † | † |
| நிகர வருவாய்கள் | .. | 11,59.50 | 15,66.85 | 17,64.26 | 17,02.39 | 18,19.87 | 12,54.26 | 14,67.45 |

† 1962 ஏப்ரல் 1ஆம் தேதி முதல் செலவினமாகக் காட்டப்பட்டுள்ளது.

இணைப்பு

தமிழ்நாடு வருவாய்க் கணக்கில்

அ.

பழைய



I—தொடர்ச்சி.

வரவினமும் செலவினமும்—தொடர்ச்சி.

வருவாய்—தொடர்ச்சி.

வகைப்பாடு—தொடர்ச்சி.

(ரூபாய் இலட்சத்தில்.)

| பெருந் தலைப்பு. | 1938–39. | 1967–68. | 1968–69. | 1969–70. | 1970–71. | 1971–72. | 1972–73. | 1973–74. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| ஒய்வூதியம், ஏனைய ஒய்வுகால நலன்கள் குறித்த பங்குத் தொகைகளும், வசூல்களும் .. .. .. .. | 2.88 | 34.10 | 33.53 | 37.36 | 41.77 | 72.34 | 58.03 | 76.44 |
| எழுதுபொருள்-அச்சுத் துறை .. .. .. .. | 3.96 | 58.59 | 60.33 | 51.33 | 60.92 | 68.30 | 35.68 | 37.24 |
| காட்டுவளம் .. .. .. .. .. .. .. | 45.63 | 3,38.65 | 3,36.71 | 3,35.81 | 3,66.08 | 4,55.99 | 4,90.59 | 7,36.51 |
| பல்வகை .. .. .. .. .. .. .. | 14.58 | 1,00.14 | 1,71.64 | 2,40.78 | 9,78.02 | 9,54.46 | 4,08.74 | 3,89.23 |
| மத்திய ஆயத் தீர்வையில் மாநில அரசின் பங்கு .. .. | * | 17,79,71 | 22,01.99 | 22,29.03 | 27,23.57 | 33,61.96 | 40,11.14 | 45,19.69 |
| மத்திய அரசின் உதவி மானியங்கள் .. .. .. .. | .. | 28,76.04 | 41,40,62 | 26,51.57 | 25,96.15 | 36,41.70 | 46,33.69 | 42,24.00 |
| மத்திய, மாநில, யூனியன் நேரடி ஆட்சிப் பகுதி அரசுகளிடையே பல்வகைச் சரிக்கட்டல்கள் .. .. .. .. .. | 0.27 | 1.29 | 1.33 | 1.27 | 2.56 | 2.98 | 3.11 | 3.70 |
| வணிக நிறுவனங்களிடமிருந்தும் ஏனைய நிறுவனங்களிடமிருந்தும் ஆதாயப் பங்கு வீதங்கள் முதலியன .. .. .. | .. | 14.36 | 41.37 | 2.23 | 63.58 | 32.82 | 29.55 | 39.91 |
| ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| சிறப்பு வருவாய்கள் .. .. .. .. .. .. | .. | 1,57.30 | † | † | † | † | † | † |
| தேசிய நெருக்கடி தொடர்பான வருவாய்கள் .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| பெரு மொத்தம் .. | 16,13.45 | 2,33,39.30 | 2,77,92.21 | 2,80,91.01 | 3,13,89.29 | 4,00,34.34 | 4,38,08.11 | 4,86,29.74 |

* "மத்திய ஆயத் தீர்வைகள்" என்பதன் கீழ் மறுவகைபாடு செய்யப்பட்டுள்ளது

† "XXI பல்வகைத் துறைகள்"

[1985 மார்ச் 26

## இணைப்பு

தமிழ்நாடு வருவாய்க் கணக்கில்

அ. வருவாய்

திருத்த

| பெருந் தலைப்பு எண். | பெருந் தலைப்பு. | 1974–75 கணக்குகள். | 1975–76 கணக்குகள். | 1976–77 கணக்குகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 021 | கூட்டு நிறுவன வரி நீங்கலாக, ஏனைய வருமான வரிகள். | 44,45.03 | 58,28.79 | 51,78.60 |
| 022 | வேளாண்மை வருவாய்மீது வரி | 2,10.53 | 2,39.50 | 2,44.08 |
| 023 | உணவக வருவாய்மீது வரி .. | .. | .. | .. |
| 029 | நில வரி .. .. .. | 1,72.01 | 11,53,49 | 5,08.65 |
| 030 | முத்திரைத்தாள்கள், பத்திரப் பதிவுக் கட்டணங்கள். | 25,77.49 | 23,89.02 | 22,21.78 |
| 031 | சொத்துரிமை வரி .. .. | 78.79 | 65.27 | 79.14 |
| 035 | வேளாண்மை நிலம் நீங்கலாக, ஏனைய இயங்காச் சொத்து மீது வரிகள். | 2,26.88 | 2,16.22 | 2,69.14 |
| 039 | மாநில ஆயத் தீர்வை .. .. | 25,21.81 | 3,10.01 | 4,66.32 |
| 040 | விற்பனை வரி .. .. .. | 1,87,87.87 | 2,08,93.13 | 2,29,34.29 |
| 041 | வண்டிகள் மீது வரிகள் .. | 38,87.42 | 44,00.61 | 48,58,94 |
| 042 | சரக்குகள்-பயணிகள் மீது வரிகள் | 20.06 | .. | .. |
| 043 | மின்சாரத்தின் மீது வரிகளும் தீர்வைகளும். | 97.08 | 1,02.84 | 6,13.50 |
| 045 | பண்டங்கள்—பணிகள் மீதான ஏனைய வரிகளும் தீர்வைகளும். | 20,67.16 | 22,05.01 | 25,18.46 |
| 047 | ஏயைன வரி விதிப்புப் பணிகள் .. | .. | .. | .. |
| 049 | வட்டி வரவுகள் .. .. | 20,09,83 | 19,34.25 | 25,[illegible]5.28 |
| 050 | ஆதாயப் பங்குகளும், ஆதாயங்களும். | 38.76 | 35.94 | 59.12 |
| 051 | அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு. | 3.08 | 15.99 | 26.80 |
| 05[illegible] | காவல் துறை .. .. .. | 1,16.80 | 1,66.29 | 1,51.27 |
| 056 | சிறைச்சாலைகள் .. .. | 1,00.61 | 99.82 | 1,18.61 |
| 058 | எழுதுபொருள்-அச்சுத்துறை .. | 69.63 | 85.21 | 82.58 |
| 059 | பொதுப் பணிகள் .. .. | 1,61.24 | 1,24.92 | 82.17 |
| 065 | ஏனைய நிர்வாகப் பணிகள் .. | 3,87.15 | 6,77.10 | 6,73.03 |



1985 மார்ச் 26]

I—தொடர்ச்சி.

வரவினமும், செலவினமும்—தொடர்ச்சி.

—தொடர்ச்சி.

வகைப்பாடு—தொடர்ச்சி.

| பெருந் தலைப்பு எண். | பெருந் தலைப்பு. | 1977–78 கணக்குகள். | 1978–79 கணக்குகள். | 1979–80 கணக்குகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (6) | (7) | (8) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 021 | கூட்டு நிறுவன வரி நீங்கலாக, ஏனைய வருமான வரிகள். | 53,63.00 | 56,10.56 | 69,62.28 |
| 022 | வேளாண்மை வருவாய் மீது வரி | 5,17.13 | 10,31.97 | 6,82.29 |
| 023 | உணவக வருவாய் மீது வரி .. | .. | .. | .. |
| 029 | நில வரி .. .. .. | 5,55.17 | 6,84.62 | 8,08.14 |
| 030 | முத்திரைத் தாள்கள், பத்திரப் பதிவுக் கட்டணங்கள். | 27,61.82 | 35,09.84 | 39,12.34 |
| 031 | சொத்துரிமை வரி .. .. | 81.25 | 83.40 | 1,20.81 |
| 035 | வேளாண்மை நிலம் நீங்கலாக, ஏனைய இயங்காச் சொத்து மீது வரிகள். | 1,54.70 | 2,00.32 | 1,98.52 |
| 039 | மாநில ஆயத் தீர்வை .. .. | 4,18.81 | 3,32.82 | 5,18.04 |
| 040 | விற்பனை வரி .. .. .. | 2,41,86.60 | 2,93,52.29 | 3,24,77.50 |
| 041 | வண்டிகள் மீது வரிகள் .. | 49,44.76 | 57,10.65 | 68,57.14 |
| 042 | சரக்குகள்-பயணிகள் மீது வரிகள் | (—)0.01 | .. | .. |
| 043 | மின்சாரத்தின் மீது வரிகளும், தீர்வைகளும். | 1,29.42 | 12,61.73 | 3,66.07 |
| 045 | பண்டங்கள்—பணிகள் மீதான ஏனைய வரிகளும், தீர்வைகளும். | 24,72.52 | 26,54.07 | 28,16.46 |
| 047 | ஏனைய வரி விதிப்புப் பணிகள் | .. | .. | .. |
| 049 | வட்டி வரவுகள் .. .. | 28,82.66 | 36.21.20 | 38,47.02 |
| 050 | ஆதாயப் பங்குகளும் ஆதாயங்களும் | 65.62 | 1,17.59 | 1,14.11 |
| 051 | அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழு. | 12.11 | 14.71 | 7.64 |
| 055 | காவல் துறை .. .. .. | 1,29.05 | 1,34.47 | 1,56.99 |
| 056 | சிறைச்சாலைகள் .. .. | 1,24.99 | 1,14.02 | 80.43 |
| 058 | எழுதுபொருள்-அச்சுத்துறை | 81.02 | 62,22 | 1,45.27 |
| 059 | பொதுப் பணிகள் .. .. | 83.86 | 88.96 | 96.58 |
| 065 | ஏனைய நிர்வாகப் பணிகள் .. | 5,90.70 | 5,73.04 | 7,55,82 |

[1985 மார்ச் 26

இணைப்பு I

தமிழ்நாடு வருவாய்க் கணக்குகள்

அ. வருவாய்

திருத்த வகைப்பாடு

| பெருந் தலைப்பு எண். (1) | பெருந்தலைப்பு. (2) | 1980–81 கணக்குகள். (9) | 1981–82 கணக்குகள். (10) | 1982–83 கணக்குகள். (11) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 021 | கூட்டு நிறுவன வரி நீங்கலாக, ஏனைய வருமான வரிகள். | 80,63.99 | 81,91.62 | 91,06.28 |
| 022 | வேளாண்மை வருவாய்மீது வரி | 5,68.38 | 4,34.97 | 2,73.18 |
| 023 | உணவக வருவாய் மீது வரி .. | 3.22 | 6.60 | .. |
| 029 | நில வரி .. .. .. | (—) 4,34.30 | 9,66.15 | 10,16.55 |
| 030 | முத்திரைத் தாள்கள், பத்திரப் பதிவுக் கட்டணங்கள். | 44,92.08 | 54,28.93 | 62,72.86 |
| 031 | சொத்துரிமை வரி .. .. | 33.47 | 2,13.62 | 1,32.47 |
| 035 | வேளாண்மை நிலம் நீங்கலாக, ஏனைய இயங்காச் சொத்து மீது வரிகள். | 2,75.26 | 2,44.12 | 2,96.18 |
| 039 | மாநில ஆயத் தீர்வை .. .. | 12,56.48 | 1,10,38.57 | 1,52,12.95 |
| 040 | விற்பனை வரி .. .. .. | 4,56,88.49 | 5,43,58.42 | 6,53,82.14 |
| 041 | வண்டிகள் மீது வரிகள் .. | 81,33.15 | 73,28.04 | 77,93.34 |
| 042 | சரக்குகள்-பயணிகள் மீது வரிகள் | .. | .. | .. |
| 043 | மின்சாரத்தின் மீது வரிகளும் தீர்வைகளும். | 2,82.94 | 3,51.71 | 4,95.22 |
| 045 | பண்டங்கள் – பணிகள் மீதான ஏனைய வரிகளும் தீர்வைகளும் | 36,43.93 | 40,89.45 | 44,10.10 |
| 047 | ஏனைய வரிவிதிப்புப் பணிகள் .. | 4.83 | 2.85 | 0.96 |
| 049 | வட்டி வரவுகள் .. .. | 1,34,18.95 | 48,29.51 | 48,36.57 |
| 050 | ஆதாயப் பங்குகளும் ஆதாயங்களும் | 1,17.70 | 76.76 | 1,20.28 |
| 051 | அரசுப் பணியாளர் தேர்வுஆணைக்குழு | 13.11 | 21.84 | 55.15 |
| 055 | காவல் துறை .. .. .. | 16.91 | 1,97.14 | 2,37.91 |
| 056 | சிறைச்சாலைகள் .. .. | 1.41.20 | 1,60.13 | 1,53.57 |
| 058 | எழுதுபொருள்-அச்சுத்துறை | 54.18 | 78.70 | 82.46 |
| 059 | பொதுப் பணிகள் .. | 1,12.36 | 1,24.25 | 2,43.90 |
| 065 | ஏனைய நிர்வாகப் பணிகள் .. | 7,15.25 | 7,34.22 | 4,86.02 |



1985 மார்ச் 26]

—தொடர்ச்சி.

வரவினமும் செலவினமும்—தொடர்ச்சி.

—தொடர்ச்சி.

—தொடர்ச்சி.

| பெருந் தலைப்பு எண். (1) | பெருந்தலைப்பு. (2) | 1983–84 கணக்குகள். (12) | 1984–85 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (13) | 1984–85 திருத்த மதிப்பீடு. (14) | 1985–86 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (15) |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 021 | கூட்டு நிறுவன வரி நீங்கலாக, ஏனைய வருமான வரிகள். | 94,31.70 | 1,03,11.00 | 98,63.00 | 98,74.00 |
| 022 | வேளாண்மை வருவாய் மீது வரி | 4,05.27 | 2,84.00 | 9,90.01 | 5,90.01 |
| 023 | உணவக வருவாய் மீது வரி .. | .. | .. | .. | .. |
| 029 | நில வரி .. .. .. | 6,33.72 | 9,88.31 | 16,17.16 | 21,25.76 |
| 030 | முத்திரைத் தாள்கள், பத்திரப் பதிவுக் கட்டணங்கள். | 67,27.00 | 72;94.63 | 80,12.08 | 82,44.89 |
| 031 | சொத்துரிமை வரி .. .. | 1,02.68 | 1,05.00 | 1,12.00 | 1,14.00 |
| 035 | வேளாண்மை நிலம் நீங்கலாக, ஏனைய இயங்காச் சொத்து மீது வரிகள். | 3,13.35 | 3,59.99 | 3,49.41 | 3,49.41 |
| 039 | மாநில ஆயத் தீர்வை .. .. | 2,19,87.56 | 2,03,21.15 | 2,20,82.26 | 2,22,22.75 |
| 040 | விற்பனை வரி .. .. .. | 7,01,51.68 | 8,16,00.00 | 8,60,60.00 | 9,63,01.00 |
| 041 | வண்டிகள் மீது வரிகள் .. | 90,58.22 | 91 ,60.40 | 1,01,41.90 | 1,00,39.65 |
| 042 | சரக்குகள்-பயணிகள் மீது வரிகள் | .. | .. | .. | .. |
| 043 | மின்சாரத்தின் மீது வரிகளும் தீர்வைகளும். | 5,87.80 | 5,05.18 | 6,43.73 | 6,64.03 |
| 045 | பண்டங்கள்—பணிகள் மீதான ஏனைய வரிகளும் தீர்வைகளும். | 46,59.52 | 46,08.00 | 51,68.00 | 56,35.00 |
| 047 | ஏனைய வரி விதிப்புப் பணிகள் .. | 0.20 | 0.01 | 0.01 | 0.01 |
| 049 | வட்டி வரவுகள் .. .. | 51,94.06 | 51,94.87 | 58,60.50 | 61,75.29 |
| 050 | ஆதாயப் பங்குகளும் ஆதாயங்களும் | 1,59.38 | 1,81.48 | 1,60.55 | 1,72.58 |
| 051 | அரசுப் பணியார் தேர்வு ஆணைக் குழு. | 16.91 | 21.64 | 25.89 | 59.26 |
| 055 | காவல் துறை .. .. | 2,71.79 | 2,15.81 | 3,99.24 | 4,41.75 |
| 056 | சிறைச்சாலைகள் .. .. | 1,34.06 | 1,55.00 | 1,32.95 | 1,30.85 |
| 058 | எழுதுபொருள்-அச்சுத்துறை .. | 94.58 | 1,52.17 | 1,62.69 | 85.54 |
| 059 | பொதுப் பணிகள் .. | 1,84.87 | 2,08.23 | 1,50.12 | 1,49.26 |
| 065 | ஏனைய நிர்வாகப் பணிகள் .. | 4,81.72 | 8,02.59 | 10,98.38 | 6,06.86 |

## இணைப்பு I

### 1. தமிழ்நாடு வருவாய்க் கணக்கில் வரவினமும் செலவினமும்—தொடர்ச்சி.

#### அ. வருவாய்—தொடர்ச்சி.

#### திருத்த வகைப்பாடு—தொடர்ச்சி.

—தொடர்ச்சி.

| பெருந் தலைப்பு எண். | பெருந் தலைப்பு. | 1974–75 கணக்குகள். | 1975–76 கணக்குகள். | 1976–77. கணக்குகள். | 1977–78 கணக்குகள். | 1978–79 கணக்குகள். | 1979–80 கணக்குகள். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | | | |
| 066 | ஒய்வூதியம், ஏனைய ஓய்வுகால நலன்கள் குறித்த பங்குத் தொகைகளும் வசூல்களும். | 98.07 | 1,16.42 | 1,35.93 | 2,47.99 | 4,00.48 | 1,35.36 |
| 067 | உதவிக்கான பொருள்களும் சாதனமும் | 0.01 | .. | 34.11 | 3.44 | 3.11 | .. |
| 068 | பல்வகைப் பொதுவான பணிகள் | 3,33.85 | 3,15.47 | 3,22.34 | 5,85.85 | 5,36.84 | 5,63.17 |
| 077 | கல்வி .. .. .. | 5,94.40 | 7,38.90 | 6,26.50 | 10,04.86 | 11,73.32 | 12,31.97 |
| 078 | கலை-பண்பாடு .. .. | 3.84 | 3.22 | 11.88 | 15.72 | 11.34 | 7.15 |
| 080 | மருத்துவம் .. .. | 1,28.36 | 4,59.37 | 4,36.49 | 4,66.34 | 5,03.89 | 4,77.63 |
| 081 | குடும்ப நலத் திட்டம் .. .. | 2.14 | 6.11 | 3.26 | 5.77 | 17.39 | 24.42 |
| 082 | பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல். | 56.19 | 56.98 | 64.67 | 88.56 | 2,22.20 | 85.72 |
| 083 | வீட்டு வசதி .. .. .. | 20.90 | 42.92 | 68.26 | 1,16.72 | 99.57 | 1,20.17 |
| 084 | நகர்ப்பகுதி வளர்ச்சி .. .. | 1.67 | 1.93 | 1.52 | 2.46 | 2.74 | 7.26 |
| 085 | செய்தி-விளம்பரம் .. .. | 12.45 | 15.12 | 23.31 | 17.42 | 40.52 | 62.14 |
| 087 | தொழிலாளர் நலனும் வேலை வாய்ப்பும். | 39.36 | 70.03 | 68.71 | 75.39 | 79.10 | 82.93 |
| 088 | சமூகப் பாதுகாப்பும் நலனும் .. | 4,05.53 | 1,92.80 | 1,39.78 | 6,55.25 | 2,70.86 | 92.53 |
| 095 | சமூக-சமுதாய நலன் குறித்த ஏனைய பணிகள். | 6.71 | 15.89 | 13.43 | 9.16 | 11.23 | 67.95 |
| 098 | கூட்டுறவு .. .. .. | 1,48.87 | 2,17.34 | 2,11.01 | 1,99.38 | 1,73.92 | 2,30.15 |
| 104 | ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள். | 56.86 | 55.68 | 50.86 | 51.78 | 53.69 | 71.15 |
| 105 | வேளாண்மை .. .. .. | 9,92.73 | 13,80.92 | 11,68.61 | 14.82.27 | 14,13.44 | 11,74.82 |
| 106 | சிறு பாசனம், மண்வளப் பாதுகாப்பு, பகுதி மேம்பாடு. | | | | 77.72 | 1,53.52 | 1,03.64 |

இணைப்பு I

தமிழ்நாடு வருவாய்க் கணக்கில்

அ. வருவாய்

திருத்த வகைப்பாடு

| பெருந் தலைப்பு எண். | பெருந் தலைப்பு. | 1980-81 கணக்குகள். | 1981-82 கணக்குகள். | 1982-83 கணக்குகள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (9) | (10) | (11) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 066 | ஓயவூதியம், ஏனைய ஓய்வுகால நலன்கள் குறித்த பங்குத் தொகைகளும் வசூல்களும். | 2,73.76 | 1,57.07 | 1,78.8 |
| 067 | உதவிக்கான பொருள்களும் சாதனமும் | .. | .. | .. |
| 068 | பல்வகைப் பொதுவான பணிகள் | 5,53.35 | 8,10.03 | 9,43.2 |
| 077 | கல்வி .. .. .. | 11,93.69 | 6,67.22 | 6,59.6 |
| 078 | கலை-பண்பாடு .. .. | 7.31 | 7.44 | 8.3 |
| 080 | மருத்துவம் .. .. .. | 7,80.88 | 1,67.86 | 9.13.6 |
| 081 | குடும்ப நலத் திட்டம் .. .. | 22.01 | 5.27 | 17.8 |
| 082 | பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல். | 95.07 | 1.26.91 | 1,09. |
| 083 | வீட்டு வசதி .. .. .. | 1,29.55 | 1,17.74 | 1,51. |
| 084 | நகர்ப்பகுதி வளர்ச்சி .. .. | 12.27 | 12.98 | 13.1 |
| 085 | செய்தி-விளம்பரம் .. .. | 81.62 | 94.06 | 1,13. |
| 087 | தொழிலாளர் நலனும் வேலை வாய்ப்பும். | 86.31 | 93.19 | 1,05. |
| 088 | சமூகப் பாதுகாப்பும் நலனும் .. | 1,68.79 | 1,80.17 | 5,92. |
| 095 | சமூக-சமுதாய நலன் குறித்த ஏனைய பணிகள். | 1,04.55 | 1,37.83 | 1,80. |
| 098 | கூட்டுறவு .. .. .. | 2,10.07 | 2,13.15 | 2,16. |
| 104 | ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள். | 1,08.60 | 96.20 | 1,09. |
| 105 | வேளாண்மை .. .. | 14,63.52 | 17,69.55 | 20,49 |



—தொடர்ச்சி.

வரவினமும் செலவினமும்—தொடர்ச்சி

—தொடர்ச்சி.

—தொடர்ச்சி.

| பெருந் தலைப்பு எண். | பெருந் தலைப்பு. | 1983-84 வரவு-கணக்குகள். | 1984-85 வரவு-செலவுத்திட்ட மதிப்பீடு. | 1984-85 திருத்த மதிப்பீடு. | 1985-86 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (12) | (13) | (14) | (15) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 066 | ஓய்வூதியம், ஏனைய ஓய்வுகால நலன்கள் குறித்த பங்குத் தொகைகளும் வசூல்களும். | 2,00.00 | 1,91.59 | 2,40.90 | 2,39.08 |
| 067 | உதவிக்கான பொருள்களும் சாதனமும் | .. | .. | .. | .. |
| 068 | பல்வகைப் பொதுவான பணிகள் | 6,79.13 | 7,71.89 | 5,61.35 | 9,63.23 |
| 077 | கல்வி .. .. .. | 8,04.62 | 6,53.34 | 8,02.25 | 8,07.00 |
| 078 | கலை-பண்பாடு .. .. | 1,06.97 | 2,05.79 | 2,08.39 | 2,08.44 |
| 080 | மருத்துவம் .. .. .. | 7,51.70 | 8,59.04 | 9,27.14 | 10,24.92 |
| 081 | குடும்ப நலத் திட்டம் .. .. | 51.53 | 31.01 | 41.01 | 41.01 |
| 082 | பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல். | 1,85.16 | 1,51.74 | 1,81.27 | 1,84.21 |
| 083 | வீட்டு வசதி .. .. .. | 1,89.06 | 1,70.01 | 1,94.07 | 1,85.04 |
| 084 | நகர்ப்பகுதி வளர்ச்சி .. .. | 16.57 | 10.37 | 10.40 | 10.47 |
| 085 | செய்தி-விளம்பரம் .. .. | 85.86 | 1,23.38 | 1,38.08 | 1,38.58 |
| 087 | தொழிலாளர் நலனும் வேலை வாய்ப்பும். | 1,74.41 | 1,14.19 | 1,18.11 | 1,27.70 |
| 088 | சமூகப் பாதுகாப்பும் நலனும் .. | 4,78.58 | 2,80.86 | 15,35.35 | 15,46.28 |
| 095 | சமூக-சமுதாய நலன் குறித்த ஏனைய பணிகள். | 2,09.65 | 11.20 | 12.05 | 14.05 |
| 098 | கூட்டுறவு .. .. .. | 3,27.52 | 2,43.65 | 2,73.78 | 2,72.34 |
| 104 | ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள். | 61.21 | 1,06.36 | 1,09.63 | 1,11.66 |
| 105 | வேளாண்மை .. .. | 34,95.45 | 27,77.55 | 32,64.52 | 33,33.41 |
| 106 | சிறு பாசனம், மண்வளப் பாதுகாப்பு, பகுதி மேம்பாடு. | 2,69.85 | 1,87.53 | 3,86.85 | 3,04.76 |

[1985 மார்ச் 26

இணைப்பு I

தமிழ்நாடு வருவாய்க் கணக்கில்

அ. வருவாய்

திருத்த வகைப்பாடு

| பெருந் தலைப்பு எண். | பெருந்தலைப்பு. | 1974–75 கணக்குகள். | 1975–76 கணக்குகள். | 1976–77 கணக்குகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 109 | உணவு .. .. .. | 0.01 | .. | 0.01 |
| 110 | கால்நடை வளர்ப்பு .. .. | 41.07 | 56.77 | 82.65 |
| 111 | பால் பண்ணை வளர்ச்சி .. | 88.08 | 33.98 | 34.62 |
| 112 | மீனளம் .. .. .. | 46.39 | 32.74 | 63.87 |
| 113 | காட்டு வளம் .. .. .. | 9,21.80 | 8,45.72 | 12,85.91 |
| 114 | சமுதாய நல வளர்ச்சி .. .. | 35.89 | 34.88 | 71.31 |
| 120 | தொழில்கள் .. .. .. | 1,35.66 | 1,54.43 | 1,56.38 |
| 121 | கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும். | 73.98 | 67.32 | 1,09.82 |
| 128 | சுரங்கங்களும் கனிப் பொருள்களும் | 0.01 | .. | 0.07 |
| 131 | நீர், மின்விசை உற்பத்தி வளர்ச்சிப் பணிகள். | 0.24 | 0.08 | 1.09 |
| 133 | பாசன, நீர்வழி, வடிகால், வெள் ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள். | 1,80.44 | 1.10.08 | 1,13.51 |
| 135 | துறைமுகங்கள், கலங்கரை விளக் கங்கள், கப்பல் போக்குவரத்து. | 0.01 | 7.28 | 11.89 |
| 137 | சாலைகளும் பாலங்களும் .. | 1,73.30 | 1.78.02 | 2,40.11 |
| 138 | சாலை, நீர்வழிப் போக்குவரத்துப் பணிகள். | 14,44.08 | 4,49.91 | 1,21.16 |
| 139 | சுற்றுலா .. .. .. | (—) 0.12 | 0.24 | 0.77 |
| 160 | மத்திய அரசிடமிருந்து உதவி மானியங்கள். | 27,12.94 | 32,46.21 | 54,10.52 |
| 162 | மத்திய ஆயத் தீர்வை வருவாயில் மாநிலத்தின் பங்கு. | 52.11.47 | 63,43.15 | 75,92.81 |
| | மொத்தம் .. | 5,20,28.76 | 5,63,35.72 | 6,28,98.13 |



இணைப்பு 63

1985 மார்ச் 26]

| 488 | சமூகப் பாதுகாப்பு-நலன் குறித்த மூலதனச் செலவு. | 1,56.70 | 1,32.72 | 1,31.55 |
| 495 | ஏனைய சமூக-சமுதாய நலப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 14.49 | 22.26 | 7.61 |
| 498 | கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு. | 2,93.47 | 10,95.21 | 8,10.26 |
| 500 | பொது நிதியுதவி-வர்த்தக நிறுவனங்களில் முதலீடுகள். | 3.75 | .. | .. |
| 504 | ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | (—)25.42 | (—)56.89 | (—)49.20 |
| 505 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. | (—)4,69.62 | (—)11.17 | 87.63 |
| 506 | சிறுபாசனம், மண்வளப் பாதுகாப்பு, பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு. | 1,39.28 | 1,25.65 | 3.19.17 |
| 509 | உணவு குறித்த மூலதனச் செலவு. | 4,56.02 | (—)2.91 | (—)8 63 |
| 510 | கால்நடை வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு. | 51.19 | 1.53 | 14 12 |

இணைப்பு II—தொடர்ச்சி.

தமிழ்நாடு வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவினம்—பெருந் தலைப்பு வாரியான விவரங்கள்—தொடர்ச்சி.

திருத்த வகைப்பாடு.

| பெருந் தலைப்பு எண். (1) | பெருந் தலைப்பு. (2) | 1980–81 கணக்குகள். (9) | 1981–82 கணக்குகள். (10) | 1982–83 கணக்குகள். (11) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 459 | பொதுப் பணிகள் குறித்த மூல தனச் செலவு. | 3,09.66 | 6,99.45 | 8,99.58 |
| 465 | எழுதுபொருள்-அச்சுத் துறை. ஏனைய நிர்வாகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 8.00 | 80.24 | 13.99 |
| 477 | கல்வி, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு. | 4,27.17 | 4,77.61 | 6,21.10 |
| 480 | மருத்துவம், குறித்த மூலதனச் செலவு | 5,52.53 | 9,68.00 | 9,92.32 |
| 481 | குடும்ப நலத் திட்டம் குறித்த மூலதனச் செலவு. | 29.05 | 59.88 | 1,94.12 |
| 482 | பொதுச் சுகாதாரம், துப்புரவு குடிநீர் வழங்கல் குறித்த மூல தனச் செலவு. | 5.92 | 8.82 | 10.34 |
| 483 | வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு. | 3,55.02 | 3,36.98 | 5,25.98 |
| 484 | நகர்ப்பகுதி வளர்ச்சி குறித்த மூல தனச் செலவு. | 2.77 | 0.17 | 0.19 |
| 485 | செய்தி-விளம்பரம் குறித்த மூல தனச் செலவு. | 0.61 | 8.18 | 40.63 |
| 486 | ஒலிபரப்பு குறித்த மூலதனச் செலவு. | .. | .. | .. |
| 488 | சமூகப் பாதுகாப்புகள் குறித்த மூலதனச் செலவு. | 5,77.74 | 8,75.14 | 7,02.11 |
| 495 | ஏனைய சமூக-சமுதாய நலப்பணி கள் குறித்த மூலதனச் செலவு. | 22.14 | 32.64 | 24.54 |
| 498 | கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு. | 4,93.89 | 10,10.02 | 8,84.16 |
| 500 | பொது நிதியுதவி-வர்த்தக நிறு வனங்களில் முதலீடுகள். | .. | .. | .. |
| 504 | ஏனைய பொதுவான பொருளா தாரப் பணிகள் குறித்த மூல செலவு. | (—)52.28 | (—)53.92 | (—)51.46 |
| 505 | வேளாண்மை குறித்த மூலதனச் தனச்செலவு. | 1,36.58 | 44.76 | 2,69.10 |
| 506 | சிறுபாசனம், மண்வளப் பாது காப்பு, பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு. | 2,32.57 | 2,60.37 | 1,96.82 |
| 509 | உணவு குறித்த மூலதனச் செலவு. | 6,84.50 | .. | 16.54 |
| 510 | கால்நடை வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு. | 52.70 | 31.32 | 54.88 |



இணைப்பு II—தொடர்ச்சி.

தமிழ்நாடு வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவினம்—பெருந் தலைப்பு வாரியான விவரங்கள்—தொடர்ச்சி.

திருத்த வகைப்பாடு—தொடர்ச்சி.

| பெருந் தலைப்பு எண். (1) | பெருந் தலைப்பு. (2) | 1983–84 கணக்குகள். (12) | 1984–85 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (13) | 1984–85 திருத்த மதிப்பீடு. (14) | 1985–86 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (15) |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 459 | பொதுப் பணிகள் குறித்த மூல தனச் செலவு. | 9,37.50 | 11,89.37 | 9,35.85 | 10,09 55 |
| 465 | எழுதுபொருள்-அச்சுத், துறை ஏனைய நிர்வாகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 26.97 | 17.68 | 37.63 | 40.40 |
| 477 | கல்வி, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு. | 3,55.47 | 6,16.46 | 4,45.66 | 5,01.02 |
| 480 | மருத்துவம் குறித்த மூலதனச் செலவு. | 10,00.11 | 18,51.68 | 13,23,10 | 12,33.09 |
| 481 | குடும்ப நலத் திட்டம் குறித்த மூல தனச் செலவு. | 2,65.81 | 1,81.88 | 3,01.70 | 67.10 |
| 482 | பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூல தனச் செலவு. | 2,08.15 | 3,05.03 | 2,80.23 | 2,60.97 |
| 83 | வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு. | 10,72.05 | 10,65.02 | 8,45.57 | 4,44.73 |
| 84 | நகர்ப்பகுதி வளர்ச்சி குறித்த மூல தனச் செலவு. | .. | 0.01 | 0.01 | .. |
| 85 | செய்தி-விளம்பரம் குறித்த மூல தனச் செலவு. | 13.84 | 18.26 | 2,51 | 25.70 |
| 86 | ஒலிபரப்பு குறித்த மூலதனச் செலவு. | .. | .. | .. | .. |
| 88 | சமூகப் பாதுகாப்பு நலன் குறித்த மூலதனச் செலவு. | 6,09.63 | 6,12.70 | 6,17.09 | 4,34,82 |
| [illegible] | ஏனைய சமூக-சமுதாய நலப்பணி கள் குறித்த மூலதனச் செலவு. | 28.26 | 7.43 | 42.08 | 10.74 |
| [illegible] | கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு. | 4,55.99 | (—) 2,63.30 | 2,08.85 | 3,08.88 |
| 0 | பொது நிதியுதவி-வர்த்தக நிறு வனங்களில் முதலீடுகள். | 1,00.00 | .. | .. | .. |
| 4 | ஏனைய பொதுவான பொருளா தாரப் பணிகள் குறித்த மூல தனச் செலவு. | (—) 45.70 | (—) 32.41 | (—) 24.36 | (—) 24.23 |
| 505 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. | 4,02.88 | 7,69.75 | 5,27.07 | 8,25.12 |
| 506 | சிறுபாசனம், மண்வளப் பாது காப்பு, பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு. | 4,01.97 | 2,03.08 | 1,66.11 | 1,29.06 |
| 509 | உணவு குறித்த மூலதனச் செலவு. | 29.38 | 70.00 | 8,20.00 | 20.01 |
| 510 | கால்நடை வளர்ப்பு குறித்த மூல தனச் செலவு. | 24.55 | 21.63 | 12.38 | 10.57 |

இணைப்பு II—தொடர்ச்சி.

தமிழ்நாடு வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவினம்—பெருந் தலைப்பு வாரியான விவரங்கள்—தொடர்ச்சி.

திருத்த வகைப்பாடு—தொடர்ச்சி.

| பெருந் தலைப்பு எண். (1) | பெருந்தலைப்பு. (2) | 1974–75 கணக்குகள். (3) | 1975–76 கணக்குகள். (4) | 1976–77 கணக்குகள் (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 511 | பால்பண்ணை வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 5·47 | 2·77 | 6·99 |
| 512 | மீனளம் குறித்த மூலதனச் செலவு. | 71·68 | 48·66 | 21·68 |
| 513 | காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு. | 1,58·79 | 1,88·63 | 2,13·16 |
| 514 | சமுதாய நல வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 12·41 | 13·91 | 4·85 |
| 520 | தொழில் ஆராய்ச்சி-வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 2,09·65 | 2,78·30 | 4,50·09 |
| 521 | கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 63·18 | 32·58 | 80·29 |
| 522 | இயந்திரங்கள், பொறியியல் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 0·05 | .. | 35·7 |
| 523 | பெட்ரோலிய, இரசாயனப் பொருள் உரத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | .. | .. | .. |
| 525 | வான்வழிச் செய்தித் தொடர்பு—மின்னணுவியல் தொழில்களுக்கான மூலதனச் செலவு. | .. | .. | .. |
| 526 | நுகர்பொருள் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 13·49 | 44·96 | 2,65·51 |
| 528 | சுரங்கம் வெட்டுதல்—உலோக வியல் குறித்த மூலதனச் செலவு. | (—) 0·05 | 0·06 | 0·51 |
| 530 | தொழில் நிதி நிறுவனங்களில் முதலீடுகள். | .. | 50·00 | 1,25·00 |
| 533 | பாசன, நீர்வழி, வடிகால், வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | 9,69·48 | 17,67·04 | 26·31·20 |
| 534 | மின்விசைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | 0·01 | .. | .. |
| 535 | துறைமுகங்கள், கலங்கரை விளக்கங்கள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. | 68·65 | 51·68 | 12·89 |
| 537 | சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. | 4,59·97 | 5,11·92 | 6,71·87 |
| 538 | சாலை, நீர்வழிப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 5·11 | 1,24·18 | 20·54 |
| 544. | ஏனைய போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 20.00 | 10·00 | 15·80 |
| | மொத்தம் .. | 39,54·89 | 67,96·38 | 55·30·75 |



இணைப்பு II—தொடர்ச்சி.

தமிழ்நாடு வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவினம—பெருந்தலைப்பு வாரியான விவரங்கள் —தொடர்ச்சி.

திருத்த வகைப்பாடு—தொடர்ச்சி.

| பெருந் தலைப்பு எண். (1) | பெருந்தலைப்பு. (2) | 1977–78 கணக்குகள். (6) | 1978–79 கணக்குகள். (7) | 1979–80 கணக்குகள். (8) |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 511 | பால்பண்ணை வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 0·34 | (—) 1,32·82 | 0·32 |
| 512 | மீனளம் குறித்த மூலதனச் செலவு | 37·34 | 27·56 | 12·15 |
| 513 | காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு. | 2,83·97 | 3,05·29 | 4,46·68 |
| 514 | சமுதாய நல வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 3·71 | 0·62 | 10·19 |
| 520 | தொழில் ஆராய்ச்சி-வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 2,53·54 | 4,53·54 | 3,90·27 |
| 521 | கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 2,23·43 | 97·84 | 1,54·74 |
| 522 | இயந்திரங்கள், பொறியியல் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 11·06 | 0·04 | .. |
| 523 | பெட்ரோலிய, இரசாயனப் பொருள் உரத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | .. | .. | .. |
| 525 | வான்வழிச் செய்தித் தொடர்பு—மின்னணுவியல் தொழில்களுக்கான மூலதனச் செலவு. | .. | .. | .. |
| 526 | நுகர்பொருள் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 8·37 | 66·11 | 15·61 |
| 528 | சுரங்கம் வெட்டுதல்—உலோக வியல் குறித்த மூலதனச் செலவு. | 6·75 | 45·09 | ·99 |
| 530 | தொழில் நிதி நிறுவனங்களில் முதலீடுகள். | 1,00·00 | 2,00·00 | 50·00 |
| 533 | பாசன, நீர்வழி, வடிகால், வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | 16,64·86 | 18,05·69 | 18,32·17 |
| 534 | மின்விசைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | 1,47·30 | 1,45·46 | 47·63 |
| 535 | துறைமுகங்கள், கலங்கரை விளக்கங்கள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. | 3·00 | 3,01·39 | 50·75 |
| 537 | சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. | 5,62.65 | 5,07.88 | 9,37.68 |
| 538 | சாலை, நீர்வழிப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | (—)3,54.02 | 10.12 | 2,60.54 |
| 544 | ஏனைய போக்குவரத்து, சாலைப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 26·20 | 41·50 | 44·02 |
| | மொத்தம் .. | 40,52 80 | 58,34 06 | 67,80·24 |

இணைப்பு II—தொடர்ச்சி.

தமிழ்நாடு வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவினம்—
பெருந்தலைப்பு வாரியான விவரங்கள்—தொடர்ச்சி.

திருத்த வகைப்பாடு —தொடர்ச்சி.

| பெருந் தலைப்பு எண். | பெருந் தலைப்பு. | 1980–81 கணக்குகள். | 1981–82 கணக்குகள். | 1982–83 கணக்குகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (9) | (10) | (11) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 511 | பால்பண்ணை வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 16.62 | .. | 41.10 |
| 512 | மீனளம் குறித்த மூலதனச் செலவு. | 54.33 | 73.37 | 99.49 |
| 513 | காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு. | 6,27.53 | 9,57.62 | 12,16.73 |
| 514 | சமுதாய நல வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 30.92 | 61.34 | 80.60 |
| 520 | தொழில் ஆராய்ச்சி-வளர்ச்சி குறித்த மூலதனச் லெசவு. | 4,21.40 | 9,33.00 | 11,49.98 |
| 521 | கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 2,32.36 | 1,76.34 | 1,72.60 |
| 522 | இயந்திரங்கள், பொறியியல் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | .. | 36.40 | 1,22.85 |
| 523 | பெட்ரோலிய, இரசாயணப் பொருள் உரத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | .. | 0.02 | .. |
| 525 | வான்வழிச் செய்தித் தொடர்பு—மின்னணுவியல் தொழில்களுக்கான மூலதனச் செலவு. | .. | .. | 40.00 |
| 526 | நுகர்பொருள் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 69.27 | 27,74.48 | 4,73.79 |
| 528 | சுரங்கம் வெட்டுதல்—உலோகவியல் குறித்த மூலதனச் செலவு. | 12.35 | 10.98 | 16.46 |
| 530 | தொழில் நிதி நிறுவனங்களில் முதலீடுகள். | 50.00 | 3,00.00 | 4,20.00 |
| 533 | பாசன, நீர்வழி, வடிகால், வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | 19,19.17 | 21,57.29 | 37,49.36 |
| 534 | மின் விசைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | (—) 75.35 | (—) 29.50 | .. |
| 535 | துறைமுகங்கள், கலங்கரை விளக்கங்கள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. | 2,02.99 | 14.95 | 19.67 |
| 537 | சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. | 10,23.30 | 15,19.54 | 19,45.88 |
| 538 | சாலை, நீர்வழிப் போக்குவரத்து பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 40.00 | 4,59.00 | 51.04 |
| 544 | ஏனைய போக்குவரத்து, சாலைப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 42.20 | 68.59 | 78.65 |
| | மொத்தம் .. | 85,05.66 | 1,43,53.08 | 1,50.75.56 |



1985 மார்ச் 26]

இணைப்பு II—தொடர்ச்சி.

தமிழ்நாடு வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவினம்—
பெருந்தலைப்பு வாரியான விவரங்கள்—தொடர்ச்சி.

திருத்த வகைப்பாடு—தொடர்ச்சி.

| பெருந் தலைப்பு எண். | பெருந் தலைப்பு. | 1983–84 கணக்குகள். | 1984–85 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1984–85 திருத்த மதிப்பீடு. | 1985–86 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (12) | (13) | (14) | (15) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 511 | பால்பண்ணை வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 74.02 | 13.00 | 23.00 | 20.00 |
| 512 | மீனளம் குறித்த மூலதனச் செலவு. | 2,31.20 | 3,43.90 | 3,70.06 | 1,66.62 |
| 513 | காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு. | 15,46.11 | 15,80.43 | 16,66.00 | 15,90.23 |
| 514 | சமுதாய நல வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 53.73 | 4.92 | 8.31 | 35.01 |
| 529 | தொழில் ஆராய்ச்சி-வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 11,50.12 | 10,03.21 | 10,38.33 | 7,02.02 |
| 521 | கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 2,66.05 | 75.78 | 1,91.99 | 75.67 |
| 522 | இயந்திரங்கள், பொறியியல் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 10,69.62 | .. | .. | .. |
| 523 | பெட்ரோலிய, இரசாயணப் பொருள் உரத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | .. | .. | .. | .. |
| 525 | வான்வழிச் செய்தி தொடர்பு—மின்னணுவியல் தொழில்களுக்கான மூலதனச் செலவு. | 60.00 | 1,00.00 | 1,00.00 | 1,00.00 |
| 526 | நுகர்பொருள் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 93.32 | 88.81 | 1,38.10 | 56.30 |
| 528 | சுரங்கம் வெட்டுதல்—உலோகவியல் குறித்த மூலதனச் செலவு. | 2,00.33 | 2,49.01 | 2,50.20 | 2,50.01 |
| 530 | தொழில் நிதி நிறுவனங்களில் முதலீடுகள். | 1,50.00 | 2,00.00 | 2,00.01 | 0.01 |
| 533 | பாசன, நீர்வழி, வடிகால், வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | 42,93.73 | 52,59.38 | 53,31.99 | 56,99.40 |
| 534 | மின்விசைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | .. | .. | .. | .. |
| 535 | துறைமுகங்கள், கலங்கரை விளக்கங்கள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. | 1,64.[illegible]8 | 1,19.08 | 88.06 | 1,46.65 |
| 537 | சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. | 20,58.80 | 20,99.36 | 16,61.75 | 20,33.30 |
| 538 | சாலை, நீர்வழிப் போக்குவரத்துப் பணிகள் புறித்த மூலதனச் செலவு. | 8,43.03 | 0.10 | 2.10 | 0.11 |
| 544 | ஏனைய போக்குவரத்து, சாலைப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 1,09.52 | 71.98 | 1,13.99 | 22.31 |
| | மொத்தம் .. | 1,82,51.42 | 1,78,43.39 | 1,77,25.37 | 1,56,95.18 |

## இணைப்பு III.

ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு திட்டப் பணிகளின் செலவு விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண், வளர்ச்சித் தலைப்பு/ வளர்ச்சித் துணைத் தலைப்பு. | 1984–85 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1984–85 திருத்த மதிப்பீடு. | 1985–86 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| I. வேளாண்மையும்— தொடர்பான பணிகளும்— | | | |
| வேளாண்மை—பயிர் வளர்ப்பு .. | 52.02 | 62,85 | 47.15 |
| ஆராய்ச்சி—கல்வி .. .. .. | 3.96 | 4,08 | 4,90 |
| நிலச் சீர்திருத்தங்கள் .. .. | 20 | 20 | 10 |
| விற்பனை, பொருள்களைப் பாதுகாப்பாக வைத்தல், கிடங்கு வசதி. | 96 | 93 | 34 |
| கிராம வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டம். | 27,05 | 28,32 | 41.75 |
| சிறு பாசனம் .. .. | 8,05 | 4,48 | 5.05 |
| மண்வளப் பாதுகாப்பும் நீர் வளப் பாதுகாப்பும். | 5,63 | 6,10 | 6,13 |
| கால்நடை வளர்ப்பு .. .. .. | 5,94 | 6,60 | 3,93 |
| பால் பண்ணை வளர்ச்சி. .. .. | 57 | 62 | 37 |
| மீனளம் .. .. .. .. | 3,95 | 3,89 | 2,09 |
| காட்டு வளம் .. .. .. | 16,87 | 18,90 | 17,94 |
| வேளாண்மை நிதிஉதவி நிறுவனங்களில் முதலீடு. | 45 | 45 | 50 |
| சமுதாய நல வளர்ச்சி .. .. | 31,84 | 39,92 | 28,07 |
| உணவு .. .. .. .. | 3,41 | 10,96 | 3,37 |
| மொத்தம்—I .. | 1,60,91 | 1,88,30 | 1,61,69 |



## இணைப்பு III—தொடர்ச்சி.

ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு திட்டப் பணிகளின் செலவு விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை—தொடர்ச்சி.

| தொடர் எண், வளர்ச்சி தலைப்பு/ வளர்ச்சி துணைத் தலைப்பு. | 1984–85 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1984–85 திருத்த மதிப்பீடு. | 1985–86 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| II. கூட்டுறவு— | | | |
| கூட்டுறவு .. .. .. .. | 1,68 | 2,90 | 2,61 |
| III. பாசன, வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் மின் விசை உற்பத்தி திட்டங்கள்— | | | |
| நீர்வள மேம்பாடு—பாசன வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள். | 59,03 | 55,55 | 63,62 |
| மின் விசை உற்பத்தி வளர்ச்சி .. | 2,37,00 | 2,37,17 | 3,25,93 |
| மொத்தம்—III. .. | 2,96,03 | 2,92,72 | 3,89,55 |
| IV. தொழில்களும் கனிவளங்களும்— | | | |
| தொழில்கள் .. .. .. .. | 19,42 | 35,86 | 27,92 |
| கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும். | 16.55 | 33,26 | 20,92 |
| சுரங்கங்களும் கனிவளத் தொழில்களும். | 2,65 | 2,70 | 2,97 |
| மொத்தம்—IV. .. | 38.62 | 71,82 | 51,81 |
| V. போக்குவரத்தும் சாலைகளும்— | | | |
| துறைமுகங்கள், கலங்கரை விளக்கங்கள், கப்பல் போக்குவரத்து. | 1,05 | 94 | 1,49 |
| சாலைகளும் பாலங்களும் .. .. | 32.20 | 24,98 | 27,53 |
| சாலை, நீர்வழிப் போக்குவரத்துப் பணிகள். | 23,21 | 23,25 | 23,07 |
| சுற்றுலா .. .. .. .. | 65 | 1,04 | 17 |
| மொத்தம்—V. .. | 57,11 | 50,21 | 52,26 |

இணைப்பு III—தொடர்ச்சி.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு திட்டப் பணிகளின் செலவு, விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை—தொடர்ச்சி.

| தொடர் எண், வளர்ச்சித் தலைப்பு/வளர்ச்சி துணைத் தலைப்பு. | 1984–85 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1984–85 திருத்த மதிப்பீடு. | 1985–86 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| VI. சமூக-சமுதாய நலப் பணிகள்— | | | |
| பொதுக் கல்வி .. .. .. | 46,07 | 53,70 | 48,39 |
| கலையும் பண்பாடும் .. .. .. | 1,57 | 1,58 | 1,43 |
| தொழில் நுட்பக் கல்வி .. .. | 6,99 | 6,13 | 5,55 |
| அறிவியல் பணியும் ஆராய்ச்சியும் .. | 15 | 59 | 2,29 |
| மருத்துவம் .. .. .. | 23,35 | 19,10 | 17,32 |
| பொதுச் சுகாதாரம்-துப்புரவு .. .. | 14.05 | 8.26 | 7,57 |
| வடிகால், குடிநீர் வழங்கல் .. .. | 1,39,69 | 85,68 | 1,53,00 |
| வீட்டு வசதி .... .. .. | 36,67 | 36,60 | 33.17 |
| நகர்ப் பகுதி வளர்ச்சி .. .. | 34,09 | 35,04 | 30,00 |
| செய்தி-விளம்பரம் .. .. .. | 34 | 17 | 39 |
| தொழிலாளரும் தொழிலாளர் நலனும் | 16.56 | 3,99 | 7.17 |
| ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலம். | 24,05 | 24,72 | 14,13 |
| சமூக நலன் .. .. .. | 25,95 | 27,00 | 43,85 |
| சத்துணவு .. .. .. .. | 46,74 | 60,71 | 65,32 |
| ஏனைய சமூக சமுதாய நலப் பணிகள். | 17 | 23 | 6,88 |
| மொத்தம்—VI. .. | 4,16,44 | | 4,36,46 |



1985 மார்ச் 26]

இணைப்பு III—தொடர்ச்சி.

ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு திட்டப் பணிகளின் செலவு விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை—தொடர்ச்சி.

| தொடர் எண், வளர்ச்சித் தலைப்பு/ வளர்ச்சித் துணைத் தலைப்பு. | 1984–85 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1984–85 திருத்த மதிப்பீடு. | 1985–86 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| VII. பொருளாதாரப் பணிகள்— | | | |
| தலைமைச் செயலகம்-பொருளாதாரப் பணிகள். | 2 | 2 | 4 |
| பொருளாதார ஆலோசனையும் புள்ளிவிவரமும். | 50 | 55 | 12 |
| மொத்தம்—VII. .. | 52 | 57 | 16 |
| VIII. பொதுவான பணிகள்— | | | |
| பொதுப் பணிகள் .. .. .. | 7.71 | 4.42 | 6,47 |
| எழுது பொருள்-அச்சுத்துறை .. | 20 | 20 | 55 |
| மொத்தம்—VIII. | 7,91 | 4,62 | 7,02 |
| பெரு மொத்தம் .. | 9,79,22 | 9,74,55 | 11,01,56 |

3520/அ 31/85

16-4-1985

தமிழ்நாடு

சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# அதிகாரபூர்வமான வெளியீடு
# OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 27, 1985—தொகுதி 213 - எண் 2

Wednesday 27th March 1985—Volume 213 - No. 2

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2.75]

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. அறிவிப்புகள் | |
| (1) ஆளுநரிடமிருந்து செய்தி | 103 |
| (2) பேரவையிலிருந்து செய்தி | 103 |
| 2. கவன ஈர்ப்பு | |
| (1) கடலூர் துறைமுகத்துக்கருகில் பா மகக்கையொட்டி கடலில் படகில் சென்றவர்கள் விபத்துக்குள்ளாகி பலர் உயிரிழந்ததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து | 104—106 |
| (2) 3-10-1981 நாளிட்ட தொழில் துறை ஆணை எண் 1364-ல் வெளியிடப்பட்ட எளிதாக்கப்பட்ட வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப் படாததால் சிறு தொழில்கள் அடைந்துவரும் இடர் பாடுகள் குறிந்து | 107—108 |
| 3. மேலவை விதி 82-ன் கீழ் அறிக்கை— தமிழகத்தில் தொழில் வளர்ச்சியும் மின்னணு வியலும் | 109—111 |
| 4. அரசின் தீர்மானம்— 1984 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (ஐம்பத்து மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவினால் இந்திய அரசியலமைப்பில் செய்யக் கருதப் பட்டுள்ள திருத்தங்களுக்கு ஏற்பளித்தல் | 111—114 |
| 5. அரசின் சட்ட முன்வடிவு 1985-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/1985) | 115—125 |
| 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் | 126—127 |


143944

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

புதன்கிழமை, 1985 மார்ச் 27.

பங்குனி 14, ரக்தாக்ஷி, திருவள்ளுவராண்டு-2016.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4-00 மணி அளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் (திரு. ஜி. சுவாமிநாதன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. அறிவிப்புகள்.

#### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு ஆளுநரிடமிருந்து 25—3—1985 தேதியிட்ட கீழ்க்கண்ட செய்தி வந்துள்ளது :—

"நான் 8—3—1985 அன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரை யாற்றியதற்குத் தாங்கள் அனுப்பிய நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை மன நிறைவுடன் பெற்றுக்கொண்டேன்."

#### (2) பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 1985 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்ட முன்வடிவின் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1985) பிரதிகள் மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

## 2. கவன ஈர்ப்பு.

**(1) கடலூர் துறைமுகத்துக்கருகில் மாசிமகத்தையொட்டி கடலில் படகில் சென்றவர்கள் விபத்துக்குள்ளாகி பலர் உயிரிழந்ததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :—

"கடலூர் துறைமுகத்துக்கருகில், மாசிமகத்தையொட்டி, கடலில் படகில் சென்றவர்கள் விபத்துக்குள்ளாகி பலர் உயிரிழந்ததாலும் மற்றும் பலர் காணாமல் போனதாலும் ஏற்பட்டுள்ள நிலை குறித்து."

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரமான அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்த விபத்து மிகவும் துர்ப்பாக்கியமானது. ஆனால் பொதுவாக பெரிய விழாக்கள் நடக்கும்போது, அதுவும் மத சம்பந்தமான விழாக்கள் நடக்கும்போது, போதுமான அளவுக்கு காவல் துறையினர் பாதுகாப்பு ஏற்பாடு செய்வது ஒரு வழக்கம். அன்றைய தேதியில் காவல் துறையினர் சரியான முறையில் நடந்திருந்தால், இந்த விபத்தைத் தவிர்த்திருக்கலாம் என்பது இந்த அறிக்கையிலேகூட மறைமுகமாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. காவல் துறையினர் மற்றும் தேவனாம்பட்டினம் பஞ்சாயத்தார் ஆகியோரின் எச்சரிக்கையையும் மீறி, படகின் சொந்தக்காரார் சென்றதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எச்சரிக்கையோடு நின்றிருக்காமல், நூற்றுக்கணக்கானவர்கள் அந்தப் படகில் ஏறுவதைத் தடுத்து நிறுத்தக்கூடிய அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்தி இருந்தால், இந்த விபத்து நடந்திருக்காது. ஆகவே காவல் துறையினர் ஏன் இந்த அளவுக்கு அலட்சியமாக நடந்து கொண்டார்கள்? மத சம்பந்தமான விழாக்களின் போதும், நிகழ்ச்சிகளின்போதும் இப்படிப்பட்ட வேதனை தரக்கூடிய சம்பவங்கள் நிகழாவண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு காவல் துறையினர் சரியானபடி நடக்க வேண்டுமென்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் தக்க ஆணைகளைப் பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

---

@ 127-129 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத்
துணைத் தலைவர் அவர்களே, காவல் துறையினர், மற்றவர்கள் எல்லாம்
முறைப்படியாக எடுக்கவேண்டிய முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள்.
பன்னெடுங்காலமாக இந்தத் திருவிழா நடைபெறுவதும், திருவிழாக்
காலத்திலே மக்கள் எல்லாம் படகுகளிலும், மற்றவைகளிலும் சென்று
வேடிக்கை பார்க்க முயலுவதும் இயல்பாக இருந்து வருகிறது. பின்னரும்
பல்வேறு படகுகளில் மக்கள் போவதும், சுற்றிப் பார்த்து வருவதுமாக
இருந்தார்கள். ஆனால் இந்த விபத்து காவல் துறையினுடைய
கண்காணிப்புக் குறைவின் காரணமாகவே முற்றிலும் நேர்ந்தது என்று சொல்ல
முடியாது. அந்தப் படகிலே ஏற்பட்ட ஒரு கோளாறின் காரணமாக, தண்ணீர்
உள்ளே போக, உள்ளே புகுந்த தண்ணீரை வெளியேற்ற வேண்டுமென்று
கைப் பம்புகளாலே இறைத்திருக்கிறார்கள். ஆனால் கைப் பம்பு வைத்திருந்த
பலகை மேலும் உடைந்துவிட்டதன் காரணமாக, தண்ணீர் ஏராளமாக
உள்ளே புக, எல்லோரும் ஒரு பக்கத்திலே சாய படகு கவிழ்ந்து அதிலே
சில பேர்—நீந்தத் தெரிந்தவர்கள்—நீந்தியிருக்கிறார்கள் ; மீட்கப்படக்
கூடியவர்கள் மீட்கப்பட்டிருக்கிறார்கள் ; ஆனால் நீந்தத் தெரியாதவர்கள்
இருந்ததன் காரணமாக மொத்தம் 53 உடல்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.
அவற்றில் 22 பேர் ஆண்கள், 20 பேர் பெண்கள் மற்றும் சிறுவர்கள்,
சிறுமியர்கள், இன்னும் 2 உடல்களை அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல்
உள்ளன என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆகவே எச்சரிக்கையை மீறி
நடந்ததன் காரணமாக, கடலூர் துறைமுகக் காவல் நிலையத்தில் இந்திய
தண்டனைச் சட்டத்தின் பிரிவு 304 (ஏ)-ன்கீழ் குற்ற எண் 23/1985-ன்கீழ்
பதிவு செய்யப்பட்டிருக்கிறது. விசாரணைக்குப் பின் இவ்வழக்கு இந்திய
தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 282 மற்றும் 304 (2) ஆக மாற்றப்பட்டு
விசாரணையில் உள்ளது. ஆகவே காவல் துறையினர் எடுத்துச் சொல்லியும்,
அவர்கள் மீறி இருக்கிறார்கள் என்று இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர்
கூறுவது போன்று, அந்த இடத்திலே இந்த அனுபவம் ஏற்பட்டதன்
காரணமாக இனிமேல் விழாக்கள் நடக்கும்போது, மிக எச்சரிக்கையாக
இருக்கும்படியாக காவல் துறையினர் அறிவுறுத்தப்படவும், இப்படிப்பட்ட
சிறு கோளாறுகள் நடந்தாலும் அப்படிப்பட்ட படகுகளை எக்காரணம்
கொண்டும் விடக்கூடாது என்றும், மீறி நடந்தால் அவர்கள் கடும்
தண்டனைக்கு உள்ளாவார்கள் என்றும் எச்சரிக்கை செய்வதன்மூலம்,
நடவடிக்கைகள் நாம் மேற்கொள்ளலாம்.

தொகை, ஒவ்வொரு ஆண்டிற்கும் விற்பனை வரிக்கடனாக தொடர்ந்து ஆறு ஆண்டுகளுக்கு வழங்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது. இது அனைத்து சிறு தொழில்களுக்கும் பொருந்தும் என்று 11—11—1982-ல் விளக்கம் அளிக்கப்பட்டது. அந்த விளக்கத்தின் பலனாக எளிதாக்கப்பட்ட வட்டியில்லா விற்பனை வரிக்கடன் சிறு தொழில்களுக்கும் 1—4—1982 முதல் பொருந்தும் என்ற நிலை ஏற்பட்டது. ஆனால் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு இத்திட்டம் 1—4—1981 முதலே அதாவது ஒரு ஆண்டிற்கு முன்பிருந்தே பொருந்தும் என்ற நிலை இருக்கிற காரணத்தால், இது போன்றே சிறு தொழில்களுக்கும் 1—4—1981 முதலே பொருந்துமாறு ஆணையிட அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது.

பெரிய தொழில்களுக்குக் கொடுத்ததைப்போலவே, சிறு தொழில்களுக்கும் உற்பத்தி தொடங்கப்பட்டது முதற்கொண்டே இக்கடனைத் தொடர்ந்து ஆறு ஆண்டுகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பதையும்பற்றி அரசு ஆய்ந்து வருகிறது.

(பிற்பகல் 4-10)

திரு. ஆர். டி. சீத்தாபதி : துணைத் தலைவர் அவர்களே, 'மூன்றாண்டுகள்' என்பதை 'ஆறாண்டுகளாக' அதிகரிக்கலாமா என்று பரிசீலிப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதில் முடிவு எடுக்க எவ்வளவு காலமாகும்? 1981-இல் இருந்து 1985 பிப்ரவரி வரை உள்ள இந்த இடைப்பட்ட காலத்தில் விண்ணப்பதாரர்கள் பயன்பெற்று வருகிறார்கள். இந்த மூன்றாண்டுக் காலம் என்பதை ஆறாண்டுக் காலம் என்று ஆக்கும்போது, அந்தச் சிறு தொழில்களுக்கு சலுகை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

* மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன் : மிகவும் சிக்கலாக ஆகக் கூடாது என்பதற்காக விரைவாகப் பரிசீலனை முடிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட வேண்டும் என்றுதான் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். விரைவு விரைவாகப் பரிசீலனை செய்து முடித்த பிறகு, ஆறாண்டுக் காலம் பற்றிய ஆணை வெளியிடப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



## 3. மேலவை விதி 82-இன்கீழ் அறிக்கை.

### தமிழகத்தில் தொழில் வளர்ச்சியும் மின்னணுவியலும்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சியிலும் மின் அணுவியல் ஆற்றிடும் தலையாய பங்கினை கருத்தில் கொண்ட நமது பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவில் மின்னணுவியல் சாதனங்களின் உற்பத்தியை விரைவாக்கிட ஆண்டொன்றிற்கு ரூபாய் இரண்டாயிரம் கோடி என்ற நிலையிலிருந்து 1989-90 ஆண்டுவாக்கில் ஆண்டொன்றிற்கு ரூபாய் பத்தாயிரம் கோடி என்று உயர்த்த திட்டமிட்டுள்ளார். இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தைத் துரிதப் படுத்த, வேளாண்மைக் கல்வி அல்லது தொழில் உற்பத்தியைப் பெருக்குவது போன்ற எந்தத் துறையாய் இருப்பினும், மின் அணுவியல் தொழில்நுட்ப அறிவினை மிகவும் பெருமளவில் உபயோகிக்க அரசு முடிவெடுத்துள்ளது. வளர்ச்சியை விரைவாக்கவும் அர்த்தமுள்ளதாக்கவும் நிலையிலுள்ள இந்த மின் அணுவியல் தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு மிகவும் முக்கியமான துறைகளில் உதிரி உறுப்புக்களை உற்பத்தி செய்ய உரிமம் பெற வேண்டுமென்ற நிலையை அகற்றவும் மற்றும் அத்தகைய உறுப்புக்களை மட்டுமின்றி அவைகளைச் சார்ந்த ஒட்டுமொத்தமான இதர பாகங்களையும் ஒன்றுபடுத்தி உற்பத்தியாகும் பொருளுக்கு உரிமம் பெறக்கூடிய வகையில் எளிதாக்கும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. உதாரணமாக நுகர்வோர் மின் அணுவியல் துறையில் ஒரு உற்பத்தியாளர் மேற்கண்ட பொதுவான உரிமம் பெறுவதன்மூலம் பொதுமக்கள் அன்றாடம் உபயோகப்படுத்தும் இரண்டு அலை வரிசை வானொலிப் பெட்டிகள், டிரான்ஸிஸ்டர் வானொலிப் பெட்டிகள், இரு சாதனம் கொண்டு ஒரு அமைப்பு, ஒலிப்பதிவு கருவிகள், வீடியோ கேசட் ஒலிப்பதிவு சாதனங்கள் உட்பட்ட எல்லா மின்னணு சாதனங்களையும் உற்பத்தி செய்ய இயலும். இத்தகைய எளிமையான முறையால் ஒரு உற்பத்தியாளர் வேகமாக வளர்ந்துவரும் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு ஏற்ப அதேவேகத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள முடியும்.

மேற்கண்ட தேசிய தொழில்நுட்பவியல் கொள்கைக்கு ஏற்ப நம் முதல்வர் அவர்கள் மின்னணுவியல் தொழிலுக்கு புதிய ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க உத்தேசித்துள்ளார்கள். முக்கியமானதும், வளர்ந்து வரும் தொழில் முன்னேற்றத்தில் அரிய பங்கு வகிப்பதுமான இத்துறையில் ரூ. 300 கோடி முதலீடு செய்வதன் மூலம் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் மின் அணுவியல் தொழில் துறையில் மாத்திரம் நமது மாநிலத்தில் ஆண்டு ஒன்றிற்கு ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு உற்பத்தி செய்யும் திறனை அடைவதற்காக

மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டமிட்டுள்ளார்கள். இம்மாநிலத்தின் தொழில் அமைச்சர் என்ற முறையில் தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் மற்ற பகுதிகளிலிருந்து எல்லா தொழில் துவக்குவோரையும், தொழில் அதிபர்களையும் வரவேற்று சிறந்த குறிக்கோளை அடைவதற்காக முழு மனதுடன் பங்கு கொள்ளும்படி வேண்டுகிறேன். மேலும் தாய்நாட்டிற்கு வெளியே வசிக்கும் தமிழர் மற்றும் இந்திய உடன் பிறப்புகளையும் இந்தியாவில் பண முதலீடு செய்யும்படியும் கேட்டுக்கொள்கிறேன். இம் மாநில அரசு தனது மின்னணுவியல் நிறுவனம் வாயிலாக தீட்டப்படும் கூட்டு முயற்சிகளுக்கு ஊக்கமும் உதவியும் அளிக்கத் தயாராக உள்ளது. ஏற்றுமதிக்கு உகந்த, குறிப்பாக பல்திறன் பொறி சம்பந்தப்பட்ட கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர்— computer, software திட்டங்களுக்கு சிறப்பான முக்கியத்துவம் வழங்கப்படும். 23—3—1985 அன்று சென்னை வந்திருந்த இந்திய அரசின் மின்னணுவியல் ஆணைக் குழுவின் தலைவர் டாக்டர் சஞ்சீவி ராவ் அவர்களுடன் தமிழகத்தில் தொழில்களை மின்னணுவியல் மயமாக்கும் வேகத்தை துரிதப்படுத்துவது பற்றி விளக்கமாக விவாதித்தேன்.

மின் அணுத் தொழிலுக்கு குறைவாகவே மின்சாரம் மற்றும் நீர் தேவைப்படுவதாலும், மனிதனுடைய திறமையை அடிப்படையாகக் கொண்டுள்ளதாலும், இத்தொழில் தமிழகத்திற்கும் மிகவும் பொருத்தமான தொழிலாகும். மின் அணுவியல் தொடர்பான பாடங்களை அதிக அளவில் பாடத் திட்டத்தில் சேர்க்கவும், தமிழகத்தில் கல்வி நிலையங்களில் மின்னணுவியல் தனி வகுப்புகளை (கோர்ஸ்—course) ஆரம்பிப்பது தொடர்பாகவும் கல்வி அமைச்சருடன் விவாதித்துள்ளேன். இந்தக் குறிக்கோள்களை அடைவதற்கு

(பிற்பகல் 4-15)

தகுதிவாய்ந்த தொழில் நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற மற்றும் உயர்ந்த லட்சியத்தை உடையவர்களை தமிழகம் பெற்றுள்ளது. இந்தத் தொழிலில் பயன்படும் முறையில் வேலை வாய்ப்பு அளிப்பதற்கு மிகுந்த அளவில் பி.எஸ்சி. மற்றும் எம்.எஸ்சி. பெண் பட்டதாரிகளை நாம் பெற்றிருப்பது நல் அதிர்ஷ்டமாகும். மின்னணுவியல் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான குளிர்ந்த தட்ப வெப்ப நிலை உடைய உதகை, ஏற்காடு, கொடைக்கானல் மற்றும் எலகிரி போன்ற மலை வாசஸ்தலங்களை தமிழகம் பெற்றிருப்பது பெருமைப்பட வேண்டிய ஒன்றாகும்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மக்கள் நலனைச் சார்ந்த பணிகளை எப்போதும் ஊக்குவிக்க பெரிதும் விழைவதால் மின் அணுவியலை அடிப்படையாகக் கொண்ட மருத்துவச் சாதனங்களை உற்பத்தி செய்வதற்கு தனி முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.





தொழில் மான்யக் கோரிக்கையை அவையில் எடுத்துக்கொள்ள ஏப்ரல் மாதம் 15 ஆம் தேதிக்கு மேல் ஆகும் என்பதாலும், தமிழ்நாட்டிலும், அகில இந்திய அளவிலும் உலக நாடுகளிலும் உள்ள தமிழர்களுக்கும் இந்தியர்களுக்கும் அறிவிப்பதற்காக வேண்டிய இந்த அறிக்கை தற்போது இம்மாமன்றத்தில் வைக்கப்படுகிறது.

## 4. அரசின் தீர்மானம்.

1984 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (ஐம்பத்தி மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவினால் இந்திய அரசியலமைப்பில் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களுக்கு ஏற்பளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 1984 ஆண்டு அரசியலமைப்பு (ஐம்பத்தி மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவில் செய்யக் கருதப் பெற்றுள்ள, இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின்கீழ் வரும் திருத்தங்களுக்கு, மேலவை ஏற்பளிக்கின்றது"

என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

இந்தத் தீர்மானத்திலே கண்டுள்ள திருத்தத் தன்மை நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே வந்ததல்ல. ஆகு இந்தத் திருத்தம், 53-வது திருத்தம் எதற்காக இந்த அரசியல் அமைப்பு சட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டது என்றால், தற்போதுள்ள அரசியல் அமைப்புச் சட்டம் 330-ம் பிரிவின் (பி) உட்பிரிவு, நாகாலாந்து, மேகாலயா, அருணாசலப் பிரதேசம், மிசோராம் மற்றும் அஸ்ஸாமில் உள்ள பழங்குடியினர் பகுதிகளில் வாழும் பழங்குடியினரைத் தவிர பிற பழங்குடியினருக்கு மட்டும் மக்களவையில் இட ஒதுக்கீடு செய்ய அனுமதி அளிக்கின்றது. தற்போது இப்பிரிவு அஸ்ஸாமில் தன்னாட்சி மாவட்டங்களில் வாழும் பழங்குடியினரைத் தவிர பிற பழங்குடியினருக்கு மக்களவையில் இட ஒதுக்கீடு செய்யப்படும் என்று திருத்தப்பட உள்ளது.

இந்த நாகாலாந்து, மேகாலயா, அருணாசலப் பிரதேசம், மிசோராம், அஸ்ஸாம் ஆகிய இடங்களில் ஒரு சில பழங்குடி மக்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு பிரிவினர் விடுபட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு இன்னும் தனி இட ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று நீண்ட நெடுங்காலமாக கோரிக்கை இருந்து வந்தது. அந்தக் குறையைப் போக்க வேண்டும் என்று மேகாலயா சட்டமன்றம் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் ஒரு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 27

தீர்மானத்தை நிறைவேற்றி மைய அரசுக்கு அனுப்பி வைத்தது. மைய அரசும் அதைப்பற்றி ஆராய்ந்து பார்த்து, அதிலே நியாயம் இருக்கின்றது என்ற காரணத்தினாலேயே 53-வது சட்டத் திருத்தமாகக் கொண்டு வரவேண்டுமென்று, இந்தத் திருத்தத்தை, மக்கள் அவையிலேயும் மாநிலங்கள் அவையிலேயும் கொண்டுவர தீர்மானித்தது. அப்போது நாகாலாந்து, அருணாசலப் பிரதேசம் மற்றும் மிசோராம், அஸ்ஸாம் பகுதிகளும் சேர்ந்து இதற்கு முழு ஆதரவும் தந்து தங்கள் தங்கள் பகுதியிலே இருக்கின்ற குறைபாடுகளைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டன. அந்த வகையிலே, இந்தப் பகுதிகளிலேயிருக்கின்ற பழங்குடியினருக்கு ஒரு நியாயம் வழங்கவும், இந்த மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றவும், பயன்படுகின்ற வகையில் அரசியலமைப்புச் சட்டம் 53-வது திருத்தம் என்ற பெயரில் 23—8—1984-ம் நாளன்று, மக்கள் அவையில் நிறைவேற்றப்பட்டு, பிறகு 25—8—1984-ம் நாளன்று மாநிலங்கள் அவையிலும் நிறைவேற்றப்பட்டு வந்துள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தில் ஒரு திருத்தம் சேர்க்கப்பட வேண்டுமானால், மக்கள் அவையும் மாநிலங்கள் அவையும் நிறைவேற்றினால் மட்டும் போதாது. இந்தியாவிலுள்ள பாதி மாநிலங்களும் அந்தத் திருத்தத்தை ஆதரிக்க வேண்டும். அந்த பாதி மாநிலங்களுக்கு மேல் இந்தத் திருத்தத்திற்கு ஆதரவு தருகின்ற ஒரு நோக்கத்தோடுதான் எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலும், இதிலே பிரச்சினை எதுவும் இல்லை என்றாலும், இப்படி ஒரு திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் குறிப்பிட்ட சில மலைவாழ் மக்களுக்கு, அந்தப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு நன்மை ஏற்படுகிறது என்ற முறையிலே, நாமும் இதை ஏற்றுக்கொள்ள முன்வந்தோம். சட்டமன்றப் பேரவை இந்தத் திருத்தத் தீர்மானத்தை ஆதரித்து நிறைவேற்றியது. இப்போது மேலவை நிறைவேற்றி சட்டமன்றப் பேரவைக்கு அனுப்புவதன்மூலம் இதை மத்திய அரசுக்குத் தெரிவிக்க இயலும். அந்த வகையில் இதை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 1984 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (ஐம்பத்தி மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள, இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின்கீழ் வரும் திருத்தங்களுக்கு, இம்மேலவை ஏற்பளிக்கிறது."



1985 மார்ச் 27]

(பிற்பகல் 4-20)

*** திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மேலவைத் துணைத் தலைவரவர்களே,
இவை அனைத்துப்
இதுபோன்ற சட்டங்களில் பேசுவது வழக்கமில்லை. திராவிட முன்னேற்றக்
பிரிவினராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒன்று. 330 ஷரத்துக்குக் கொண்டு
கழகத்தின் சார்பிலே, அரசியல் சட்டத்தின் ஆதரிக்கிறேன். அஸ்ஸாம்,
வந்துள்ள திருத்தத்தை வரவேற்கிறேன், மேகாலயா ஆகிய
நாகாலாந்து, மிசோராம், அருணாசலப் பிரதேசம், இந்த உரிமைகள்
பகுதிகளிலே வாழ்கிற மலைவாழ் பழங்குடி மக்களுக்கு கைவிடப்பட்டு,
ஏற்கெனவே இருந்து, 1973-லே அது வேண்டாமென்று கொண்டு
மீண்டும் அது வேண்டுமென்று சொல்லி, அதற்குப் பின்னாலே வேண்டாமென்று
வந்ததாக எனக்குத் தெரிய வருகிறது. என்ன காரணத்தாலே ஏற்றாற்போல
சொன்னார்கள் என்று தெரியாது. மற்ற சமூகத்தினருக்கு முன்னுக்கு வரும்
இவர்களும் அரசியல், பொருளாதார, சமூக நிலையில் தனி இட ஒதுக்கீடு
வரையில் மலைவாழ் மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் சார்பிலே
இருக்க வேண்டியதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் நம்முடைய
வற்புறுத்துகிறேன். இந்த நேரத்திலே ஒன்றேயொன்றை நம்முடைய
மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தர்மபுரி
மாநிலத்திலேயுள்ள நரிக்குறவர்கள், குடுகுடுப்பைக்காரர்கள், தாழ்த்தப்
மாவட்டத்தில் உள்ள லம்பாடிகள் போன்றவர்கள் எல்லாம் கோரிக்கைகளை
பட்டவர்கள் பட்டியலிலே தங்களைச் சேர்க்க வேண்டுமென்று அமைச்சரவர்
வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை இந்த நேரத்திலே என்று சொல்லி,
களுக்கு நினைவுபடுத்தி, முடியுமானால் அதைப் பரிசிலியுங்கள்
இதை வரவேற்று, அமைகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத்
துணைத் தலைவரவர்களே, முதலிலே நான் குறிப்பிட்டதுபோல, இந்தச்
சட்டத்திருத்தத்தின் முக்கிய நோக்கம் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு
நியாயத்தின் அடிப்படையிலே செய்யப்பட வேண்டுமென்பதுதான். அங்கே
சிலபல மாற்றங்கள் ஏற்பட்டதற்கு அரசியல் மாச்சரியங்கள் காரணமாக
இருந்து வந்திருக்கின்றன. சில பிரிவினருக்கு சில வசதி, வாய்ப்புகள் வந்து
விட்டால், தங்களைச் சேர்ந்தவர்களுக்கு வசதி, வாய்ப்புகளைக் கொடுப்பதும்,
மற்றவர்களுக்கு இடம் கொடுக்க மறுப்பதுமாகிய நிலைமைகள் இருந்தன.
அதனைத் தவிர்க்க, அரசியல் அமைப்புச் சட்டத்தில் உத்தரவாதம் செய்து
விட்டால், யாரும் அதை மீறிச் செய்ய முடியாதென்ற முடிவுக்கு வந்திருக்

இருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதுபோல, சில நாடோடிகளாக இருக்கிறவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் தங்களைச் சேர்க்க வேண்டுமென்று எங்களுக்கு எழுதியிருக்கிறார்கள். ஒரு வகுப்பினரை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கலாமா, வேண்டாமா என்று முடிவு செய்யும் முழு அதிகாரம் மாநில அரசிடத்தில் இருக்கிறது. ஒரு வகுப்பினரை பழங்குடியினர் அல்லது தாழ்த்தப்பட்டவர் வகுப்பில் சேர்க்க வேண்டுமானால், அதைப்பற்றி மத்திய அரசுதான் முடிவு செய்ய வேண்டும். மத்திய அரசு முடிவு செய்து, அதை ஏற்றுக் கொண்டால்தான், அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள், மற்ற வாய்ப்புகள் இவர்களுக்குக் கிடைக்கும். எனவே நாடோடிகள், நரிக்குறவர்கள் போன்றவர்களை எல்லாம் பழங்குடியினர் இனத்தில் கொண்டுவருவதில் அரசுக்கு ஆட்சேபணை இல்லை, ஏற்கெனவே இதுபற்றி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், மீனவப் பெருங்குடி மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சமமாகத்தான் தங்களுடைய நிலை இருக்கிறது; பொருளாதார நிலையை எடுத்துக்கொண்டாலும், கல்வித் துறையில் எடுத்துக்கொண்டாலும், சமுதாயத்திலே இருக்கிற மற்ற பிரிவுகளை விட தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கிறோம்; எனவே தங்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற முயற்சி நீண்ட நாட்களாக அவர்களிடையே இருக்கிறது. மத்திய அரசு அதைப்பற்றிக் கேட்டபோது, அவர்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க இந்த அரசுக்கு ஆட்சேபணை இல்லை என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதுபற்றி மத்திய அரசு முடிவு செய்தால், இந்த அரசுக்கு மகிழ்ச்சிதான். அவர்களுடைய நிலை தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஈடாகத்தான் இருக்கிறதென்று சொல்லி, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 1984 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (ஐம்பத்தி மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள, இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின்கீழ் வரும் திருத்தங்களுக்கு, இம்மேலவை ஏற்பளிக்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



## 5. அரசின் சட்ட முன்வடிவு.

**1985 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1985).**

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

(பிற்பகல் 4-25)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

**மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் திருத்தச் சட்ட முன்வடிவில் நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைத் தெரிவிக்கின்ற வாய்ப்பினை நல்கியதற்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டத் திருத்தத்தைப் பார்க்கின்றபோது, பகுதிய பிரிவு 4-ஏ என்ற வகையில், ஒரு அதிகாரி இருக்கின்ற இடத்தில் நான்-அபீ ய ஒருவரை செயர்மேன் ஆக நியமிக்க வகை செய்யும் அளவில் இது அறிமு செய்யப்பட்டிருக்கிறது. இன்றையதினம் குடிநீர் வடிகால் வாரிய அ பல்வேறு இடர்ப்பாடுகள் இருக்கின்றன என்பதை நான் இந்த அ கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். அந்த இடர்ப்பா கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். அந்த இடர்ப்ப களைவதற்கு முன் வருவதற்கு பதிலாக இப்படி யெல்லாம் இந்த அரசு களைவதற்கு முன் வருவதற்கு பதிலாக இப்படி சட்ட முன்வடிவுகளைக் கொண்டுவருவதன் மூலமாக யாருக்கும் எந்த பயனும் ஏற்படப் போவதில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்

@ 130-133 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ள

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு சில குறைபாடுகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதலில் குறைபாடுகளைக் களைய வேண்டும். குறைபாடுகள் ஏராளம் இருக்கும் நிலையில், அதிகாரிக்குப் பதிலாக நான்-அபீசியலைப் போடும் அளவில் இச்சட்டத் திருத்தம் தேவையில்லை என்பதை நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் வீணாகக் குற்றம் சாட்டுகிறது என்ற முறையில் நான் சொல்கிற கருத்தை அமைக்கக் கூடாது. 1984-85 ஆம் ஆண்டு பொதுக் கணக்குக் குழுவால் வைக்கப்பட்ட 34 வது அறிக்கையிலே சொல்லப்பட்டுள்ள விபரங்களை நான் இங்கே எடுத்துச்சொல்கிறேன். 34-வது அறிக்கையின் 7-வது பாராவிலே மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திருவொற்றியூரில் நிறைவேற்றிய திட்டங்களில் எந்த அளவுக்குத் தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்பதைத் தெரிவித்திருக்கிறது. 1975-76-ல் திருவொற்றியூர் வடிகால் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் 85.34 லட்சம் ரூபாய். இவ்வளவு செலவில் மதிப்பீடு போடப்பட்ட பின்னாலே பணி தொடங்கப்பட்டு முறையாக முடிக்கப்படவில்லை. ஆனால் 1981 ஆம் ஆண்டில் திருத்த மதிப்பீடு என்ற அடிப்படையில் 177.07 லட்சம் ரூபாய் இதற்காக வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி 85 லட்சம் ரூபாய் செலவில் மதிப்பீடு செய்யப்பட்டு தொடங்கப்பட்ட பணி முடிக்கப்படாமல் 1981 ஆம் ஆண்டில் திருத்த மதிப்பீடு என்ற அடிப்படையில் 177 லட்சம் ரூபாயாக செலவு உயர காரணம் என்ன என்பதையும் இந்த அறிக்கையில் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். பொருள்களின் விலை ஏற்றம், தொழிலாளர்களின் கூலி உயர்வு, சாதனங்களின் விலை உயர்வு, நீர் மட்டம் உயர்ந்த இடத்திலுள்ள நீரை இறைத்தல், நிலங்களைக் கையகப்படுத்தல் இப்படிப்பட்ட பல்வேறு காரணங்கள் அதிலே சொல்லப்பட்டிருக்கின்றன. அதனால்தான் 85 லட்சம் ரூபாயில் தொடங்கப்பட்ட திட்டம் 1981 ஆம் ஆண்டில் 177 லட்சம் ரூபாயாக மாறிவிட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே 95 சதவிகிதப் பணி முடிக்கப்பட்டது என்று சொல்லி, 1984 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களுக்குள் முழுப் பணியும் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப் பட்டதாகவும், ஆனால் அது நிறைவேற்றப்படுவதில் தாமதம் ஏற்பட்டதற்கு மூன்று காரணங்கள் உண்டு என்றும் சொல்லியிருக்கிறார்கள். முதலில் திட்டமிட்டபடி கழிவு நீரைக் கடலில் விடுவதற்குப் பதிலாக பண்ணை அமைத்து, அங்கு கழிவு நீரை விடுவதில் தாமதம் ஏற்பட்டது முதல் காரணம் என்றும், சேறில் பொருள்களை எடுத்துச்செல்வதில் ஏற்பட்ட இடர்ப்பாடுகள் இரண்டாவது காரணம் என்றும், தொழில் நுட்ப ரீதியாக மூன்று மீட்டர்





ஆழத்திற்குப் பதில் நான்கு மீட்டர் ஆழம் அமைக்கப்பட்டது மூன்றாவது காரணம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பிட்ட காலத்திற்குள் திட்டம் நிறைவேற்றப்படாமல் போனதற்கு இப்படி மூன்று காரணங்களைச் சொல்லி யிருக்கிறார்கள். அந்தக் குழு தன்னுடைய அறிக்கையிலே மதிப்பீட்டுத் தொகையான ரூபாய் 85 லட்சமானது இப்பொழுது இரட்டிப்பு ஆகியிருப்பது குறித்து கவலையைத் தெரிவித்திருக்கிறது. சரியாக ஆய்வுசெய்யப்பட்டு பணி தொடங்கப்பட்டிருந்தால், விலையேற்றம் போன்ற பிரச்சினைகள் முன் கூட்டியே ஓரளவுக்குத் தெரிந்து, பணியும் தடையில்லாமல் முன்பே முடிந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். இனிமேல் திட்டம் குறித்த

(பிற்பகல் 4-30)

முதநிலை ஆய்வு போதுமான அளவுக்கு விரிவாகவும், முழுமையாகவும் இருக்க வேண்டியதையும் அனைத்துக் கூறுகளையும் கருத்திற் கொண்டு, திட்ட அறிக்கை/முதல் மதிப்பீடு தயாரிக்கப்படுவதை உறுதி செய்து கொள்ளும் படியும், ஏதாவதொரு காரணத்தால், பணியின் வடிவமைப்பு மாற்றப்பட வேண்டியது அவசியம் என்று நிறைவேற்று அதிகாரி கருதி அதன் விளைவாக செலவு அதிகரித்தால், முதல் மதிப்பீடு நிலையிலேயே இது ஏன் கண்டறியப் பட்டிருக்கக் கூடாது என்று முதலில் பரிசிலிக்காமல், இந்த மாற்றத்திற்கு அனுமதிக்கக் கூடாது என்றும், இப்பணியைத் தொடங்குவதற்கு முன்னர், முதல் மதிப்பீட்டிற்கு அனுமதியளித்த அதிகாரியிடமிருந்து முன்னதாக திட்டமான ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்றும், தக்க கட்டளைகளைப் பிறப்பிக்கும்படி குழு பரிந்துரை செய்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதைப்போலவே, 'பயன்படுத்தப்படாத நிதி ஒதுக்கீடு' என்ற தலைப்பில், 1981-82 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கையின் பத்தி எண் 2.4 (V (சி)-(2)-ல், "கழிவு நீர் அகற்றுத் திட்டங்கள்—11. ஜே.டி. பெருநகர குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியத்திற்கான மானியம்" என்ற தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கம் செய்யப்பட்ட ரூ. 341.79 இலட்சத்தில் ரூ. 119.39 இலட்சம் செலவிடப்படாமலுள்ளது. ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்யாதது, அந்நியச் செலாவணி கிடைக்காதது, சுட்ட மண் குழாய்கள் சிறப்பு வடிவமைப்புக் குழாய்கள் கிடைக்காதது, ஒப்பந்தக்காரர்கள் கால தாமதமாகப் பணிகளை முடித்தது ஆகிய காரணங்களினால் சில பணிகள் நிறைவேற்றப் படாதது மீதம் ஏற்பட்டதற்கான காரணமாகக் கூறப்பட்டது.

கொடுங்கையூரில் இயங்கி வரும் கழிவு நீர் சுத்தப்படுத்தும் நிலையத்தை [illegible] பொறுத்தவரையில், [illegible] தொழில் நுட்பத் தன்மை வாய்ந்த [illegible] கோரப்பட்டன, ஒப்பந்தக் கேட்புகளை தொழில் நுட்பக் குழுவினைக் கொண்டு முடிவு செய்ய வேண்டியிருந்ததாலும், ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்வதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளதென்று [illegible] விளக்கங்களைக் கேட்டுப் [illegible] விளக்கக்குறிப்பில் தெரிவித்தது. [illegible] ஒப்பந்தப் புள்ளிகள் 24—2—1982 ஆம் [illegible] தகுதி வாய்ந்த இரு ஒப்பந்தப் புள்ளிகள் [illegible] வந்து, பிறகு ஆணைகள் [illegible] என்று சொல்லிக்கொண்டே வந்து [illegible] முடிக்கப்பட்டு, மேலும் பணிகள் வழங்கப்பட்டு, அதிலே 50 சதவிதம் பணிகள் முடிக்கப்பட்டு [illegible] சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்று [illegible]

[illegible] அந்த அறிக்கையில், "இத்திட்டத்தில் அசாதாரணமான, [illegible] என்றும், 1977 ஆம் ஆண்டில் [illegible] கோரியிருந்த [illegible] இப்பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகளைக் கோரியிருந்த சென்னை [illegible] மாற்றப்பட்டன என்றும், போதுமான [illegible] இப்பணிகள் [illegible] இல்லை என்றும், அவற்றை மூன்று லட்ச ரூபாய் [illegible] வேண்டியிருந்தது என்றும், இவ்வாறு இதனை செலவில் [illegible] என்றும், அதே வேளையில் பொருட்களின் [illegible] ரூ. 3.4 இலட்சம் கூடுதலாகக் [illegible] ஒப்பந்தப் பணி வேறொரு [illegible] அந்த ஒப்பந்தப் பணி [illegible] 1984 நவம்பரில் இப்பணி [illegible] சாட்சியத்தின்போது [illegible] தெரிவித்தது" [illegible]

[illegible] போதுமான அளவுக்கு நிதி [illegible] இந்தப் பணி மீண்டும் தாமதமாக [illegible] அவர்கள் சொல்கிறார்கள்.

[illegible] "1977 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பணி [illegible] குழு அறிகின்றது [illegible]

இதன் காரணமாக, [illegible] இன்னும் முடிவுறவில்லையென்று [illegible] பின்னர் [illegible] சோதனை செய்ய [illegible] ஆய்வு [illegible] பின்னரே [illegible] ஒப்பந்தப் புள்ளிகள் [illegible] அனைத்தும் [illegible] பரிசீலிக்கப்பட்டிருந்தால் [illegible] பின்னர் [illegible] முன்னதாக முடிவடைந்திருக்குமென்று குழு [illegible] இப்பணி [illegible] கடைசியில் "1.2.4 ஆம் பத்தியில் [illegible] மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றது [illegible] அமைப்பினை [illegible]



என்று கூறியிருக்கிறார்கள், இது 1984-85 ஆம் ஆண்டின் பொதுக் கணக்குக் குழு தந்துள்ள முப்பத்தி நான்காவது அறிக்கையில் கூறப்பட்ட சில கருத்துக்களாகும்.

அதைப்போலவே Report of the Comptroller and Auditor-General of India, 1982-83 என்று இந்த அவையில் வைக்கப்பட்ட வெளியீட்டில் "The Madras Metropolitan Water Supply and Sewerage Board.." என்ற தலைப்பின் கீழ் "Metering programme for water supply in Madras City", என்ற பத்தியில் "In July 1978, Madras Metropolitan Water Supply and Sewerage Board proposed to take up installation of meters for 25,000 domestic consumption connections of different sizes for water supply as a first step to conserve water and reduce wastage". என்று சொல்லப்பட்டிருக்கிறது. "Madras Urban Development Project" என்ற திட்டத்தின் கீழ் World Bank—இடமிருந்து loan and grant on 50:50 basis-ல் உதவி பெற இத்திட்டம் வகுக்கப்பட்டது. அதில் எவ்வாறு இழப்பு ஏற்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. "The Board estimated, on the basis of a random survey, the number of house service connection pipes of 15 mm., 25 mm., 40., and 50mm, sizes, which are to be metered as 22,000, 2,000, 500 and 100 respectively and procured during March 1979 to April 1982 the above quantity of meters and connected materials like ferrules, plug cocks and RCC Meter boxes at a total cost of Rs. 98.80 lakhs."

(பிற்பகல் 4-35)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் தற்போது கூறுகின்ற விவரங்களுக்கும், அவையின் முன் உள்ள சட்ட முன்வடிவுக்கும் என்ன தொடர்பு என்று தெரிவித்தால் நலமாக இருக்கும்.

**மிசா. ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பல்வேறு தவறுகள் இந்த சென்னை பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியத்திலே இருக்கின்ற நேரத்தில், அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், ஒரு அதிகாரியை நீக்கிவிட்டு, ஒரு நான்-அஃபிசியல் சேர்மன் கொண்டுவருவதற்காக இப்படிப்பட்ட ஒரு திருத்தம் தேவையா என்பதற்காகத்தான் இவற்றை எல்லாம் கூறுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அரசைக் குற்றம் சொல்வதற்காக இவற்றைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் குற்றம் சொல்வதையோ படிப்பதையோபற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அதற்கும் இந்தச் சட்ட முன்வடிவுக்கும் என்ன தொடர்பு என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** நானும் அதைத்தான் குறிப்பிடுகிறேன். இந்தத் திருத்தம் தேவைதானா? இந்தத் திருத்தத்தால் இப்போதுள்ள இடர்ப்பாடுகள் நீங்கி விடுமா? ஏற்கெனவே இந்த அரசு பச்சையப்பன் அறக்கட்டளையில் இருந்த அறங்காவலர்களை நீக்கிவிட்டு, தனி அதிகாரிகளை நியமிப்பதற்கான சட்ட முன்வடிவைக் கொண்டுவந்த போது, அரசு அதிகாரிகளின் கீழ் நிர்வாகம் சிறப்பாக நடைபெறுகிறது என்று சொன்னார்கள். அப்படி பச்சையப்பன் அறக்கட்டளைக்கு ஒரு நியதி, இதற்கு ஒரு நியதியா என்று கேட்க விரும்புகிறேன். அங்கே ஏற்கெனவே ஒரு அதிகாரி இருக்கின்றபோது, அந்த வழிமுறைகளை மாற்றி தான்-ஒரு சேர்மனைக் கொண்டுவருவதற்கு இப்படி ஒரு திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமா என்கின்ற அடிப்படையிலேதான் இதையெல்லாம் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

Due to stoppage of the work and incorrect assessment of the requirement of meters in respect of all sizes of service connections, 3,029 numbers of meters and ancillaries costing Rs. 21.31 lakhs remained unused.

இவ்வாறு 21.31 லட்சம் உபயோகப்படுத்தப்படாமல் இருக்கிறது. அதைப் போலவே unused meter boxes. 11.44 லட்சம் வீணாகி இருக்கிறது. இன்னும்கூட loss due to delay in preferring claim. என்ற வகையில், தவிர்ப்பு வாங்குவதிலே ஏற்பட்ட காலதாமதத்தாலும், நஷ்டம் அதிகம் ஏற்பட்டிருக்கிறது என்று பொதுக் கணக்குக் குழு தனது அறிக்கையிலே மிகுந்த கவலை எல்லாம் தெரிவித்திருக்கிறது. எனவே இவ்வளவு இடையூறுகள், இவ்வளவு சங்கடங்கள் இந்தத் துறையிலே இருக்கின்றபோது, இந்தச் சட்டத் திருத்தம் இப்போது தேவையில்லை. இது ஏதோ ஆளுகின்ற கட்சி தன்னுடைய கட்சியிலே இருப்பவர்களுக்குச் சில பதவிகளைத் தரும் நோக்கத்தோடு இங்கே கொண்டுவரப்படுகிறதோ என்று ஐயுறுகிறேன். நல்ல மாற்றங்களைச் செய்ய வேண்டிய இந்தத் துறையிலே இப்படி பல குழுக்கள் தங்கள் கருத்துக்களைக் கூறியிருக்கின்ற இந்தத் துறையில், அவற்றின் அடிப்படையில் சட்டத்தைத் திருத்துவதற்கு முன்வர வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திருத்தங்களைக் கொண்டுவந்து, இந்தத் துறையைச் செப்பனிட வேண்டும். அதன் அடிப்படையில் இந்தத் திருத்தம் தேவையற்றது. இது தங்களுடைய கட்சிக்காரர்களுக்குப் பதவி தருவதற்காகக் கொண்டுவரப்படுகிறதோ என்ற ஐயத்தை மட்டும் எழுப்பி அமர்கிறேன்.



**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் (திருத்தச்) சட்ட முன்வடிவு மீது நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சென்னையிலே பிறந்து, சென்னையிலே வளர்ந்து வருகிறவன் என்ற காரணத்தினாலே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது சில கருத்துக்களைத் தெரிவிப்பது என்னுடைய தலையாய கடமை. நான் அரசுமீது குற்றம் சொல்வதாக மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களும், மாமன்றமும் கருதி விடக் கூடாது. ஏற்கெனவே கலைஞருடைய தலைமையில் இருந்த அரசு, குடிநீர் வடிகால் வாரியம் என சென்னை மாநகரத்திலே ஒட்டுமொத்தமாக இருந்த வாரியத்தை இரண்டாகப் பிரித்தது. அதைப் பிரித்ததற்கே காரணம் உலக வங்கியிலே இருந்து பணத்தைப் பெறுவதற்கு அது ஒரு வழியாக இருக்கும் என்று அன்றைய தினம் அரசு கருதி, அதை மேற்கொண்டது. அவ்வாறு இரண்டாகப் பிரித்த காரணத்தினாலே, சென்னை மாநகரம் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டது என்பதை சென்னையிலே வாழுகின்ற மக்கள் நன்றாக அறிவார்கள். சென்னை மாநகரத்திலே இருக்கின்ற ஆணையரை அணுகி குறைபாடுகளைப்பற்றிக் கேட்டால், அவர், "எங்களுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. இதை நீங்கள் வடிகால் வாரியத் தலைவரிடத்திலே சென்று கேளுங்கள். தண்ணீர் என்று சொன்னால் அதற்கு அவரைப் போய்ப் பாருங்கள்" என்று சொல்வார். இரண்டாகப் பிரித்ததனால் ஏற்பட்ட இப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றுவதற்காக ஒரு தனி அதிகாரியின் கீழே இதைக் கொண்டுவந்தால், இன்ன இடத்திலே சென்று இதை முறையிட்டால் இந்தக் காரியத்தை நல்லமுறையில் செய்யமுடியும் என்று அரசு கருதித்தான், இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறது. எந்த நோக்கோடு

(பிற்பகல் 4-40)

திருத்தம் கொண்டுவந்தாலும் களங்கம் கற்பிப்பது, அவதாறு சொல்வது என்பது வழக்கமாக இருக்கிறது. இது அரசியலிலே தவிர்க்க முடியாதது என்றாலும், இந்த நிலையைப் பொறுத்தவரையிலும், அரசு இதை மிகக் கவனத்தோடு கண்காணிக்க வேண்டும். ஏற்கெனவே இருந்த சென்னை மாநகர ஆணையர்—திரு. சிவப்பிரகாசம் என்று நான் கருதுகிறேன்—அரசுக்கு ஒரு குறிப்பை அனுப்பியிருக்கிறார். அது மாண்புமிகு அமைச்சர் அண்ணன் டாக்டர் காளிமுத்து அவர்களிடம் இருக்குமென்று நம்புகிறேன். மாநகராட்சி வாங்குகின்ற வரியிலே ஒரு பர்சென்டேஜ் தந்துவிட்டால், சென்னை

மாநகராட்சியோ அந்தக் காரியத்தை எடுத்துச் செய்துவிடும். அப்போது இந்த நிர்வாகச் சிக்கல் ஏற்படாது என்று நான் நம்புகிறேன். அதை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் டாக்டர் காளிமுத்து அவர்கள் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி சென்னை மாநகரத்திலே இந்தப் பிரச்சினை தீர்ந்தால், தினந்தோறும் இந்த அவையிலே கொசுக்கள் பிரச்சினை பற்றிப் பேசிக்கொண்டிருப்பதை நிச்சயமாகத் தவிர்க்க முடியும். ஆகையினால், இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்று, சென்னைக்கு இப்படிப்பட்ட காரியங்கள் ஆற்றுகின்ற நல்ல நிர்வாகத் திறமையுள்ள ஒருவரைப் போட்டு மாநகர மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் குறித்து, 1978-லே நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி ஏற்கெனவே ஒரு குழு அல்லது வாரியம் செயல்பட்டு வருகிறது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதன் கீழ் பல துணைக் குழுக்களும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அந்த வாரியக் குழுவிலே ஐ.ஏ.எஸ். அந்தஸ்து பெற்ற ஒரு அரசாங்கச் செயலாளர் ஒருவரும், நிதி இலாகா அதிகாரி ஒருவரும், எம்.எம்.டி.ஏ. செயலாளரும், அதிகாரப் பற்றற்ற சிலரும் அங்கம் வகிக்கிறார்கள். அவர்களுக்குத் துணை செய்கின்ற வகையிலே பல துணைக் குழுக்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏராளமான அதிகாரங்கள் இந்தக் குழுக்கள் கையிலே இருக்கின்றன. அவைகளை ஆழமாக ஆராய்ந்து பணியாற்ற வேண்டிய ஒரு அமைப்பின்கீழ் கடந்த 1978-லிருந்து இதுவரையிலே அதிகாரிகள் ஆற்றிய கடமைகளிலே, செயல்களிலே என்ன குறை, குற்றம் இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், தமிழ்நாட்டிலே ஏற்கெனவே ஏராளமான வாரியங்கள் இருக்கின்றன. அதிகாரப் பற்றற்றவர்கள் தலைவர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கொள்கை அடிப்படையிலே அதை நான் ஆட்சேபிக்கவில்லை; வரவேற்கிறேன். ஆனால் அதிகாரப்பற்றற்ற ஒருவரைத் தலைவராக நியமிப்பதன்மூலம் இதைவிட நடவடிக்கைகள் சீராகும் என்பதற்கு விளக்கங்களை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களேயானால், அது வரவேற்கத் தக்கது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அப்படி அவர்கள் சொல்வார்களேயானால், எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள், ஆளும் கட்சியிலே உள்ள ஒருவருக்கு ஒரு இடம் கொடுப்பதற்காகச் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டு நீக்கப்படுவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது.



இரண்டாவதாக நான் குறிப்பிட விரும்புவது, என்னுடைய எல்லை—அதாவது ஏரியா ஆஃப் ஆப்பரேஷன்—என்பதும், சென்னை கார்ப்பரேஷன் எல்லை என்பதும் ஏறக்குறைய ஒன்றாகத்தான் இருக்கிறது. கார்ப்பரேஷன் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள், தலைவர் இவர்கள் எல்லாம் அதிகாரப் பற்றற்றவர்கள் இருக்கின்ற காரணத்தினாலே, அப்படி ஒரு அதிகாரப் பற்றற்ற ஒருவர் தலைவராக வரவேண்டுமா என்பதற்கு சரியான முகாந்தரங்களை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களேயானால், இந்த அவை அதற்கு அனுமதி வழங்குவதிலே ஆட்சேபணை இல்லை என்று கூறி அமருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** அவைத் தலைவர் அவர்களே, கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவு இரண்டு திருத்தங்களை உள்ளடக்கி இருக்கிறது. ஒன்று உள்ளாட்சித் துறையினுடைய செயலாளர் தலைவர் என்கின்ற வகையிலே சட்டம் இருந்தது. இப்போது உள்ளாட்சித் துறை இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தாலே, அதிலே நகராட்சி நீர் வழங்கல் பொறுப்பைக் கவனிக்கின்ற செயலாளர் தலைவராக இருக்க வேண்டுமென்ற வகையிலே திருத்தம் செய்யப்படுகிறது. மற்றொன்று, மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப்போல் அலுவலர் அல்லாத ஒருவர் இதன் தலைவராக வருவதற்கு இந்தச் சட்டத் திருத்தம் வகை செய்கிறது.

(பிற்பகல் 4-45)

மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் திரு. கணேசன் அவர்கள் பேசும்போது, இந்தத் துறையில் இருக்கிற குறைகளைக் கோடிட்டுக்காட்டி அவைகள் களையப்பட வேண்டும் என்றும், சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்கள். அதற்காகப் பொதுக் கணக்குக் குழுவும், தணிக்கைக் குழுவும் வழங்கியுள்ள சில விவரங்களையெல்லாம் இங்கே எடுத்துத் தெரிவித்தார்கள். பொதுக் கணக்குக் குழு குறிப்பிட்ட திருவொற்றியூர் சம்பந்தப்பட்ட பிரச்சினையைப் பொறுத்தவரையில், அது இந்தச் சட்டத்தோடு, என் இந்த அமைப்போடு தொடர்பு அற்றது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அது குடிநீர் வடிகால் வாரியத்தின்கீழ் வருவது. இது சென்னைப் பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியத்தோடு தொடர்பானது. ஆயினும் அதுவும் என்னுடைய துறையின்கீழ் வருகிற காரணத்தால், அவர் தெரிவித்த கருத்துக்களை உரிய வகையில் ஆய்வுக்

கொள்கிறேன். பொதுக் கணக்குக் குழுவும் தணிக்கைக் குழுவும் ஒவ்வொரு துறைக்கும் வழங்குகிற அறிவுரைகள் தொடர்ந்து செயல்படுத்தக் கூடியனவும், தொடர்ந்து கவனிக்கக் கூடியனவுமாகும் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. ஒரு காரியம் தாமதமாகிறபோது அதன் மதிப்பீடு அதிகமாகிறது என்பதையும், ஆகவே அதை விரைந்து செய்ய வேண்டும் என்பதையும் நான் ஒப்புக் கொள்கிறேன். அந்தக் கண்ணோட்டத்தில்தான் இந்த அரசும் இருக்கிறது. அதைத்தான் திரு. கணேசன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அந்த வகையில் எந்த அளவுக்குத் தாமதம் தவிர்க்கப்பட வேண்டுமோ அப்படித் தவிர்ப்பதற்கு அரசு உரிய அறிவுரைகளை வழங்கும் என்றும், இந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் பேசும்போது, சென்னை மாநகராட்சி அமைப்பிலிருந்து இது பிரிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் ஏற்பட்டுள்ள நிர்வாகச் சிக்கல்களைச் சுட்டிக்காட்டினார்கள். அவர்கள் தெரிவித்ததைப்போல், உலக வங்கி போன்றவற்றில் கடன் பெற்று பொது மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் இந்தத் தனி அமைப்பே கொண்டு வரப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிர்வாகச் சிக்கல்கள் இருந்தால், அவற்றைச் சீர்செய்யத் தேவையான நடவடிக்கைகளை அரசு நிச்சயமாக மேற்கொள்ளும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அலுவலர் அல்லாத ஒருவர் தலைவராக வரவேண்டும் என்று சொல்லுவதற்குக் காரணம், மாநகராட்சியோடு உரிய வகையில் கூட்டுறவு வைத்துக் கொண்டு பொது மக்களுக்குப் பணியாற்ற இது பயன்படும் என்பதுதான். மக்களோடு தொடர்புள்ள எந்தத் துறையானாலும் அலுவலர் அல்லாத ஒருவர் இருப்பது பொதுமக்களுக்கே பயனளிக்கும் என்றுதான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். பொதுமக்களோடு தொடர்புள்ள பணி செய்யக்கூடிய ஒன்றுதான் இந்த அமைப்பு. அதுவும் தொடர்ந்து அன்றாடக் கடமையாகச் செய்ய வேண்டிய பணியாக இருப்பதால், இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலமாக அதற்கு வழி வகை செய்கிறோம் என்பதைக் கருத்தில் கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.



**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 10, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1935 ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1985) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 28—3—1985 வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 4-49)

## 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

140. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள்-சாராயக் கடைகள் (ஏலம் விடுதல்) விதிகளில் செய்யப்பட்ட திருத்தம் தொடர்பாக, மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 20—10—1984 ஆம் நாளிட்ட 1476 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) ஆம் பிரிவின்கீழ் அவையில் வைக்கப்படுகிறது].

141. ஈரோடு, கொடுமுடி, சிவகிரி ஆகிய அறிவிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து சில கிராமங்களை நீக்குவது குறித்து அறிவிப்பது தொடர்பாக வேளாண்மைத் துறையின் 18—1—1985 ஆம் நாளிட்ட 54 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின்கீழ் அவையில் வைக்கப்படுகிறது].

142. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழு ஒழுங்குமுறை விதிகளில் செய்யப்பட்ட திருத்தம் தொடர்பாக பணியாளர் நிர்வாகச் சீர்திருத்தத்துறையின் (பணியாளர்-எம்) 30—11—1982 ஆம் நாளிட்ட 1139 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) ஆம் பிரிவின்கீழ், அவையில் வைக்கப்படுகிறது].

143. கும்பகோணம், சோழன் பொறியியல் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பத்தாம் ஆண்டு அறிக்கை (ஆங்கிலத்தில் மட்டும்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) ஆம் பிரிவின்கீழ் அவையில் வைக்கப்படுகிறது].

144. சேலம், அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாம் ஆண்டு அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) ஆம் பிரிவின்கீழ், அவையில் வைக்கப்படுகிறது].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

* 63. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1985).

---

* 23—3—1985 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.



@ 64. 1985-86 ஆம் ஆண்டில் உடனடி செலவுக்கான மானிய அனுமதி (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

@ 65. 1985-86 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

## இணைப்பு I

(104 ஆம் பக்கத்தில் இனம் 2 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தேவனாம்பட்டினம் கடற்கரை கிராமம் கடலூரின் புதிய நகரத்தின் கிழக்கு பாகத்திலுள்ளது. அங்கு மாசி மகம் ஆண்டுதோறும் கொண்டாடப் பட்டு வருகிறது. அச்சமயம் பொதுமக்கள் கட்டுமரங்களை பயன்படுத்தி கடலில் சுற்றிப் பார்ப்பது வழக்கம். அதுபோன்று இவ்வாண்டும் 6—3—1985 அன்று மாசிமகம் கொண்டாடப்பட்டது. அன்று காலை 9.45 மணியளவில் 30 அடி நீளம், 9 அடி அகலமுள்ள 'கல்பனா' என்கிற இயந்திரப் படகை அதன் சொந்தக்காரரான தேவனாம்பட்டினத்தைச் சேர்ந்த திரு. மன்னாங் கட்டி என்பவர் சுற்றிப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். அவர் திரு. ஆறுமுகம் மற்றும் திரு. செல்வராஜ் ஆகிய இரண்டு படகு ஓட்டுநர்களை நிய மித்துள்ளார். காவல்துறை மற்றும் தேவனாம்பட்டினம் பஞ்சாயத்தார் ஆகி யோரின் எச்சரிக்கையையும் மீறி படகின் சொந்தக்காரர் தன் சகாக்களுடன் பொதுமக்களிடம் தலா நபருக்கு ஒரு ரூபாய் பெற்றுக்கொண்டு சுற்றிப்பார்ப்ப தற்காக படகில் அழைத்துச் சென்றுள்ளார். அப்படகில் மொத்தம் 100 பேர் இருந்ததாகக் கூறப்படுகின்றது. படகு கடலூர் துறைமுகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது கடலில் 1½ கிலோ மீட்டர் தூரத்தில் படகின் இயந்திரத்தில் ஏதோ கோளாறு ஏற்பட்டு ஓட்டம் தடைபட்டிருக்கிறது. படகின் சொந்தக்காரர் படகில் புகுந்த நீரை வெளியேற்ற கைப்பம்பை பயன் படுத்தியிருக்கிறார். அவர் அப்படி நீரை வெளியேற்றிக் கொண்டிருக்கும் போது கைப்பம்பு இருந்த பலகையின் ஒரு பகுதி கடலில் விழுந்திருக்கிறது. எனவே தண்ணீர் படகில் புகுந்து விட்டிருக்கிறது. அதைப் பார்த்தவுடன் பம்பின் பக்கத்திலிருந்த பொதுமக்கள் படகின் மறு பக்கத்திற்கு விரைந்திருக் கின்றனர். அதன் காரணமாக படகின் மறு பக்கத்தில் பாரம் அதிகமாகவே படகு கவிழ்ந்துவிட்டது.

2. இவ்விபத்தை பார்த்தவுடன் சோனாங்குப்பத்தைச் சேர்ந்த மீனவர்கள் கட்டுமரங்களில் விரைந்து சென்று சுமார் 50 பேரை மீட்டிருக்கின்றனர். படகில் இருந்த எஞ்சியுள்ள மக்களை காப்பாற்ற முடியாமல் போய்விட்டது.

---

@ 26—3—1985 அன்று மேலவை முன் வைக்கப்பட்டது.

இவ்விபத்து தெரிய வந்தவுடன் மாவட்ட மருத்துவ அலுவலரின் கீழ் மருத்துவர் குழு ஒன்று சம்பவ இடத்திற்கு விரைந்து மருத்துவ உதவி புரிந்துள்ளனர். மாவட்ட ஆட்சியாளர், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர், மாவட்ட தீயணைப்பு அலுவலர், வட்டாட்சியர், துறைமுக அலுவலர், காவல் துறை உதவி இயக்குநர், மின்துறை ஆகியோர் விரைந்து மீட்புப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். அரசுக்கு தகவல் பெறப்பட்டு மீட்புப்பணிக்காக 6—3—1985 அன்று ஹெலிகாப்டர் அனுப்பி வைக்கப்பட்டது. அனைத்து துறைமுக அலுவலர்கள், தீயணைப்புத் துறை, காவல் துறை, வருவாய் மற்றும் பிற துறைகளைச் சேர்ந்த அனைத்து அலுவலர்களும் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளின் பேரில் 6—3—1985 அன்று 13 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிகளில் மீனவர்களும் ஈடுபட்டனர். உடல்கள் கிடைக்கப்பெற்றவுடன் அடையாளம் கண்டு உறவினர்களுக்கு தெரிவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 6—3—1985 அன்று மீட்கப்பட்ட 13 உடல்களும் பிரேத பரிசோதனைக்குப் பின் அடையாளம் கண்டு உறவினர்களிடம் சேர்க்கப்பட்டு விட்டன. விபத்தில் உயிர் தப்பிய 6 பேர்களுக்கு கடலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டது.

3. அரசின் ஹெலிகாப்டரும், இந்திய கடற்படையின் கப்பலொன்றும் 7—3—1985-ல் மீட்புப் பணியை மேற்கொண்டன. அதன் பயனாக மேலும் 23 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் 53 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் 22 ஆண்கள், 20 பெண்கள், 5 சிறுவர்கள், 6 சிறுமிகள். இன்னும் 2 உடல்களின் அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் உள்ளன. அவைகளையும் அடையாளம் கண்டுபிடிக்க செய்தித்தாள்கள் மூலமாக தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

4. இவ்விபத்தில் மரணமடைந்த ஒவ்வொருவருக்கும் ரூ. 2,000 என்ற விகிதத்தில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. இதுவரை ரூ. 1,04,000 நிதி உதவி வழங்கியுள்ளதாக மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார்.

5. இவ்விபத்து குறித்து கடலூர் துறைமுக காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 304 (A)-ன் கீழ் குற்ற எண் 23/85—பதிவு செய்யப்பட்டது. விசாரணைக்குப்பின் இவ்வழக்கு இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 282 மற்றும் 304 (ii) ஆக மாற்றப்பட்டு விசாரணையில் உள்ளது.



6. மீட்புப் பணிகள் அவசரகால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி காலதாமதமின்றி வழங்க அரசின் ஆணையின்பேரில் மாவட்ட ஆட்சியாளர் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார். அரசு மேற்கொண்ட மீட்புப் பணிகள் மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து எவ்வித குற்றச்சாட்டும் எவரிடமிருந்தும் பெறப்படவில்லை. இவ்விபத்து குறித்து சட்ட ஒழுங்கு பிரச்சினை எதுவும் இல்லை.

## இணைப்பு II

(107 ஆம் பக்கத்தில் இனம் 2 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

பின்தங்கிய பகுதிகளில் உள்ள பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கென்று 1978-ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட வட்டியில்லா விற்பனை வரிக் கடன் திட்டம் 1978-ம் ஆண்டில் சிறு தொழில்களுக்கும் அமல்படுத்தப்பட்டது. 31—3—1980 நாளிட்ட அரசு ஆணை எண் 560 தொழில் இத்திட்டம் எளிதாக்கப்பட்டு ஆண்டுக்கு ரூ. 4,000-க்கு குறையாமல் விற்பனை வரி செலுத்தும் புதிய சிறு தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்கப்பட்டது. இக்கடன் மொத்த நிலையான சொத்தில் 8 சதவிகிதம் அல்லது ஆண்டுக்கு 1.25 இலட்சம் இவற்றில் எது குறைவோ அத்தொகை உற்பத்தி தொடங்கப்பெற்ற முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் விற்பனை வரிக்கடனாக வழங்கப்பட்டு வந்தது.

பெரிய மற்றும் நடுத்தர தொழில்களுக்கென்று செயல்படுத்தப்பட்டு வந்த வட்டியில்லா விற்பனை வரிக் கடன் திட்டம் 3—10—1981 நாளிட்ட அரசு ஆணை எண் 1364-ல் எளிதாக்கப்பட்டது. இதன்படி மொத்த நிலையான சொத்தில் 20 சதவிகிதம் அல்லது ரூ. 20 இலட்சம் இவற்றில் எது அதிகமோ அத்தொகையை உச்ச வரம்பாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டிலும் விற்பனை வரிக்கடனாக ஆறு ஆண்டுகளுக்கு வழங்கப்படும். ஆறு ஆண்டுகளுக்குமான மொத்தக்கடனில் அதிகபட்ச வரம்பு ரூ. 1 கோடி. வட்டியில்லா விற்பனை வரிக்கடன் திட்டம் உட்பட எளிதாக்கப்பட்ட திட்டங்கள் சிறு தொழில்களுக்கும் பொருந்தும் என்று அரசு கடித எண் 15954/எம்.ஐ.பி./2-3, நாள் 11—11—1982-ல் விளக்கமளிக்கப்பட்டது.

சிறு தொழில்களுக்கென எளிதாக்கப்பட்ட திட்டத்தின் கீழ், ஏற்கனவே சிறு தொழில்களுக்கென்று உள்ளதுபோல் மூன்று ஆண்டுகளுக்கு வட்டியில்லா விற்பனை வரிக்கடன் அளிக்க வேண்டுமா அல்லது பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு என்று உள்ளதுபோல் ஆறு ஆண்டுகளுக்கு அளிக்கவேண்டுமா என்பதுபற்றி சிட்கோ நிறுவனம் மேலும் விளக்கம் கேட்டது. இந்த விசயம் பரிசீலிக்கப்பட்டு, எளிதாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் நிலையான சொத்தின்

மதிப்பில் 20 சதவிகிதம் அல்லது ரூ. 20 இலட்சம் இவற்றில் எது அதிகமோ அத்தொகையை முன்னொரு ஆண்டில் வட்டியில்லா விற்பனை வரிக் கடனாகப் பெற சிறு தொழில்கள் தகுதியுடையனவாகும் என்று அரசு ஆணை 3517வ/ வணிஇ. 2/84-3, நாள் 1—6—1984-ல் வெளியிடப்பட்டது. சிறு தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக்கடன் கொடுக்கப்படும் கால அளவை தற்போதுள்ள மூன்று ஆண்டுகள் என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும் பிட்கோ நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டது. மேலும் பிட்கோ நிறுவனத்தின் பரிந்துரையின் பேரில் பெருந்தொழில்களுக்கென்று உள்ளது போல் சிறு தொழில்களுக்கு இச்சலுகையை ஆறு ஆண்டுகளுக்கு நீட்டிப்பது சம்பந்தமான கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

இந்த பாராவில், கடன் அளவு சம்பந்தமான விவரத்தை பரிசீலித்து, பழைய விதிகளின்படி வட்டியில்லா விற்பனை வரிக் கடனை பிட்கோ நிறுவனம் வழங்கி வருகின்றது. இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பழைய விதிகளின்படி 1980-81 ஆம் ஆண்டிலிருந்து 1984-85 ஆம் ஆண்டுவரை (1985 பிப்ரவரி வரை) 106 நிறுவனங்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக் கடனாக பிட்கோ நிறுவனம் ரூ. 83.31 இலட்சம் வழங்கியுள்ளது. தற்போது ஆண்டிற்கு நிலையான சொத்தின் மதிப்பில் 20 சதவிகித தொகை வரை மூன்று ஆண்டு காலத்திற்கு இக்கடனை வழங்க பிட்கோ நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

## இணைப்பு III

(115 ஆம் பக்கத்தில் இனம் 5-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### L.A. Bill No. 16 of 1985.

(As passed by the Assembly)

*A Bill to amend the Madras Metropolitan Water Supply and Sewerage Act, 1978.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras Metropolitan Water Supply and Sewerage (Amendment) Act, 1985.

(2) Sections 2 and 9 shall be deemed to have come into force on the 6th July 1984 and the rest of this Act shall come into force on such date as the State Government may, by notification appoint.

(b) in clause (*e*), for the words "in the case of nomination as a non-official director", the words "in the case of appointment as a non-official Chairman or nomination as a non-official director" shall be substituted;

(iii) in sub-section (2), for the words "If a whole-time director", the words "If the non-official Chairman or a whole time director" and for the words "such director", the words "such Chairman or director" shall be substituted.

6. *Amendment of section* 15, *Tamil Nadu Act 28 of 1978.*—In section 15 of the principal Act,—

(i) for the heading, the following heading shall be substituted, namely :—

"Removal of non-official Chairman and directors";

(ii) in sub-section (2),—

(*a*) in the opening portion, for the words "remove any non-offical director", the words "remove the non-official Chairman or any non-official director" shall be substituted;

(*b*) in clause (*b*), for the words "as a director", in the two places where they occur, the words "as Chairman or director" and for the words "such director", the words "such Chairman or director" shall be substituted;

(iii) in sub-section (3), for the words "A non-official director", the words A non-official Chairman or a non-official Director and for the words "appointment as a director", the words "appointment as the Chairman or a director" shall be substituted;

(iv) in sub-section (4), for the words "A non-official director", the words "A non-official Chairman or a non-official director" shall be substituted.

7. *Amendment of section* 18, *Tamil Nadu Act 28 of* 1978.—In section 18 of the principal Act,—

(i) in sub-section (2), the words "the Managing Director and in the absence of both" shall be omitted;

(ii) in sub-section (8), after the expression "or clause (*d*) of section 4" the expression "or in sub-section (2) of section 4-A shall be inserted.

2. *Amendment of section 4, Tamil Nadu Act 28 of* 1978.—In section 4 of the Madras Metropolitan Water Supply and Sewerage Act, 1978 (Tamil Nadu Act 28 of 1978) (hereinafter referred to as the principal Act), for clause (*a*), the following clause shall be substituted, namely :—

"(*a*) the Secretary to Government in-charge of the department dealing with the subject "water-supply", who shall be the Chairman of the Board, *ex-officio* ;".

3. *Insertion of new section 4-A in Tamil Nadu Act 28 of 1978.*— After section 4 of the principal Act, the following section shall be inserted, namely :—

"4-A. *Appointment of non-official Chairman.*—(1) Notwithstanding anything contained in section 4, the Government may, if they think fit so to do in the public interest, by notification, appoint a non-official as the Chairman of the Board.

(2) Where a non-official is appointed as Chairman of the Board under sub-section (1), the Secretary to Government in-charge of the department dealing with the subject "water-supply" shall thereafter functions as a director of the Board, *ex-officio.*".

4. *Insertion of new section 11-A in Tamil Nadu Act 28 of* 1978.— After section 11 of the principal Act, the following section shall be inserted, namely :—

"11-A. *Term of office and conditions of service of the Chairman.*—The term of office and the terms and conditions of service of the non-official Chairman appointed under section 4-A and the manner of filling casual vacancies in the office of the non-official Chairman shall be such as may be prescribed.".

5. *Amendment of section 14 of Tamil Nadu Act 28 of* 1978.—In section 14 of the principal Act,—

(i) in the heading, for the words "appointment as director" the words "appointment as non-official Chairman or as director" shall be substituted ;

(ii) in sub-section (1),—

(*a*) in the opening portion, for the words "appointed as whole time director", the words "appointed as non-official Chairman or as whole time director" shall be substituted ;





8. *Insertion of new section 78-A in Tamil Nadu Act 28 of* 1978.— After section 78 of the principal Act, the following section shall be inserted, namely :—

"78-A. *Removal of disqualification.*—No person shall be disqualified for being chosen as, or for being, a member of the Legislative Assembly or of the Legislative Council by reason only of the fact that he is a Chairman or a director of the Board.".

9. *Validation.*—Any meeting of the Madras Metropolitan Water Supply and Sewerage Board or of any Committee thereof held during the period commencing on the 6th day of July 1984 and ending with the 13th day of September 1984, in which the Secretary to Government, Municipal Administration and Water Supply Department had participated as Chairman of the said Board, shall for all purposes be deemed to be and to have always been, validly held in accordance with law, as if the principal Act as amended by section 2 of this Act had been in force at all material times and the Secretary to Government, Municipal Administration and Water Supply Department had been the Chairman of the said Board, during the said period and any act done or decision taken or proceeding conducted in such meeting shall not be liable to be questioned in any court of law.

10. *Repeal and saving.*—(1) The Madras Metropolitan Water Supply and Sewerage (Second Amendment) Ordinance, 1984 (Tamil Nadu Ordinance 22 of 1984) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# அதிகாரபூர்வமான வெளியீடு
# OFFICIAL REPORT


வியாழக்கிழமை, மார்ச் 28 , 1985—தொகுதி 213 - எண் 3

Thursday 28th March 1985—Volume 213 - No. 3

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

# பொருளடக்கம்


பக்கங்கள்

அறிவிப்புகள்— 135

(1) ஆளுநரிடமிருந்து செய்தி .. .. 135—136

(2) பேரவையிலிருந்து செய்தி .. ..

கவன ஈர்ப்பு—

(1) நிதித் துறையின் 14-6-1984 ஆம் நாளிட்ட 397-ஆம் எண் அரசாணையில் குறிப்பிட்டுள்ள சலுகைகள் அரசின் நிதி யுதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரி களின் ஒய்வூதியம் பெறும் ஆசிரியர்களுக்கு நீட்டிக்கப் படாதது குறித்து .. .. 136—138

(2) சென்னை மெரினா கடற்கரையில் அமைந்திருக்கும் அண்ணா நீச்சல் குளத் தில் உயிர்களை பலி வாங்கக்கூடிய பாயங்கள் நிறைந்திருந்தும் பழுது பார்க்கப்படாத காரணத்தினால் அண் மையில் இந்த நீச்சல் குளத்தில் நீந்திச் செல்வோரில் சிலர் மூழ்கி இறந்து போனது குறித்து .. .. .. 138—140, 143

உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தியோரா வது அறிக்கை அளித்தல் .. .. 140

...ன் சட்ட முன்வடிவுகள்—

(1) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக் கம் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1985. 140—142

(2) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதிஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்ட மன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1985) .. .. .. 142—143


D 2 C 7—1

ii

பக்கங்கள்

(3) தமிழ் நாடு 1985-ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1985 .. .. .. .. .. 144—14

(4) தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு பொது விற்பனைவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1985) .. .. .. 147—14

(5) தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1985) .. .. 149—15

5 அரசின் தீர்மானம்-

அலுவல் வரிசையில் மாற்றம் .. .. 1

6 அவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.. .. 1—1

143944

V2.11, ...

2448

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1985 மார்ச் 28.

பங்குனி 15, ரக்தாக்ஷி, திருவள்ளுவராண்டு-2016.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 1. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் அவர்கள் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள் :—

(1) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு.

(2) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு.

### (2) பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு அரசியலமைப்பு சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிடப்பட்ட கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :—

(1) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1985).

(2) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1985).

(3) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1985).

(4) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1985).

(5) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (பேரவை உறுப்பினர் மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1985).

2. கவன ஈர்ப்பு.

(1) நிதித் துறையின் 14—6—1984 ஆம் நாளிட்ட 397 ஆம் எண் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகள் அரசின் நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்களுக்கு நீட்டிக்கப்படாதது குறித்து.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பின்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன் :—

"நிதித் துறையின் 14—6—1984 ஆம் நாளிட்ட 397 ஆம் எண் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகள் அரசின் நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்களுக்கு நீட்டிக்கப்படாதது குறித்தும், இதனால் ஏற்பட்டுள்ள அதிருப்திகள் மற்றும் பாதிப்பு குறித்தும்."

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவையின்முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசிடம் உதவி பெறக்கூடிய தனியார் கல்லூரிகள், பள்ளிகள், நகராட்சி, மாநகராட்சி ஆகியவற்றில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் அரசு தளர்த்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கியமைக்கு ஆசிரியர் சமுதாயத்தின் சார்பில் நன்றியையும், வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே 1984 ஆம்

---

@ 152 ஆம் பக்கங்களில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பட்டுள்ளது.



ஆண்டு ஜூன் மாதம் இந்தச் சலுகை அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு விட்டது. இப்போது ஒன்பது மாத காலம் ஆகிவிட்டது. அவர்களுக்கென்று 'ரெடி ரெக்கனர்' தயாரிக்கப்பட்டு அதன்மூலம் நிலுவையைக்கூட பெற்றிருக்கிறார்கள். அப்படியென்றால், கல்வித் துறையிலே ஓய்வு பெற்றவர்களுக்கு தளர்த்தப்பட்ட ஓய்வூதியம் வழங்க 'ரெடி ரெக்கனர்' எப்போது தயாரிக்கப்படும்? அப்படி தயாரிக்கப்பட்டுவிட்டால் எப்போது அதை வழங்கவிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசாணை (நிலை) எண் 240, கல்வி, நாள் 14—3—1985-ன்படி ஓய்வூதியத்தை மறு கணக்கிடு செய்வதற்கென தயார் நிலை கணிப்புச்சுவடி (ready reckoner) ஒன்று தயார் செய்து அச்சிடுவதற்காக அரசு அச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அச்சிடப்பட்டவுடன் இதன் நகல்கள் அனைத்துக் கருவூல அலுவலகங்களுக்கும் அனுப்பப்படும். அதற்குப் பின் மனுதாரர்களின் விண்ணப்பங்களை கருவூல அலுவலகங்கள் பரிசீலனை செய்து அவர்களுக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகைகளை கணக்கிட்டுக் கொடுக்க ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட இந்தச் சலுகை ஒன்பது மாத கால தாமதத்திற்குப் பிறகு தனியார், நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள், அலுவலர்கள் ஆகியவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஓய்வூதியத்தைப் பொறுத்தவரையில், அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகிற எந்தச் சலுகையாக இருந்தாலும், மற்றவர்களுக்கும் வழங்கப்படுகிற நடைமுறை கடந்த காலத்திலேயிருந்து வந்திருக்கிறது. ஆகவே இதுபோன்ற சலுகையை வழங்கும்போது, இனிமேல் காலதாமதத்தைத் தவிர்க்கும் வகையில், ஒரே ஆணையில் அரசு ஊழியர்கள், தனியார் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்கள், அலுவலர்கள், நகராட்சி, மாநகராட்சி ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகிய எல்லோருக்கும் பொருந்தும்படியாக வெளியிட்டால், அவர்கள் பாதிப்புக்குள்ளாவதைத் தவிர்க்க வழிவகை பிறக்கும். அத்தகைய முடிவை அரசு செய்யுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1985 மார்ச் 28

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு ஆசிரியர்களுக்குத் தரப்படுகிற சலுகைகளை தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் தர வேண்டும் என்பது அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும், வேறு சில வித்தியாசங்கள் இரு சாராருக்கு மிடையே இருந்து வருகின்றன. ஆகவே அரசு ஊழியர்களுக்கு ஒரு உத்தரவு போடுகிறபோது, வித்தியாசங்கள் அடிப்படையில் ஆராயாமல் ஒரே உத்தரவாகப் போட்டால்—இப்போது காலதாமதம் மட்டும் ஏற்படுகிறது—பிறகு வேறு சில சிரமங்கள் ஏற்பட்டுவிடும். ஆகவே பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்கள் அதைச் செய்கிறார்கள். கூடுமானவரைக்கும் அவர்களுக்குக் கிடைக்கின்றபோதே இவர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-05)

**(2) சென்னை மெரினா கடற்கரையில் அமைந்திருக்கும் அண்ணா நீச்சல் குளத்தில் உயிர்களை பலிவாங்கக்கூடிய அபாயங்கள் நிறைந்திருந்தும் பழுது பார்க்கப்படாத காரணத்தினால் அண்மையில் இந்த நீச்சல் குளத்தில் நீந்திச் செல்வோரில் சிலர் மூழ்கி இறந்து போனது குறித்து.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :—

"சென்னை மெரினா கடற்கரையில் அமைந்திருக்கும் அண்ணா நீச்சல் குளத்தில் உயிர்களை பலிவாங்கக்கூடிய அபாயங்கள் நிறைந்திருந்தும் பழுது பார்க்கப்படாத காரணத்தினால் அண்மையில் இந்த நீச்சல் குளத்தில் நீந்திச் செல்வோரில் சிலர் மூழ்கி இறந்து போனதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து."

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டிருக்கிறது.

@ 153-154 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1985 மார்ச் 28]

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் இனிமேல் இத்தகைய விபத்துக்கள் நடக்காமலிருப்பதற்காக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது. இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த காலத்தில் இப்படி மரணங்கள் ஏற்பட்டிருப்பதற்குக் காரணமே முதலுதவிச் சாதனங்கள் அந்த நீச்சல் குளத்தில் இல்லை என்றும் 25 அடி முதல் 30 அடி ஆழமுள்ள பல ஆழமான தொட்டிகள் பாசி பிடித்து அதிலே பலர் சிக்கிக்கொள்ளக்கூடிய ஆபத்துகள் இருக்கின்றன என்றும், குளத்துநீரை சுத்தப்படுத்த தேவையான குளோரின் சிலிண்டர்கள் தேவையான அளவுக்கு அங்கே வழங்கப்படுவதில்லை என்றும் சொல்லப்படுகின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் காரணங்களைப் பரிசீலித்து இந்தக் குறைகளைப் போக்குவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுப்பார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இங்கே தரப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் அத்தகைய சூழ்நிலைகள் அங்கே இருப்பதாகத் தெரியவில்லை. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது உரிய பரிசீலனை செய்து உரியவைகளைச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உயிர் காப்பாளர்களாக அங்கே நியமிக்கப்பட்டிருப்பவர்கள் பெரும்பாலும் மீனவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஒரு நாள் கூலியாக நான்கு ரூபாய்தான் கொடுக்கப்படுகின்றது. அந்த நான்கு ரூபாய் கூலி போதுமானதாக இல்லை என்பதால், அவர்கள் அந்தப் பணியை அலட்சியப்படுத்துகின்றார்கள். அத்தகைய அலட்சியப் போக்கின் காரணமாக, அங்கே இத்தகைய விபத்துக்கள் நிகழ்கின்றன. இந்தக் குறைகளை நீக்க உயிர் காப்பகங்களுக்குக் கொடுக்கின்ற அந்த தினக்கூலியை உயர்த்திக் கொடுத்து, அவர்களுக்குப் பணி சம்பந்தமான விதிமுறைகளை, நெறி முறைகளை வைத்து அவர்கள் அவற்றைக் கடைப்பிடிக்கச் செய்ய வேண்டும். அவர்கள் தவறு செய்தால், அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கக்

கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும். அப்படி ஒரு முடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா? குறிப்பாக அவர்களுக்குக் கொடுக்கப்படும் தினக்கூலியை உயர்த்திக் கொடுக்க பரிசீலனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சிவா அறிக்கையில் சொன்னபடி, இந்த உயிர் காப்பாளர்களுக்கு உரிய முதலுதவிப் பயிற்சி வழங்கப்படும் என்பதும், அவர்கள் அமர்வதற்கு உரிய இடங்கள் ஏற்பாடு செய்யப்படும் என்பதும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது நீங்கலாக, அவர்களுக்குத் தரப்படுகின்ற சம்பளம் நியாயமானதா இல்லையா என்பதை அரசு பரிசீலித்து, தேவையாக இருப்பின், உரிய சம்பள உயர்வு தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தியோராவது அறிக்கையை அளித்தல்.

**திரு. பா. ரா. தாமல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்களின் சார்பில், அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தியோராவது அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.

## 4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

### (1) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1985).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1985 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1985) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1985) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1985 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1985) திருப்பி அனுப்பப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1985 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1985) திருப்பி அனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 4-10)

## 5. அரசின் தீர்மானம்.

### அலுவல் வரிசையில் மாற்றம்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"மேலவை விதி 21 (3)-ன்கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள சட்ட முன்வடிவுகளில் இனம் 5-ஐ இனம் 2-க்கு முன்பாக எடுத்துக் கொள்ள வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 155-157 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1985 மார்ச்

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 21 (3)-ன்கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் [illegible] பெற்றுள்ள சட்ட முன்வடிவுகளில் இனம் 5-ஐ இனம் 2-க்கு முன்பாக எடு[illegible] கொள்ள வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்ட[illegible]

4. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(2) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்[illegible] மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட[illegible] வடிவு எண் 21/1985).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேல[illegible] தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1985 [illegible] ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) [illegible] முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1[illegible] பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1985 [illegible] ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) [illegible] முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1[illegible] பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்ட[illegible]

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்[illegible] பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

@ 158-160 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டு[illegible]



1985 மார்ச் 28]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1985 திருப்பி அனுப்பப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1985 திருப்பி அனுப்பப்படவேண்டும்.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

2(2) கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்களின் விளக்கம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் தான் எற்கெனவே சொன்னது பற்றி ஒரு விளக்கம் தருகிறார்.

மாண்புமிகு யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உயிர் காப்பாளர்களுக்கு தினம் ஒன்றுக்கு நான்கு ரூபாய் சம்பளம் தருவது நியாயமற்றது என்று குறிப்பிட்டுள்ளார்கள். தற்போது உயிர் காப்பாளர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் நான்கு ரூபாயல்ல. ஒரு நாளைக்கு 18 ரூபாய் கொடுக்கப்படுகிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**4. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.**

**(3) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1985).**

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு, கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1985) பரிசீலனை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு, கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1985) பரிசீலனை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

(மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச விரும்புகின்ற உறுப்பினர்கள் தங்களுடைய பெயர்களைக் கொடுத்திருந்தால், இன்னின்னார் பேசுகிறார்கள் என்று தெரிந்திருக்கும். சாதாரணமாக இதுபோன்ற சட்ட முன்வடிவுகளில் யாரும் பேசுவதில்லை.

